**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலாமத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த பாவாலக்குறிச்சி, உப்புக்கோட்டை, மீனாட்சிபுரம் ஆகிய கிராம மக்கள் பக்கத்திலுள்ள ஆனைக்குட்டத்திற்கு 4 கி.மீ. தூரம் பயணம் செய்து ரேஷன் பொருட்களை வாங்கி வருகின்றனர். மேற்கு மீனாட்சிபுரம் கிராமத்திலேயே பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க முடிந்தால், இந்திராநகர், மீனாட்சிபுரம், எம். மீனாட்சிபுரம், உப்புக்கோட்டை, பாவாலக்குறிச்சி மற்றும் அருந்ததியர் காலனியைச் சேர்ந்த 295 மக்கள் அதனால் பயனடைவார்கள். அதனால் மேற்கு மீனாட்சிபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை துறை ரீதியாக பரிசீலிக்கப்பட்டு, உரிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.





**83—**

## புறவழிச் சாலை

***29255—திரு. ஆர். அருள்செல்வன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகருக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணிகளை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரத்திற்கு புறவழிச் சாலை அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் எடுக்கும் பணி கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்துகொண்டிருப்பதாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை. மேலும், இந்தத் திட்டத்திற்கான நிதி போதுமான அளவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதா? இதில் மத்திய அரசின் பங்கு எவ்வளவு என்பதை பேரவைத் தலைவர்வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 19

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக 16.88 கி.மீ. நீளத்திற்கு நிலம் கையகப்படுத்தும் பணி ரூ.2.07 கோடி செலவில் மேற்கொள்ள 13-7-2013 அன்று நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி புறவழிச் சாலை அமைப்பதற்கு 12 கிராமங்களிலிருந்து மொத்தம் 48.92.24 எக்டர் நிலத்தை கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்தவுடன் புறவழிச் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல நிலம் கையகப்படுத்தும் பணி என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஆகவே, நிலம் எடுக்கும் பணி முடிவடைந்தவுடன் விரைவில் புறவழிச் சாலை அமைக்கும் பணி தொடங்கப்படும் என்பதை பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.*

**திரு. ஆர். அருள்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி நகரில் செய்யாறு-ஆரணி, வந்தவாசி-ஆரணி, சேத்துப்பட்டு-ஆரணி, போளூர்-ஆரணி, தேவியாறு-ஆரணி ஆகிய சாலைகளை இணைத்து புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா என பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றபட்சத்தில், அதனை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2014 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**84—**

## தொழிற்சாலை

***36403—திரு. ப. டில்லி பாபு:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரூர் தொகுதி, அரூரில் மாலிப்டினம் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தருமபுரி மாவட்டம், அரூர், ஊத்தங்கரை பகுதிகளில் மாலிப்டினம் தாதுவை வெட்டி எடுத்து வியாபார ரீதியில் உற்பத்தி செய்வது தொடர்பாக இந்திய புவியியல் ஆய்வுக் கழகத்தின் இறுதி ஆய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றபின், அதற்குரிய தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு விரிவான தொழில்நுட்ப பொருளாதார ஆய்வு அறிக்கை தயாரித்து, அங்கு ஒரு தொழிற்சாலை அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை. வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)*

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

[2014 பிப்ரவரி 19

## 2. விதி 110—ன்கீழ் அறிக்கை

### முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய அமைச்சரவை முடிவு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையில் விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 21-5-1991 அன்று ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தபோது படுகொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை குறித்த வழக்கு பூந்தமல்லி தடா நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. தடா நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் நளினி, ஸ்ரீஹரன் என்கிற முருகன், சுதேந்திர ராஜா என்கிற சாந்தன், பேரறிவாளன் என்கிற அறிவு ஆகிய நான்கு பேரின் தூக்குத் தண்டனையை உறுதி செய்தும், மூன்று பேரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தும், மீதமுள்ள 19 பேரை விடுதலை செய்தும் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 4 நபர்களும் உச்ச நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்தனர். இந்த மறு ஆய்வு மனுவினை விசாரித்த உச்ச நீதிமன்றம் அதனைத் தள்ளுபடி செய்து 8-10-1999 அன்று தீர்ப்பளித்தது.

இதனைத் தொடர்ந்து, மேற்கண்ட தூக்குத் தண்டனைக் கைதிகள் மேதகு தமிழக ஆளுநர் அவர்களுக்கு 17-10-1999 அன்று கருணை மனுக்களை சமர்ப்பித்தார்கள். இந்தக் கருணை மனுக்கள் 27-10-1999 அன்று மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் நிராகரிக்கப்பட்டன.



2014 பிப்ரவரி 19] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் ஆணையினை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் தூக்குத் தண்டனை கைதிகளால் வழக்குகள் தொடுக்கப்பட்டன. இவற்றை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், மனுதாரர்கள் தொடுத்த வழக்குகளை ஏற்று, கருணை மனுக்களை நிராகரித்த மேதகு ஆளுநரின் ஆணையைத் தள்ளுபடி செய்ததோடு, அமைச்சரவையின் ஆலோசனையைப் பெற்று புதிய ஆணை பிறப்பிக்குமாறு மேதகு ஆளுநருக்கு 25-11-1999 அன்று உத்தரவு பிறப்பித்தது.

சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி அன்றைய முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தலைமையில் 19-4-2000 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டது:-

"தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட நான்கு கைதிகளில் ஒருவரான நளினியின் பெண் குழந்தை அனாதையாகிவிடும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்திற்கிணங்க, நளினி ஒருவருக்கு மட்டும் கருணை காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்றும்; மற்றவர்களைப் பொறுத்தவரையில், அவர்களது கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை முடிவெடுத்தது."

திரு. கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையின் முடிவிற்கு மேதகு ஆளுநர் அவர்கள் 21-4-2000 அன்று ஒப்புதல் அளித்தார். அதன்படி தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நான்கு நபர்களில், சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரது தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

திரு. கருணாநிதி தலைமையிலான அமைச்சரவை முடிவினால் பாதிக்கப்பட்ட சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகிய மூன்று பேரும் மேதகு குடியரசுத் தலைவருக்குக் கருணை மனுக்களை அளித்தனர். இந்தக் கருணை மனுக்களை 28-4-2000 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது.

28-4-2000 அன்று தமிழக அரசால் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின்மீது 11 ஆண்டுகளாக எவ்வித

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 19

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பின்னர், 12-8-2011 நாளிட்ட கடிதத்தின்மூலம் மேதகு இந்திய குடியரசுத் தலைவர் இந்தக் கருணை மனுக்களை நிராகரித்து உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்த மத்திய உள் துறை அமைச்சகம், இந்தத் தகவலை மேற்கண்ட கைதிகளுக்குத் தெரியப்படுத்துமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொண்டது. இதன் அடிப்படையில், இந்தக் கடிதத்தின் விவரம் சம்பந்தப்பட்ட கைதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

முற்பகல் 10-25

இந்தச் சூழ்நிலையில், பேரறிவாளன், சாந்தன் மற்றும் முருகன் ஆகிய மூன்று பேரையும் தூக்குத் தண்டனையில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. பல்வேறு அரசியல் கட்சிகளும், பல்வேறு அமைப்புகளும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தின. தனது மகன் பேரறிவாளனை விடுவிக்குமாறு அவரது தாய் திருமதி அற்புதம் அம்மாள் அவர்கள் என்னை கடிதம்வாயிலாகக் கேட்டுக் கொண்டார். மேற்படி மூவரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க முடியாது என்று தனது தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்த முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியும், சட்ட நுணுக்கங்களை ஆராயாமல், இவர்களைக் காப்பாற்ற நான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பத்திரிகைகள் வாயிலாக வேண்டுகோள் விடுத்தார்.

29-8-2011 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில், திரு. கருணாநிதியின் இரட்டை வேடத்தை நான் தோலுரித்துக் காட்டினேன். மேலும், உச்ச நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மேதகு ஆளுநரோ அல்லது மேதகு குடியரசுத் தலைவரோ தான் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மன்னிப்பு அளிக்க முடியும் என்பதையும்; இவர்களுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் மன்னிப்பு அளிக்க வேண்டும் எனக் கருதப்பட்டிருந்தால், 2000 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்தான் அதற்கான முடிவெடுத்திருக்க முடியும்; எடுத்திருக்க வேண்டும் என்பதையும்; அமைச்சரவையின் அறிவுரைப்படி மேதகு ஆளுநர் அவர்களால் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு, பின்னர் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களாலும் மூவரின் கருணை



2014 பிப்ரவரி 19] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், தூக்குத் தண்டனையை இரத்து செய்வதற்கோ, நிறுத்தி வைப்பதற்கோ மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதையும் எடுத்துக் கூறினேன். அதாவது, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், மீண்டும் அதே பொருள் தொடர்பான கருணை மனுவை மாநில ஆளுநர் பரிசீலிக்க வேண்டும் என மாநில அரசு கோர முடியாது என 1991 ஆம் ஆண்டே மத்திய அரசு தெளிவுரை வழங்கியுள்ளதையும் எடுத்துக் கூறினேன்.

இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 257 உட்பிரிவு (1)-ன்படி, கருணை மனு இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 72-ன்கீழ் குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்ட பின், அதே பிரச்சினையை மாநில ஆளுநர் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 161-ன்படி எடுத்துக்கொள்ள முடியாது என்றும், மீண்டும் குடியரசுத் தலைவர்தான் கருணை மனுவை மறு பரிசீலனை செய்ய இயலும் என்றும் மத்திய அரசு உத்தரவிட்டிருந்ததையும் சுட்டிக் காட்டினேன். இந்திய அரசமைப்புச் சட்டப்படி எனது அரசின் இயலாமையை சுட்டிக்காட்டிய நானே இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்ற நோக்கில், தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், எனக்கு வரப் பெற்ற பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில்,

> “தமிழக மக்களின் உணர்வுகளுக்கும், தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில், திருவாளர்கள் சுதேந்திர ராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன் மற்றும் பேரறிவாளன் என்கிற அறிவு ஆகியோரின் கருணை மனுக்களை மறுபரிசீலனை செய்து, அவர்களின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது”

என்னும் தீர்மானத்தினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நானே முன்மொழிந்தேன். என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தீர்மானத்தின்மீது 2½ ஆண்டுகளாக மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு 1½ ஆண்டுகள் வரை, அதாவது மார்ச் 2013 வரை, மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசில் தி.மு.க. அங்கம் வகித்தது. இதன்மீது நடவடிக்கை எடுக்குமாறு திரு. கருணாநிதி மத்திய அரசை வலியுறுத்தினாரா? இல்லை, வலியுறுத்தவில்லை.

மத்திய அரசும், அதனைத் தாங்கிப் பிடித்திருந்த திரு. கருணாநிதியும் எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள் என்று தெரிந்த திருவாளர்கள் சாந்தன், ஸ்ரீஹரன் மற்றும் பேரறிவாளன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த மனுக்களில், தங்களுடைய கருணை மனுக்கள்மீது முடிவு எடுக்க 11 ஆண்டு காலதாமதம் ஏற்பட்டதைக் கருத்தில்கொண்டும், கடந்த 23 ஆண்டுகளாக சிறையில் இருப்பதைக் கருத்தில்கொண்டும், தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர். பின்னர் இந்த வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டன. இதுகுறித்த விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றபோது, இவர்களின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கக் கூடாது என்று மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் சார்பில் ஆஜரான மத்திய தலைமை வழக்குரைஞர் எடுத்துரைத்தார். இருப்பினும், இந்த மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்றம் மனுதாரர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்களுடைய தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து 18-2-2014 அன்று தீர்ப்பளித்ததோடு, ஆயுள் தண்டனை என்பது வாழ்நாள் முழுவதும் சிறைவாசம் என்றும், எனினும் குற்ற விசாரணை முறைச் சட்டம், பிரிவு 432 மற்றும் 433 A-ன்படி, அரசு எடுக்கும் தண்டனை மாற்றுதல் அல்லது தள்ளுபடி செய்தல் நடவடிக்கைக்குட்பட்டது என்றும் தெரிவித்துள்ளது.

முற்பகல் 10-30

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு வெளிவந்தவுடன், இதுகுறித்து உடனடியாக நான் விரிவாக விவாதித்தேன். இந்த விரிவான





விவாதத்திற்குப் பின், இன்று, 19-2-2014 காலை எனது தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் திருவாளர்கள் சுதேந்திர ராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன் மற்றும் பேரறிவாளன் என்கிற அறிவு ஆகியோர் 23 ஆண்டுகளாக சிறைச்சாலையில் இருந்து வருவதைக் கருத்தில்கொண்டு, குற்ற விசாரணை முறைச் சட்டம், பிரிவு 432-ல் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், அவர்களை உடனடியாக விடுதலை செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதேபோன்று, ஏற்கெனவே ஆயுள் கைதியாக 23 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் திருமதி நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோரையும் விடுதலை செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இருப்பினும், இந்த வழக்கு மத்திய புலனாய்வு அமைப்பினால் புலனாய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் தடா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டதால், குற்ற விசாரணை முறைச் சட்டம், பிரிவு 435-ன்படி, தமிழ்நாடு அமைச்சரவையின் முடிவு குறித்து மத்திய அரசுடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

எனவே, மத்திய அரசின் கருத்தினைப்பெறும் வகையில், திருவாளர்கள் சுதேந்திர ராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன், பேரறிவாளன் என்கிற அறிவு, திருமதி நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேரையும் விடுதலை செய்யலாம் என்ற தமிழ்நாடு அமைச்சரவையின் முடிவு மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

மத்திய அரசு 3 நாட்களுக்குள் தனது கருத்தினைத் தெரிவிக்காமல் காலம் தாழ்த்தினால், குற்ற விசாரணை முறைச் சட்டம், பிரிவு 432-ல் மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, திருவாளர்கள் சுதேந்திர ராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன், பேரறிவாளன் என்கிற அறிவு, திருமதி நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் விடுவிக்கப்படுவார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

[2014 பிப்ரவரி 19

*முற்பகல் 10-35*

## 3. முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய அமைச்சரவை முடிவு—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொருவராகப் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமரர் ராஜீவ் காந்தி அவர்களுடைய கொலை வழக்கிலே கைது செய்யப்பட்டு தன் இளமையை சிறைச்சாலையிலேயே கழித்திருக்கிற பேரறிவாளனுடைய தாயார் அற்புதம் அம்மாள் தன் கனவிலேகூட நினைத்துப் பார்க்கமுடியாத ஓர் அற்புதம் இன்றைக்கு நடந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அற்புதத்தை நிகழ்த்திக் காட்டியிருக்கிற மிகப் பெரிய வரலாற்றுச் சாதனையாளர் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கம்ப இராமாயணத்திலே கம்ப நாடார் ஒரு கருத்தை, ஒரு தலைசிறந்த உவமையைச் சொன்னார். நினைக்கிற நினைப்பு இருக்கிறதே அதுதான் உலகத்திலேயே மிக வேகமானது என்று சொன்னார். இங்கிருந்து கொண்டே டில்லியில் நடக்கப் போகிறதை ஒரு கனவாக நினைத்துக் கொண்டால், அந்த எண்ணத்தின் வேகத்திற்கு எதுவுமே ஈடில்லை என்றார். அந்த வேகத்தைவிட விரைவாகச் செயலாற்றக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வராய், நம்முடைய போற்றுதலுக்குரிய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறார்கள். நேற்று டில்லியில் உள்ள உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. உடனே இன்று காலை, தமிழக அமைச்சரவை கூடி (மேசையைத் தட்டும் ஒலி) மூவரல்ல, எழுவருக்கும் விடுதலை என்று முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மேலும், தமிழர்களுடைய உள்ளங்களிலே, எண்ணங்களிலே நீண்டகாலமாகக் கிடந்த அவாவை நிறைவேற்றுகிற வகையிலே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லதொரு சிறந்த தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு



2014 பிப்ரவரி 19] [முனைவர் செ.கு. தமிழரசன்]

வந்திருக்கிறார், அறிவித்திருக்கிறார். உலகத்திலே இருக்கிற 140 நாடுகளிலே மரண தண்டனை ஒழிக்கப்பட்டுவிட்டது. இன்னும் பல நாடுகளிலே இந்த மரண தண்டனைக்கு எதிராக குரல் எழுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆளுமை என்றால் அதற்கு தகுதி, தலைசிறந்த அறிவாற்றல். அதற்கு மேலே அந்த அறிவாற்றலால் உதிக்கிற திட்டங்களை நிறைவேற்றுகிற பேராற்றல், அதற்கும் மேலே (மேசையைத் தட்டும் ஒலி) தன் ஆளுமைக்குட்பட்ட ஒவ்வொரு உயிரையும் நேசிக்கிற மனித நேயம், (மேசையைத் தட்டும் ஒலி) தலை சிறந்த மனித நேயம் இருக்க வேண்டும். அந்த மனித நேயத்தின் ஒப்பற்ற சிகரமாய் விளங்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, அந்த மனித நேயத்தின் அடிப்படையிலே, 7 பேருடைய குடும்பத்திற்கு நன்மை செய்திடும் வகையிலே, அவர்களுக்கு வழங்கப்பட்ட கடும் தண்டனையிலிருந்து முழுமையாக விடுதலை கிடைக்கிற வகையிலே, ஒரு தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார். கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாறுபட்டு முரண்பட்டு, காலத்திற்குத் தகுந்தாற்போல், வாய்ப்புக்குத் தகுந்தாற்போல் தங்களுடைய நிலைமைக்குத் தகுந்தாற்போல், குழம்பி முடிவை மாற்றிக் கொண்டேயிருந்தார்கள். ஆனால், சிறையிலே இருந்தவர்களை அழுத்திக் கொண்டிருந்த அந்த அவலநிலையை இன்றைக்குப் போக்கியுள்ளார் நமது முதல்வர். ஒன்றே செய்வேன் அதை நன்றே செய்வேன், உறுதியாகச் செய்வேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கொண்ட கொள்கையை, மன உறுதியோடு இன்றைக்கு நிறைவேற்றித் தந்திருக்கிற அம்மா அவர்களின் பேராற்றலை தமிழ் கூறும் நல்லுலகம் வாழும் வரை வாழ்த்தும், பாராட்டும், நன்றி கூறும் என்று சொல்லி, பாராட்டி, வரவேற்று, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் வரலாற்றில், ஆட்சி வரலாற்றில், யாரும் செய்ய முடியாததை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். இதற்கு முன்பு உலகளாவிய அளவிலே அரசியல் நிருவாக நடவடிக்கைகளை எடுத்தவர்களெல்லாம் வியந்து பாராட்டுகிற தீர்ப்பினை, சட்டமன்றத்திலே

[திரு. உ. தனியரசு] [2014 பிப்ரவரி 19

அறிவித்திருக்கிறார்கள். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு ஏற்கெனவே 23 ஆண்டுகள் சிறைக் கொட்டடியிலே முடங்கிக் கிடந்த 3 தமிழ் இளைஞர்களுடைய விடுதலை குறித்து உலகம் முழுக்க வாழ்கின்ற 10 கோடி பேருக்கு மேற்பட்ட தமிழ்ச் சமூகம் கண்ணீரோடு வேண்டி நிற்கிறது. உலகம் முழுக்க இருக்கின்ற ஜனநாயக சக்திகள், மனிதாபிமான சக்திகள், மரண சுருக்குக் கயிற்றிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டுமென்று வேண்டினார்கள். இதயம், இரக்கம், கருணை, உயர்ந்த மனித மாண்பு உள்ள ஒட்டுமொத்த மானுட சமூகத்தினுடைய கோரிக்கையை, சட்டமன்ற வரலாற்றில் (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை எந்த முதலமைச்சரும் செய்துவிட முடியாத சாதனையை, ஒரு வரலாற்றுத் தீர்ப்பை, ஒரு வரலாற்று விடுதலையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-40

நளினி பெண் என்பதாலும், அவருக்கு குழந்தை இருப்பதாலும் கருணை காட்டலாம் என்றும், மற்ற மூன்று பேருக்கும் கருணை காட்டவேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்ன தமிழர்களுடைய தலைவர் என்று சொல்லிக் கொண்டிருக்கிற கருணாநிதி, அந்த மூன்று இளைஞர்களுக்கும் விடுதலை அளித்து அவர்களுடைய உயிரைக் காக்கவேண்டுமென்று கருதவில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மூன்று இளைஞர்களுடைய விடுதலையை உறுதி செய்ததோடு, ஏற்கெனவே 23 ஆண்டுகாலம் சிறையில் இருந்த நளினி, ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன் உள்ளிட்ட 7 பேரையும், உடனடியாக விடுதலை செய்யலாம் என்று, உச்ச நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பின் மை உலரும் முன்பு, தமிழ்நாடு சட்டமன்றத்திலே தீர்மானத்தைக் (மேசையைத் தட்டும் ஒலி) கொண்டுவந்து, அமைச்சரவையைக் கூட்டி முடிவெடுத்துள்ளார். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஜனநாயகத்தின் மாட்சிமையை, இந்திய தேசத்திற்கும், உலகத்திற்கும் பறைசாற்றி வருகின்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) உலகளாவிய மானுட சமூகத்தில் நீதித் துறையில், அரசியல் துறையில், அரசியல் வரலாற்றுத் துறையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பு சிறப்பு வாய்ந்தது. எனக்கு முன்பு பேசிய மூத்த சட்டமன்ற உறுப்பினர் ஐயா செ.கு. தமிழரசன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்



2014 பிப்ரவரி 19] [திரு. உ. தனியரசு]

போன்று, எண்ணுவது எப்படி வேகமானதோ, அதைவிட கூடுதல் வேகத்தோடு, நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) கருணைக் கரங்கள், அன்புக் கரங்கள், அந்த உயிர்களை மீட்பதற்கு நீண்டிருப்பது என்பதை தமிழ்ச் சமூகம், காலம் உள்ளவரை, அம்மா அவர்களுடைய இந்த அறிவிப்பை வணங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

வாழையடி வாழையாக ஈழத்திலே வாழ்கின்ற தமிழ் சமூகத்தின் அரசியல் விடுதலைக்காக சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டுவந்தார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். மீனவன் சிறையில் வாடினால், அந்த மீனவனை சிறையிலிருந்து மீட்டெடுத்துக்கொண்டு வருவதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒப்பாக இதுவரை யாரும் செயல்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மீனவர்களை சிறையிலிருந்து மீட்பதற்கு, அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகிய இந்த மூன்று இளைஞர்களுடைய விடுதலைக்காக, அந்தக் குடும்பம் நேற்று அம்மாவிடம் கண்ணீரோடு முறையிட்டார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அறிவிப்பைத் தந்து, ஒட்டுமொத்த உலகம் முழுக்க பரவி வாழுகின்ற 10 கோடி தமிழ் சமூகத்தின் நெஞ்சில் பால் வார்த்திருக்கிறார்கள். தமிழர்கள் மட்டுமல்ல, உலகத்து தமிழர்கள் எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நெஞ்சத்திலே ஏந்தி நிற்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சித் துறை, நிருவாகத் துறைமீதும், இனத்தின்மீதும், தமிழ் மொழியின்மீதும் மாறாத பற்றுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்றார்கள். அந்த மதிப்பினுடைய விளைவுதான் இந்த விடுதலை. இன்று சட்டமன்றத்தில் அறிவிப்பாக வெளியான இந்த நாள் தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை கண்டிராதது. இனியும் கண்டிர முடியாத அளவிற்கு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை அறிவிப்பாகத் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பற்ற முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டி, நன்றி தெரிவித்து நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

[2014 பிப்ரவரி 19

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை இன்று சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். உலகத்தில் இருக்கின்ற தமிழ் மக்களெல்லாம் என்ன நினைத்துக்கொண்டிருந்தார்களோ, அதை நிறைவேற்றுகின்ற வகையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றையதினம் இதுபோன்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் 7 பேர்களையும் விடுதலை செய்யவேண்டுமென்று அறிவிப்பு செய்வது என்பது சாதாரண விஷயம் அல்ல. இதுவரை, இதுபோன்ற ஓர் அறிவிப்பு தி.மு.க. ஆட்சியிலே நடந்தது கிடையாது. உலகத் தமிழர்களின் தலைவர் என்று பறைசாற்றிக்கொண்டிருந்தவரால் ஒரே ஒருவருக்கு மட்டும்தான் அன்றைய தினம் தண்டனையைக் குறைக்க முடிந்தது. அவர்களுக்கு மட்டும் exception. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்த உடனேயே அவர்களுக்கு விடுதலை கொடுக்க வேண்டுமென்று இதே சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். இன்றையதினம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதன்மூலமாக (மேசையைத் தட்டும் ஒலி) உலக வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறார்கள். உலகத்தில் இருக்கின்ற நாடுகள் எல்லாம் தூக்குத் தண்டனையை இரத்து செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிற காலகட்டத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியான முடிவெடுத்திருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்தில் நேற்று காலை 11-00 மணிக்கு தீர்ப்புச் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குத் தீர்வு காணவேண்டுமென்று உடனடியாக இங்குள்ள சட்ட வல்லுநர்களையெல்லாம் அழைத்துப் பேசி, நேற்று முழுவதும் தலைமைச் செயலகத்திலே இருந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சரவையைக் கூட்டி முடிவெடுத்திருக்கிறார்கள். தமிழ் மக்களுடைய உணர்வை மதிக்க வேண்டும், தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்களோ அதை நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனதாரப் பாராட்டுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீண்ட ஆயுளோடு வாழவேண்டுமென்று வாழ்த்தி, நிறைவு செய்கிறேன் நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



2014 பிப்ரவரி 19]

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் இனத்தின் ஒரே தலைவி யாரென்றால் அது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாள் சரித்திரத்திலே பொறிக்கப்படவேண்டிய ஒரு நாள். It has to be etched in the history. காரணம் சாந்தன், பேரறிவாளன், முருகன், நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகிய இந்த ஏழு பேரையும் விடுதலை செய்யவேண்டுமென்று பரிந்துரை செய்திருப்பது உண்மையான தாயுள்ளத்தைக் காட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தாயின் பரிதவிப்பு எப்படி இருக்கும் அவர்களுடைய உணர்வுகள் எப்படி இருக்கும் என்பதையும் புரிந்துகொண்டு, அதேசமயத்தில், சட்ட நுணுக்கங்களையெல்லாம் ஆராய்ந்து, பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்டிருந்தாலும், அதையும் மனதில்கொண்டு, 23 ஆண்டுகள் ஏற்கெனவே சிறைத் தண்டனை அனுபவித்து, நாம் இன்று மரண தண்டனையை சந்திப்போமோ, இன்று தூக்குக் கயிற்றைப் பார்ப்போமோ என்று தினம், தினம் செத்து மடிந்துகொண்டிருந்தவர்களை இன்று விடுவித்திருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற முடிவுகள் ஒரு சாதாரண தலைவரால் எடுக்க முடியாது. A dynamic, bold, intelligent Leader alone can take such a decisive decision. (மேசையைத் தட்டும் ஒலி) எந்த ஒரு தலைவராலும் இப்படி ஒரு முடிவை எடுக்க முடியாது என்பது தெள்ளத்தெளிவாகிறது. அதுமட்டுமல்லாமல், மூன்று தினங்களுக்குள் எடுக்கப்பட்ட முடிவிற்கு மத்திய அரசு தனது கருத்தினைத் தெரிவிக்காமலிருந்தால், அவர்களை விடுதலை செய்வது உறுதி என்று சொல்லியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிருவாகத் திறமை வாய்ந்தவர் நம் முதல்வர். That is why I called her the only one Chief Minister in the entire country who can become the Prime Minister of the country. முடிவுகளை எடுக்கத் தெரியவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு சில பேர் கைதட்டக்கூட முடியாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம், அவர்கள் கூட்டணிக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த விஷயத்திற்கு கைதட்ட வேண்டுமென்று புரிந்திருக்கவேண்டும்.

[2014 பிப்ரவரி 19

*(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று பேசமுற்பட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள் பாராட்டித்தான் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள். திரு. ரா. சரத்குமார், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** எந்த விஷயத்தை பாராட்டவேண்டுமென்று தெரியவேண்டும். கைதட்ட வேண்டியதற்கு கை தட்டுங்கள். உட்காருங்கள். அதாவது ஒரு பெருமைக்குரிய விஷயம், சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டிய விஷயம் நடந்துகொண்டிருக்கிறது. அதைப் பாராட்டுகிற மனப்பான்மை உங்களுக்கு... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். திரு. ரா. சரத்குமார், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு உட்கார்ந்திருக்கிறவர்களுடைய தலைவர் அவர்களுக்கு, இவர்களை விடுதலை செய்வதில் அக்கறை இல்லையென்பதைத்தான் இது காட்டுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும், விடுதலை செய்யவேண்டுமென்று அவர்களுடைய கட்சித் தலைவர் வெளியில் சொல்லிக்கொண்டிருக்கிறார். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். திரு. ரா. சரத்குமார், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** இங்கு சரித்திரப் புகழ்வாய்ந்த அறிக்கையின்மூலமாக அவர்களை விடுவிக்கவேண்டுமென்று சொல்லும்போது கைதட்டல்கூட வரவில்லையென்றால் கூட்டணிக்காக, பதவிக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் புரிந்துகொள்ள வேண்டும். எப்படிப்பட்ட தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எங்கிருக்கிறது இவர்களுடைய தமிழர் பற்று? சிறந்த முறையிலே, சிறந்த ஒரு தீர்மானத்தை இன்று முன் வைத்திருக்கிறார்கள், நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள். இதைப் பாராட்ட வேண்டுமல்லவா? *(குறுக்கீடுகள்)*



2014 பிப்ரவரி 19]

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தினகரன், என்னுடைய அனுமதியில்லாமல் அமர்ந்துகொண்டு பேசக்கூடாது. *(குறுக்கீடுகள்)* உங்கள் கட்சி உறுப்பினருக்கு வாய்ப்புத் தரும்போது அவர் பேசுவார், நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. ரா. சரத்குமார்:** அதுமட்டுமல்ல, முந்தைய ஆட்சியில் கபட நாடகம் ஆடுகின்ற. . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்கார்ந்து கொண்டு பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. *(குறுக்கீடுகள்)* இதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். *(குறுக்கீடுகள்)*

**திரு. ரா. சரத்குமார்:** அதாவது இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறந்த . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், பேசுங்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக் குறை சொல்வதற்காக அல்ல. தமிழகம் மட்டுமல்ல, உலகளாவிய தமிழக மக்கள் இதற்காக காத்துக் கொண்டிருக்கும்போது, *(மேசையைத் தட்டும் ஒலி)* உங்களுக்கு மட்டும் அந்த எண்ணம் இல்லையா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)* வெளியில் ஒன்றும், உள்ளே ஒன்றும் சொல்வதற்காக அல்ல. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. ரா. சரத்குமார்:** வேதனையில் சொல்கின்றேன். வேதனையின் அடிப்படையில் சொல்கின்றேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உங்களுக்கு வாய்ப்பு வரும்போது, பேசுங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசும்போது சொல்லலாம், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, உங்கள் கருத்தை, உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசலாம், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உங்களுக்கு வாய்ப்பு வரும்போது

[பேரவைத் தலைவர்] [2014 பிப்ரவரி 19

பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன் அல்லவா, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்பு தரும்போது பேசலாம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழினமே இதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. சிறப்பான ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, அதைத் தைரியமாக மத்திய அரசிடம் எடுத்துரைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் செவிசாய்க்கா விட்டாலும், நாங்கள் நிச்சயமாக விடுதலை செய்வோம் என்று சொல்வது, (மேசையைத் தட்டும் ஒலி) இங்குள்ள அனைவருக்கும் மட்டுமல்ல, உலகத் தமிழர்கள் அனைவரும் இதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பாராட்டாமல் இருக்கிறார்கள். அதற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெளியில் ஒன்றும், உள்ளே ஒன்றும் பேசுவதற்காக அல்ல. (குறுக்கீடுகள்) மக்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் சொன்னேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தினகரன், உட்கார்ந்து கொண்டு பேசுவது முறையல்ல.

**திரு. ரா. சரத்குமார்:** ஆகவே, இந்தத் தீர்மானம் உலக வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களே, உண்மையிலே நீங்கள்தான் எங்களுக்கு அம்மா என்று பெருமையுடன் இங்கு நான் சொல்லிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பாரதப் பிரதமர் ராஜீவ் அவர்கள் கொலையில் குற்றம் சுமத்தப்பட்டு தூக்குத் தண்டனை கைதிகளாக 23 ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலே வாடிக் கொண்டிருந்தவர்களுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினுடைய அடிப்படையில் அவர்கள் நேற்று தூக்குத் தண்டனையிலிருந்து விடுதலை பெற்று நிம்மதி பெற்றிருக்கிறார்கள். இன்று தமிழக சட்டமன்றத்திலே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்றிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் அவர்கள் நிரந்தரமாக சிறையிலே இருந்து விடுதலை பெறக்கூடிய வாய்ப்பையும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல, அவர்களுடன் ஏற்கெனவே ஆயுள் தண்டனை கைதிகளாக சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கக்கூடிய நளினி, ராபர்ட் பயஸ். . .



2014 பிப்ரவரி 19] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது பேசுகையில் சட்டமன்றத்தில் இன்று ஒரு தீர்மானத்தை நான் முன்மொழிந்திருக்கிறேன் என்று தெரிவித்தார். தீர்மானத்தை முன்மொழியவில்லை. இன்று எனது தலைமையில்கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட உறுதியான முடிவைத்தான் நான் இங்கே தெரிவித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசித்த பின், இன்று காலை, எனது தலைமையில் தமிழக அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த 7 பேர் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற முடிவு எடுக்கப்பட்டு, அதனைத்தான் இங்கே அறிவித்தேன். Cr.P.C. Section 435-ன்படி, அதாவது குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 435-ன்படி, இந்த முடிவைப் பற்றி நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்து அவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்று அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்காகத்தான் இன்று அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவு மத்திய அரசுக்கு அனுப்பப்படும். மூன்று நாட்கள் காத்திருப்போம், அது சட்டத்திற்காக. ஆனால், அந்த மூன்று நாட்களுக்குப் பின் மத்திய அரசு, மாநில அரசுக்கு பதில் அனுப்பினாலும் சரி, அனுப்பாவிட்டாலும் சரி, (மேசையைத் தட்டும் ஒலி) மாநில அரசு எடுத்த முடிவை மத்திய அரசு ஏற்றுக்கொண்டாலும் சரி, நிராகரித்தாலும் சரி (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பற்றி நாங்கள் கவலைப்பட மாட்டோம். மாநில அரசுக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த ஏழு பேரும் விடுதலை செய்யப்படுவார்கள், இது உறுதி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

[2014 பிப்ரவரி 19

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேசி முடியுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இல்லை இன்னும் ஒன்றுதான். இன்று தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் அவர்களை விடுதலை செய்வது என்று எடுக்கப்பட்ட முடிவை சட்டமன்றத்திலே அறிவித்து, ஒப்புக்காக மத்திய அரசின் புலனாய்வுத் துறையினுடைய ஒப்புதலை மட்டும் பெறவேண்டும். அந்த ஒரேயொரு சடங்கை மட்டும் நிறைவேற்றுவதற்காக மட்டும் நாங்கள் மூன்று நாட்கள் காத்திருக்கிறோம். மற்றபடியாக அவர்களுடைய விடுதலை என்பது நூற்றுக்கு நூறு உறுதியாகிவிட்ட ஒன்று. (குறுக்கீடு) என்று இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மிக முக்கியமான முடிவை எடுத்த தமிழ்நாடு அரசையும், முதல்வர் அவர்களையும் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் பாராட்டுகிறேன். அதேசமயத்தில் இப்பொழுது உலகெங்கும் இருக்கிற தமிழ் ஆர்வலர்கள் இந்த தூக்குத் தண்டனையை இரத்து செய்ய வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையை வைத்துப் போராடி வருகிறார்கள். (குறுக்கீடு) இல்லை, எனவே இதையும் உங்களுடைய (குறுக்கீடு) இல்லை நான் வேறு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, இது விதி 110-ன்கீழ் அறிவிப்பு. இந்த அறிவிப்புக்கு நீங்கள் நன்றி சொல்லலாம். விவாதம் கூடாது. (குறுக்கீடு) இல்லை, விவாதம் எல்லாம் வேண்டாம். விவாதத்திற்கு அல்ல. (குறுக்கீடு) இதிலே விவாதம் இல்லை. (குறுக்கீடு) இல்லை, நன்றி மட்டும் தெரிவிக்கலாம்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி பாராட்டி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இப்போது புதிய கோரிக்கைகளை எல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறார். அவரிடம் தங்கள்வாயிலாக



2014 பிப்ரவரி 19] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஒரேயொரு கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். இன்று ஏற்றுக்கொண்டிருக்கிறாரே புதிய தலைமை, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த புதிய தலைமை, முன்னாள் முதலமைச்சர் அவர்கள், அவர் ஆட்சியில் இருந்தபோது, அவர் கூட்டிய அமைச்சரவைக் கூட்டத்தைப் பற்றி அங்கே என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதைப் பற்றி இப்போதுதான் நான் இங்கே தெரிவித்தேன். 2000 ஆம் ஆண்டு திரு. கருணாநிதி தலைமையில் கூட்டப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் அவர்கள் இதே கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று விரும்பியிருந்தால், அன்றே அந்த முடிவை எடுத்து ஆளுநருக்கு அனுப்பியிருக்கலாம். அதை ஏன் அனுப்பவில்லை? அதைப் பற்றி ஏன் டாக்டர் கிருஷ்ணசாமி எதுவுமே பேசமாட்டேன் என்கிறார்? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, இதில் விவாதம் இல்லாமல் நன்றி சொல்லி, முடியுங்கள். இந்த அறிவிப்புக்கு நன்றி சொல்லி, முடியுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லித்தான் முடிக்கப் போகிறேன். நேற்றைய தினம் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்தவுடனேயே நன்றி தெரிவித்துவிட்டு, தமிழகத்தில் உள்ள அனைத்து ஆர்வலர்களும் வைத்த ஒரே ஒரு கோரிக்கை மாநில அரசு, அவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் உட்பட எல்லோருமே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்புதான் விரிவான அறிக்கையை இந்த அவையிலே நான் வாசித்தேன். விவரங்களைத் தெரிவித்தேன். நான் கேட்கும் கேள்வி இதுதான். 2000 ஆம் ஆண்டு திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அவர் தலைமையில் அமைச்சரவையைக் கூட்டி, அன்று ஆளுநருக்கு ஒரு பரிந்துரை அனுப்பினார்கள். சட்டப்படி அமைச்சரவை ஒரு பரிந்துரையை அனுப்பினால், ஆளுநர் அதை ஏற்கவேண்டும். அன்று திரு. கருணாநிதி தலைமையில்கூடிய அமைச்சரவை அனுப்பிய முடிவு என்ன? நளினிக்கு மட்டும் மரண தண்டனை என்பதை ஆயுள் தண்டனையாக மாற்றலாம்; மற்ற மூன்று பேருக்கு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 பிப்ரவரி 19

முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனையை உறுதி செய்துதான் திரு. கருணாநிதி அன்றைக்கு பரிந்துரையை அனுப்பினார். அதைத்தான் ஆளுநரும் ஏற்றுக்கொண்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதிக்கு, இன்றைக்கு அதே கைதிகளின் விடுதலையைப் பற்றி பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதை டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடு)

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, அதற்கு ஏதாவது பதில் இருந்தால், சொல்லுங்கள். இல்லையென்றால், நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு காலகட்டத்திற்கும் (குறுக்கீடுகள்) அதாவது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் இரட்டை வேடம் போடுகிறார், கபட நாடகம் ஆடுகிறார் என்று நான் மட்டும் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களே இந்தப் பேரவையில் சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, 2011 ஆகஸ்டு 30 ஆம் தேதி, இதே சட்டமன்றத்தில் பேசும்போது டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், "தமிழுக்கும், தமிழர்களுக்கும் அவர் மட்டும்தான் சொந்தக்காரர் என்று சொல்லிக்கொண்ட கருணாநிதி அவர்களுடைய இரட்டை வேடம், கபட நாடகம் அனைத்தையும் தோலுரித்துக் காட்டக்கூடிய வகையில் இனிமேல் தமிழ் என்றாலும், தமிழர் என்றாலும், தமிழினம் என்றாலும் அது தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நிரூபிக்கக்கூடிய வகையில். . ." என்று பேசியிருக்கிறார். அதற்கு அவரே தற்போது பதில் சொல்லட்டும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



2014 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய திருநாட்டினுடைய தலைமை நீதிமன்றம் நேற்றைக்கு ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. 23 ஆண்டுகளாக சிறையிலே இருந்த முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் போன்ற மூவருக்கும் அளிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது மட்டுமின்றி, மத்திய, மாநில அரசுகள் விரும்பினால் அவர்களை விடுதலை செய்யலாம் என்ற ஒரு நல்ல தீர்ப்பை நேற்றைக்கு தலைமை நீதிமன்றம் வழங்கியது. ஏற்கெனவே, இந்தச் சட்டமன்றத்தில் அவர்களுடைய தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும், விடுதலை செய்ய வேண்டுமென்றெல்லாம் தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றோம். நிச்சயமாக குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். நிரபராதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். ஏனென்று சொன்னால், சமீபத்தில் ஒரு விசாரணை அதிகாரியே அவருடைய மனசாட்சி உறுத்தியதன் காரணமாக, அவர்களுடைய வாக்குமூலத்தையே நான் திருத்தி எழுதினேன் என்ற உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டினார். அன்றைக்கே இவர்கள் நிரபராதிகள் என்று உலகம் உணர்ந்துவிட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க நேற்றைய தீர்ப்பின் அடிப்படையிலே, 24 மணி நேரத்திற்குள்ளாக நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், அமைச்சரவையைக் கூட்டி, அவர்கள் அத்துணை பேரையும் விடுதலை செய்தே தீருவது என்கின்ற நல்ல தீர்ப்பைச் சொல்லியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக இதை நான் மனமார வரவேற்கின்றேன். அதேநேரத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருக்கக்கூடியவர்களையும் கருணை உள்ளத்தோடு பரிசீலித்து அவர்களையும் விடுதலை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் கோரிக்கைகள் வைக்கக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். திரு. பிரின்ஸ், இதில் விவாதம் இல்லை, நன்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** உலகம் போற்றும் உத்தமத் தலைவர், உன்னதத் தலைவர், எங்கள் இதயத்தில் நிறைந்திருக்கின்ற என்

[திரு. ஜேஜி. பிரின்ஸ்] [2014 பிப்ரவரி 19

அன்புக்குரிய தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய மரணம் உலகத்திற்கே அதிர்ச்சியையும், வேதனையையும் தந்த ஒன்று. ஆனால், தூக்குத் தண்டனை கைதிகளாக இருந்த, அவரைக் கொன்ற வழக்கில் எதிரிகளான சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரின் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இது மாண்புமிகு உச்ச நீதிமன்றம் நேற்றையதினம் அளித்த தீர்ப்பு**

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஜேஜி. பிரின்ஸ், இதில் விவாதம் எல்லாம் வேண்டாம். விதி 110-ன்கீழ் வைத்த அறிக்கைமீது விவாதம் இல்லை, நீங்கள் நன்றி சொல்வதென்றால் சொல்லலாம். இந்த அறிக்கையின்மீது விவாதம் இல்லை. விவாதம் இல்லை. நன்றி சொல்வதென்றால் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு). விவாதம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். கொடுத்த வாய்ப்பை நீங்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை. உட்காருங்கள். திரு. எம். ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) கருத்து சொல்வதற்கு இதில் விவாதம் இல்லை. (குறுக்கீடு) வாதம், பிரதிவாதம் எல்லாம் கோர்ட்டில் முடிந்துவிட்டது. அதனால், இங்கு வாதம் ஒன்றும் இல்லை. விதி 110-ன்கீழ் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிக்கைக்கு நன்றி சொல்வது மட்டும்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கோஷமிட்டவாறு அவையிலிருந்து வெளியேறினர்.)*

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகிய மூவரையும் அதோடு நளினி உள்ளிட்ட 7 பேரையும் தூக்குத் தண்டனையிலிருந்து விடுவிக்க அமைச்சரவை கூடி எடுத்திருக்கக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 பிப்ரவரி 19] [திரு. எம். ஆறுமுகம்]

இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி ஆதரிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றில் இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை இங்கே முன்மொழிந்திருப்பது என்பது உண்மையிலேயே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது தீர்மானம் அல்ல. அறிக்கை.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவும். அமைச்சரவையினுடைய முடிவை இங்கே அறிவித்திருப்பது என்பது, இதை யார் எதிர்த்தார்களோ அவர்கள் இங்கே இருந்திருப்பார்களானால், நன்றாக இருந்திருக்கும் என நான் கருதுகின்றேன். அவர்கள் இப்போது இங்கு இல்லை. 21-5-1991 அன்று ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டார். 26 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 29-8-2011-ல் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் தூக்குத் தண்டனையிலிருந்து ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று இதே மாமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை குடியரசுத் தலைவருக்கும், மேதகு ஆளுநர் அவர்களுக்கும் அனுப்பினார். அதை அடிப்படையாக வைத்துத்தான் இப்போது உச்ச நீதிமன்றம் (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றது என்று நான் கருதுகின்றேன். எனவே, அமைச்சரவை கூடி எடுத்திருக்கக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவினை மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே அறிவித்திருப்பதை உலகம் முழுவதும் இருக்கக்கூடிய தமிழ்ச் சமுதாயம் பாராட்டிக்கொண்டிருக்கின்றது. வரவேற்றுக்கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) நாம் சட்டமன்றத்தில் பேசிக்கொண்டிருக்கின்றோம். இது டி.வி-யில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றது. மகிழ்ச்சியைத் தெரிவிக்கும்விதமாக வெளியில் எல்லோரும் பட்டாசு வெடித்துக்கொண்டிருக்கின்றார்கள். அமைச்சரவை கூடி எடுத்திருக்கின்ற இந்த முடிவை, உலகம் முழுவதும் இருக்கக்கூடிய தமிழ்ச் சமுதாயமும், தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏழரைக் கோடி மக்களும் பட்டாசு வெடித்துக் கொண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிலர் அவையைவிட்டு வெளியில் சென்றுகொண்டிருக்கின்றார்கள். இந்த அறிவிப்பு என்பது உண்மையிலேயே யாரும் எதிர்பாராதது. 24 மணி நேரத்தில் நடைபெற்ற ஒன்று. காலையில்

[திரு. எம். ஆறுமுகம்] [2014 பிப்ரவரி 19

அமைச்சர்களைப் பார்க்கும்போதே பரபரப்போடு காணப்பட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவையினுள்ளேயே வந்துவிட்டார்கள். ஏதோ முக்கியமான அறிவிப்பு இருக்கப்போகிறது என்ற உணர்வு என் மனதிலே எழுந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையிலேயே, வரலாற்றில் மிகப் பெரிய மைல் கல்லாக இந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களையும், அமைச்சரவையையும் பாராட்டுவதோடு மட்டுமல்லாமல், அமைச்சரவையைக் கூட்டி உறுதியான நடவடிக்கையை எடுக்கக்கூடிய முதல்வர்தான் இந்திய நாட்டினுடைய பிரதமராக வர வேண்டும் என்பதற்கு இது ஒரு அடித்தளமாக அமைந்திருக்கிறது என்பதனைக் கூறி, இந்த அறிவிப்பினை ஆதரித்து அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றத்தினால் தூக்குத் தண்டனை இரத்து செய்யப்பட்டு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டிருக்கிற சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரும், ஏற்கெனவே ஆயுள் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிற நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நாங்கள் மனதார வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

உச்ச நீதிமன்றம் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய மூன்று பேரையும் குற்றவியல் சட்டப் பிரிவு 432-ன்படி மாநில அரசு விடுவிப்பது குறித்து தீர்மானிக்கலாம் என்று அறிவித்து இருந்தாலும், அவர்களோடு மட்டுமில்லாமல், ஏற்கெனவே தண்டனை பெற்றிருக்கிற 4 பேரையும் சேர்த்து விடுதலை செய்திருப்பது மிகுந்த பாராட்டுதலுக்குரியது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் மிக விளக்கமாக இங்கே எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.



2014 பிப்ரவரி 19] [திரு. க. பாலகிருஷ்ணன்]

1999 ஆம் ஆண்டே அவர்களின் தண்டனை உறுதி செய்யப்பட்ட பிறகு, அவர்களுடைய கருணை மனுக்களை 11 ஆண்டுகள் கிடப்பில் போட்டிருக்கிற மத்திய அரசின் நடவடிக்கையை உச்ச நீதிமன்றம் எடுத்துக் காட்டியிருக்கிறது. எனவேதான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "மத்திய அரசு ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அவர்களை விடுதலை செய்வது உறுதி" என்கிற அந்த உறுதியோடு (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே அந்த அறிவிப்பினை அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே 23 ஆண்டுகள் இவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்துவிட்டார்கள். மத்திய அரசின் பாராமுகத்தினாலே 11 ஆண்டு காலம் அவர்களுடைய கருணை மனு கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு தண்டனை வழங்குவது என்று சொன்னால், அது இரட்டிப்பு தண்டனையாக இருக்கும் என்கிற காரணத்தினாலே, அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டு இருப்பதாக முன்னாள் அதிகாரி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அறிவிப்பினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது.

முன்னாள் பாரதப் பிரதமர் அவர்களோடு சேர்ந்து படுகொலை செய்யப்பட்டவர்களுடைய நிலைமையும் வேதனையானது என்பதிலே யாருக்குமே இருவேறு கருத்து இருக்காது என்பதையும் இந்த நேரத்திலே நான் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்த அறிவிப்பினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு நீதியரசர் சதாசிவம் அவர்கள் தலைமையிலான பெஞ்ச் கூடி அமரர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கிலே குற்றஞ்சாட்டப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து உத்தரவிட்டுள்ளது. 23 ஆண்டுகாலமாக சிறையில் இருப்பதைக் கருதி, மாநில அரசு முடிவெடுக்கலாம் என்ற தீர்ப்பினை

[திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்] [2014 பிப்ரவரி 19

அறிவித்தவுடனே, எங்களுடைய தேசிய முற்போக்கு திராவிட கழக நிறுவனத் தலைவர் இந்தத் தீர்ப்பு உலகத் தமிழர்கள் அனைவர் நெஞ்சங்களிலும் பால் வார்க்கின்ற ஒரு தீர்ப்பு என்று தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், *(மேசையைத் தட்டும் ஒலி)* மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை விடுத்தார். இந்தத் தீர்ப்பு தெரிந்தவுடனேயே, நம்முடைய தமிழக அமைச்சரவை கூடி விவாதித்தது. தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்ததோடு மட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி உடனடியாக விடுதலை செய்ய முடிவு எடுத்து, சட்டமன்றத்திற்கு...

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவல்களை இந்த அவைக்கு அளிக்கக்கூடாது. இவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்கவில்லை. உச்ச நீதிமன்றம் தூக்குத் தண்டனைக் கைதிகளாக இருந்தவர்களின் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றியது. விடுதலை செய்வதைப் பற்றி மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்களை வைத்து பரிசீலிக்கலாம் என்றுதான் உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் பரிசீலிக்கலாம் என்று சொன்ன அந்த முடிவினை ஏற்று, தமிழக அமைச்சரவை கூடி உடனடியாக முடிவு எடுத்து, சாந்தன், பேரறிவாளன், முருகன் நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்ததோடு மட்டுமல்லாமல், ஜனாதிபதிக்கு அனுப்பிய கருணை மனுவையே 11 ஆண்டு காலம் கிடப்பில் போட்ட மத்திய அரசு, மூன்று நாட்களுக்குள்ளாக முடிவெடுக்க வேண்டுமென்ற நிபந்தனையை விதித்ததற்காகவும், இந்தச் சட்டமன்றத்திலே ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தை தேசிய முற்போக்கு திராவிட கழகம் வரவேற்று. . .



2014 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இது தீர்மானம் கிடையாது. விதி 110-ன்கீழ் அறிக்கை.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** இந்த அறிக்கையை தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவர் சார்பாகவும், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பாகவும் ஒருமனதாக வரவேற்று, நன்றி தெரிவித்து, அமைகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அம்மா அவர்களுடைய இன்றைய அறிவிப்பு, ஏழு இளைஞர்களின் அன்னையர் இழந்திட்ட மன நிம்மதியை மீட்டிருக்கும். முறை செய்து காக்கும் மன்னவரின் அறிவிப்பு வலிமையோடும், வேதனையோடும், விதியை எண்ணி விழிகளில் நீரைத் தேக்கியவர்களின் வாட்டத்தைப் போக்கும். தமிழகம் பெற்றிட்ட தவச் செல்வியின் அறிவிப்பு இக்குடும்பத்தாருக்கு இனி கெட்ட கனவுகள் வராது. ஒவ்வொரு நிமிடமும் அடுத்து வரும் செய்தி என்னவாக இருக்குமோ என்று மிரண்டு அதிகரிக்கும்; ரத்தக் கொதிப்பைச் சீராக்கும்; பிணியை நீக்கும் அன்னையின் அறிவிப்பு. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆற்றொணா துக்கத்தால் அன்றாடம் படுத்திருந்த உள்ளங்களுக்குப் பால் வார்க்கும் அன்னையின் அறிவிப்பு. சொல்லொணா துயரங்களைச் சுமந்தவர்களை சொந்தமாய் நினைத்திட்ட பொன்னியின் செல்வியின் அறிவிப்பு.

ஈரோட்டுப் புயல், காஞ்சித் தென்றல் இரண்டும் கலந்திட்ட ஈகைத் தாயின் பூக்களுக்கும் புன்னகை போதித்த புரட்சித் தலைவர் 'நான் தேடிய தலைவியோ' என்று சொன்ன நம் பொன்மனத் தாயின் கருணைமிக்க அறிவிப்பு. *(மேசையைத் தட்டும் ஒலி)* எனக்காக எதுவுமில்லை; என் வாழ்வெல்லாம் என் மக்களுக்கே; என் தமிழ் மக்களுக்கே என்னும் தூயத் தொண்டு இதயத்தின் பாசமிகு அறிவிப்பு, மக்களை மனதால் நேசிக்கும் மனிதநேயம் கொண்ட மாசி மகம் தந்த மகத்தான அறிவிப்பு. *(மேசையைத் தட்டும் ஒலி)* தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்துவிட்டபோதிலும், இரக்கம் காட்டி, அவர்களின் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளும் குணமே; பண்புகளில் எல்லாம் தலையானதாகப் போற்றப்படும் என்கிறது திருக்குறள்.

[பேரவைத் தலைவர்] [2014 பிப்ரவரி 19

மன்னிப்பவர் மகானாகிறார்; மனிதருள் மாணிக்கமாகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்விளைஞர்களுக்குப் புது வாழ்வு, புனர் வாழ்வு தந்திட்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மாவோ தெய்வமாகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) கொல்கத்தாவிலே அன்னை தெரசாவின் திருக்கரங்கள் பட்டவுடன் மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோயாளியும் மீண்டுவந்த காரணத்தினால், அன்னை தெரசாவுக்கு 'புனிதர் பட்டம்' வழங்கப்பட்டது என படித்துள்ளேன். தூக்குக் கயிறு முத்தமிட இருந்த மூன்று இளைஞர்களின் உயிர்கள் மீட்டெடுக்கப்பட்டு, மன உளைச்சல், மனச் சிதைவு, மனம் பேதலிப்பு, அச்சம் என்னும் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கும் சிகிச்சையாக விடுதலை என்னும் சுவாசக் காற்றை அளித்த, புது வாழ்வை அளித்த நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் புனிதராவார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அனைத்துத் தமிழ் நெஞ்சங்களின் சார்பில் என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். நன்றி.

*முற்பகல் 11-20*

## 4. அறிக்கைகள் அளித்தல்

### மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுவின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடா, மனுக்கள் குழுத் தலைவர்.

**திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரக்கத்தின் வடிவமே! தாய்மையின் உறைவிடமே! தழும்பாத நிறைகுடமே! எங்கள் இந்திய அரசியலின் ஜனநாயகத்தின் பிறப்பிடமே! வரும் நாடாளுமன்றத்தின் நாடியே! தங்க மனமும், சிங்க இதயமும் கொண்ட எழுச்சியின் வடிவமே! காலத்தே பெய்த மழையாய், கனிக்குள்ளே நிறைந்திருக்கும் அருஞ்சுவையாய், ஞாலமே போற்றுகின்ற அருள் வடிவாய், தமிழ்த் தாயின் தலைமகளாய், தமிழ்நாட்டை ஆட்சி செய்யும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரதத் தாயின் செல்ல மகளாய், இந்தியத் திருநாட்டை ஆட்சி செய்வீர்கள்.



2014 பிப்ரவரி 19] [திரு. ஆர். மனோகரன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 36 முதல் 39 வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. வரவு—செலவுத் திட்டம், 2014—2015, பொது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. சரோஜா அவர்கள்.

***திருமதி பி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், ஏழரைக் கோடி தமிழ் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றும், ஒன்றரைக் கோடி தமிழகத் தொண்டர்களின் உயிர் மூச்சாகவும் விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் குடும்ப தெய்வம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, இந்நிதிநிலை அறிக்கையின்மீது எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இயக்கத்தோடு தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, கழகமே கோயில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவே தெய்வம் என வாழ்ந்து வந்த எனது கணவர் திடீரென இயற்கை எய்தினார். இருளில் மூழ்கி, செய்வதறியாது நிலைகுலைந்து நான் நின்றிருந்த வேளையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவே நேரில் வந்து ஆறுதல் அளித்து, "நான் இருக்கின்றேன்" என்றதோடு, என்னை இந்த அவையிலும் (மேசையைத் தட்டும் ஒலி) அமரச் செய்து, எனது கணவர் விட்டுச் சென்ற தொகுதி மக்களின் பணியினைத் தொடர மாபெரும் வாய்ப்பளித்த இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் குடும்பத்தின் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் மாபெரும் மக்கள் சக்தியால், ஏற்காடு சட்டமன்ற இடைத் தேர்தலில் 78,116 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெற வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வெற்றி, மாண்புமிகு அம்மா அவர்களின்

இரண்டரை ஆண்டு பொற்கால ஆட்சிக்குக் கிடைத்த நற்சான்று. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையை ஏற்று, தேர்தல் பணியாற்றிய தலைமைக் கழக நிருவாகிகளுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாவட்டச் செயலாளர்களுக்கும், தொகுதியிலுள்ள அனைத்து கழகப் பொறுப்பாளர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், கழகத் தொண்டர்களுக்கும், வாக்களித்த பொதுமக்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியினை அனைவரின் பாதம் தொட்டு வணங்கித் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஏற்காடு சட்டமன்றத் தொகுதியின் வெற்றி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இமாலய வெற்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த வெற்றி, இமயமலை வரை தொடரும் என்பதை இந்தியாவே உறுதி செய்யும் தருணமாக அமையும். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்களின் தன்னலமற்ற மக்கள் பணி தமிழகத்திற்கு மட்டும் போதாது, இந்தியத் திருநாட்டிற்கே தேவை என இந்திய மக்களே எதிர்பார்க்கின்றனர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பல ஆண்டுகளாக மத்திய அரசால் தமிழகம் வஞ்சிக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் தமிழகம் முன்னேற, வறுமையை இந்தியாவிலிருந்தே அகற்றிட, தமிழக மக்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சி என்னும் தீப ஒளி நிரந்தரமாகத் தங்கிட, இந்தியாவை வல்லரசு நாடாக உருவாக்கிட, 40-ஐயும் வென்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து, இந்தியப் பிரதமராக அம்மா அவர்களை அமர்த்திட, அயராது பாடுபட, நாம் உழைப்போம், வெற்றி பெறுவோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-25*

தமிழக மக்களுக்கு வரியில்லா பட்ஜெட், ஏழை மக்கள் வாழ வழிவகுத்த பட்ஜெட். அனைத்து மக்களும் வரவேற்கின்ற பட்ஜெட் தாக்கல் செய்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து நன்றியைத் தெரிவித்து, *(மேசையைத் தட்டும் ஒலி)* எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, எனது உரையை நிறைவு செய்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஏற்காடு தொகுதி மக்களின் கோரிக்கைகளை நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எனது தொகுதிக் கோரிக்கைகள்:

காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறையின்கீழ் வாழப்பாடி துணை கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டடம், தீயணைப்பு நிலையக் கட்டடம், வீராணம் காவல் நிலையக் கட்டடம் கட்டப்படவேண்டும்.

ஏற்காடு ஒரு சுற்றுலாத் தலமாக உள்ளதால், இங்கு மழைக்காலத்தில் ஏற்படும் நிலச் சரிவினால் பாதிப்புகளை உடனடியாக அகற்ற புதிய தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டும்.

சேலம் மாவட்டம், வாழப்பாடி ஒன்றியம், குறிச்சி ஊராட்சியை குறிச்சி ஊராட்சி மற்றும் ரங்கனூர் ஊராட்சி என இரண்டாகப் பிரிக்கவேண்டும்.

அயோத்தியாபட்டிணம் ஒன்றியம், கோகுலநாத நில குடியேற்றத் திட்டத்தின்கீழ், மேட்டுப்பட்டி பட்டா எண் 147, வெள்ளாகுண்டம் பட்டா எண் 367, காரிப்பட்டி பட்டா எண் 115, கருமாபுரம் பட்டா எண் 125 ஆகிய ஊராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு நிரந்தர பட்டா வழங்கக் கோருகிறேன்.

வாழப்பாடி தாலுகாவாக பிரிக்கப்பட்டுள்ளதால் இங்கு கருவூலம் ஒன்றினை ஏற்படுத்த வேண்டும். தாலுகா அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டவேண்டும்.

கரியக்கோவில் நீர்த்தேக்கத் திட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்டது. இது பல ஆண்டுகளாக தூர் வாரப்படாமல் உள்ளது. தூர் வாரி செப்பனிட ஆவன செய்யவேண்டும்.

அயோத்தியாபட்டினத்தில் கந்தாஸ்ரமம் ஓடையில் தடுப்பணை கட்டவேண்டும்.

பாப்பநாயக்கன்பட்டி, கரியக்கோவில் அணையை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தி, பயணியர் விடுதி ஒன்றினைக் கட்டவேண்டுகிறேன்

அயோத்தியாபட்டினம் ஒன்றியம், வளையக்காரனூர் ஊராட்சியில் செக் டேம் கட்டவும், இடையப்பட்டி ஊராட்சியில் நெய்யமலை பகுதிக்கு தார்ச் சாலை அமைக்கவும், அயோத்தியாப்பட்டினம் ஒன்றியம், அறநூத்துமலை ஊராட்சி, பெலாப்பாடியில் சாலை வசதி மற்றும் மின் வசதி ஏற்படுத்தவும், வாழப்பாடி ஒன்றியம், தேக்கல்பட்டி ஊராட்சியில் சம்பூத்துமலைக்கு சாலை வசதி மற்றும் மின் வசதி ஏற்படுத்தவும், கருமந்துறை கீழ்நாடு, மேல்நாடு ஊராட்சியில் கிராமச் சாலைகளைத் தார்ச் சாலையாக மேம்படுத்தவும் கோருகிறேன்.

சேலம் மாநகராட்சியையும், வீராணம் ஊராட்சியையும் இணைக்கும்வகையில் திருமணிமுத்தாற்றின் நடுவில் பாலம் கட்ட ஆவன செய்யவேண்டும்.

தெற்குநாடு ஊராட்சி, வடக்குநாடு ஊராட்சி, கீழ்நாடு மேல்நாடு ஊராட்சி ஆகிய ஊராட்சிகளுக்கு கருமந்துறை மையப் பகுதியாக விளங்குவதாலும், இங்கு பேருந்து நிலையம் உள்ளதாலும் இப்பகுதியில் உள்ள சாலை ஓரமாக உள்ள கடைகளை அகற்றி, வணிக வளாகம் ஒன்றினைக் கட்டவேண்டும்.

வாழப்பாடி தாலுகாவாக மாற்றப்பட்டுள்ளதால் இங்கு ஒரு சப்-கோர்ட் ஆரம்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

ஆலப்பட்டி பள்ளியின் கட்டடத்தைப் புதுப்பித்துக் கட்டக் கோருகிறேன்.

நெய்யமலை உயர்நிலைப் பள்ளிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தேவையான வகுப்பறைகளைக் கட்ட ஆவன செய்யவேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவிப்பு செய்தபடி வாழப்பாடியில் புதிய கல்லூரி ஒன்றினை அமைக்க ஆவன செய்ய வேண்டும்.



பாப்பநாயக்கன்பட்டியில் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் தொழிற்பயிற்சி (ஐ.டி.ஐ.) ஒன்றினைத் துவக்கவேண்டும்.

பாப்பநாயக்கன்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையமும், குறிச்சி ஊராட்சி, ரங்கனூரில் துணை ஆரம்ப சுகாதார நிலையமும் அமைக்கவேண்டும்.

கருமந்துறையில் 1,200 ஏக்கரில் பழப் பண்ணை உள்ளது. இங்கு வேளாண்மைக் கல்லூரி அல்லது ஆராய்ச்சி மையம் அமைக்க ஆவன செய்யவேண்டும்.

ஏற்காடு ஏரியை மேம்படுத்தி சுற்றுலாவினை வளர்ச்சிபெறச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

ஏற்காடு மற்றும் கருமந்துறை பகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான நிலத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதனை சர்வே செய்து, அரசு நிலத்தினை கையகப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், மலைவாழ் மக்கள் மற்றும் ஆதி திராவிட மக்கள் இங்கு 50 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகட்டி வசித்து வருகின்றனர். இவர்களுக்கு பட்டா வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

***திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாட்டின் தன்னிகரில்லா தலைவி, தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை பெற்ற மாநிலமாக மாற்ற, அல்லும், பகலும் அயராது, கண் துஞ்சாமல் உழைத்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் கலந்து கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

இது தூய தாயின் தொண்டில் விளைந்த துண்டு விழாத பட்ஜெட். தமிழகத்தின் வளமையைப் பெருக்க, தரணி வியக்கும் புதுமை படைக்க, வாஞ்சமிகு தாய் வழங்கும் வரியில்லாத நிதிநிலை அறிக்கை. வழக்கம்போல் வாரித் தருவதிலும் குறைவில்லை. வான் மழை பொய்த்தாலும், வான் மழை பொய்த்தாலும் வள்ளல் தாய் மனம் பொய்க்காது என்பதை மெய்ப்பிக்கும் வகையில், அளிக்கும் சலுகைகளைக் கணக்கிட்டுப் பார்ப்பதற்கு விரல்கள் பத்தும் போதாது.

மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மழைக் கால பராமரிப்பு உதவித் தொகையைப் பரிவோடு தருகிறது. அம்மா உணவகத்தால் அன்னம் வார்த்து, அம்மா உணவகத்தால் அன்னம் வார்த்து, அம்மா குடிநீரால் தாகம் தீர்த்து, தாராளம் காட்டுகின்ற தாய்மைக் கரங்கள், இப்போது அம்மா மருந்தகத்தால் பிணி தீர்க்கும் பணியிலும் பிரவேசம் காட்டியுள்ளது.

வள்ளல்கள் ஏழு. வள்ளல்கள் ஏழு வரிசையில் வந்துதித்திட்ட எட்டாம் வள்ளல். வள்ளல்கள் ஏழு. வள்ளல்கள் ஏழு வரிசையில் வந்துதித்திட்ட எட்டாம் வள்ளல். (மேசையைத் தட்டும் ஒலி) பல்லாயிரம் கோடிகளை பள்ளிக்கும், கல்விக்கும் அள்ளித்தரும் கலைமகள். பள்ளிக்கும், கல்விக்கும் பல்லாயிரம் கோடிகளை அள்ளித்தரும் கலைமகள். மரத்தடி வகுப்புகளை மடிக்கணினி வகுப்புகளாக்கிய எங்கள் மாதரசியே!

மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர உதவியை ரூ.1,500/- ஆக உயர்த்தித் தந்த எங்கள் ஒப்பற்ற தலைவியே.! (மேசையைத் தட்டும் ஒலி)

ஆலயம், தர்கா என ஆண்டவன் உறையும் இடம் யாவும் அன்னமிட்டு மகிழும் எங்கள் அன்ன இலட்சுமியே.!

விலையில்லா அரிசியால் பசி என்னும் பிணி போக்கும் எங்கள் பாரதத் தாயே.! கறவை மாடு தந்து, செம்மறி ஆடுகள் தந்து வறியவர் வாழ்வை உயர்த்திட வந்துதித்த எங்கள் வாழ்வரசியே.!

அம்மி, குழவி கல்லிலிருந்து மிக்சி, கிரைண்டர், மின் விசிறி என்னும் விஞ்ஞான யுகத்திற்கு தாய்க் குலத்தை அழைத்துவந்த எங்கள் தமிழரசியே.! (மேசையைத் தட்டும் ஒலி)



மங்கையர் வாழ்வின் துயர் துடைக்க தாலிக்குத் தங்கமும், மங்கையர் வாழ்வின் துயர் துடைக்க தாலிக்குத் தங்கமும், திருமண உதவித் தொகையும் அள்ளித் தரும் எங்கள் அன்பரசியே.!

தியாகிக்குத் தியாகியாகி, யோகிக்கு யோகியாகி ஊருக்கே உழைத்திட்ட உத்தமராம், ஊருக்கே உழைத்திட்ட உத்தமராம் தேவர் திருமகனாருக்கு பொற்கவசம் சூட்டிய எங்கள் பொன்மனத் தலைவியே.! (மேசையைத் தட்டும் ஒலி)

கன்னியமிக்க காவல் துறையை நவீனமயமாக்கி கம்பீரத்தைக் காத்திடவும், கூவத்தைத் தூய்மை செய்து சுற்றுச்சூழல் காத்திடவும், அலுங்காத, குலுங்காத சாலையென அழகுற அமைத்திடவும், மின் மிகை மாநிலமாக தமிழகத்தை மாற்றிடவும், பொது விநியோகத் திட்டத்திலும் புரட்சிகளைப் படைத்து வரும் எங்கள் புரட்சித் தலைவியே!

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் மக்களைக் காத்திட ரூபாய் 757.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்மூலம் ஏழைக் குடும்பக் கர்ப்பிணிப் பெண்களுக்காக இந்த நிதியாண்டில் ரூபாய் 716.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், மொத்தத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு மட்டும் 7,005.02 கோடி ரூபாய் நிதியை உயர்த்தி வழங்கியுள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தமிழகத்திலுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தரமான, இலவச பள்ளிக் கல்வியை வழங்கிட இந்த நிதியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு 17,731.71 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. உயர் கல்வியில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தும் வகையில், உயர் கல்வித் துறைக்கு மட்டும் 3,627.93 கோடி ரூபாய் நிதியை இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்து, கல்வித் துறையில் மாபெரும் புரட்சியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்துள்ளது என்று சொன்னால், அது மிகையாகாது.

தமிழகத்தில் இதுநாள்வரையில் மண்பாண்டத் தொழிலாளர்களின் நலன் குறித்து சிந்திக்காதவர்கள் மத்தியில், மாண்புமிகு அம்மா அவர்கள், மழைக் காலங்களில் மண்பாண்டங்கள் செய்வது கடினம் என்பதை உணர்ந்து, அக்காலங்களில், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு 4 ஆயிரம் ரூபாய் பராமரிப்பு உதவித் தொகை வழங்கி, அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றியுள்ளார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கை திறம்பட நிருவகித்து வருகின்ற, கண்ணியமிக்க காவல் துறையை மேலும் நவீனமயமாக்கி, புதிய சவால்களை எதிர்கொள்வதற்காக 5,186.20 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, காவல் துறையின் கம்பீரத்தையும், கண்ணியத்தையும் கட்டிக் காத்து சாதனை படைக்கும் ஒப்பற்ற தலைவிதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுமக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பொதுமக்களுக்கென போக்குவரத்து வசதியை மேம்படுத்தவும், நம்பகத்தன்மையுள்ள போக்குவரத்து வசதிகளை உறுதி செய்திடவும், ரூபாய் 200 கோடி செலவில் பழைய பேருந்துகளை மாற்றி, 1,000 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு நிதியை ஒதுக்கி சாதனை படைத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்கிட வேண்டுமென்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உன்னத குறிக்கோளின்படி, 2014-2015 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மைத் திட்டத்தின்கீழ், 323 கோடி ரூபாய் செலவில் பல்வேறு துணைத் திட்டங்களைச் செயல்படுத்தி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சாதனைகள் செய்து வருகிறது. விவசாயிகளின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கூட்டுறவு அமைப்பின் மூலமாக விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்குவதற்கு, இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு, 5 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மேலும், பயிர்க் கடனை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வரி இல்லாத கடன் வழங்குவதற்காக, முழு வட்டி சலுகையை அளிக்க 200 கோடி ரூபாய் நிதியை



ஒதுக்கீடு செய்துள்ளார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தி வரும் நிலையில், 2014-2015 ஆம் ஆண்டில் நபார்டு மற்றும் தேசிய வேளாண் உற்பத்தி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பால் பண்ணைகளின் திறனை உயர்த்த 25 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியதுடன், பால் உற்பத்தித் துறைக்காக 70.67 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் முன்னோடித் திட்டங்களில் ஒன்றான தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம், அதாவது தாய் திட்டத்தின் மூலமாக கிராமங்களுக்கு குடிநீர் வழங்குதல், சாலை வசதிகள் செய்து தருதல், தெரு விளக்குகள் அமைத்துக் கொடுத்தல், மயான வசதி செய்து தருதல் போன்ற அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, கிராமங்களிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து, பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வரும் இத்திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 750 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையில் உதித்த சிறப்பான திட்டங்களில் ஒன்றான சூரிய மின் வசதி கொண்ட பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் வரும் ஆண்டில் 60,000 வீடுகள் கட்டுவதற்காக 1,260 கோடி ரூபாயும், இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 1,06,000 வீடுகள் கட்டுவதற்காக மாநில அரசின் பங்காக 729.69 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்து, தமிழகத்தில் உள்ள கூரை வீடுகளை எல்லாம் முற்றிலும் அகற்றி விட்டு, அதற்குப் பதிலாக தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகள் கட்டித்தரும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது.

மேலும், சாலை கட்டமைப்பு மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு,

தமிழகத்தில் உள்ள 1,500 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சாலைகளை அகலப்படுத்தவும், 3,500 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சாலைகளை மேம்படுத்தவும் 2,800 கோடி ரூபாயை இத்துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதனைகளுக்கு எல்லாம் சாதனையாக, சாதனை படைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

பொதுவாக, தேர்தலை சந்திக்கின்ற நேரத்தில், ஆளுகின்ற கட்சி, மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக ஏராளமான இலவசத் திட்டங்களை, மானியங்களை அள்ளிக் கொடுப்பது வழக்கமான ஒன்றாகும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த பட்ஜெட்டில் அப்படி ஒன்றும் செய்யாமல், இது 'தேர்தலுக்கான பட்ஜெட் அல்ல, மக்களுக்கான பட்ஜெட்' என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளதாக (மேசையைத் தட்டும் ஒலி) பத்திரிகைகளும், ஊடகங்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் புகழ்ந்து, பாராட்டிக்கொண்டிருக்கின்றன. ஆனால், பாராட்ட மனம் இல்லாத தி.மு.க. தலைவர் கருணாநிதியோ இந்த பட்ஜெட்டை, 'பஞ்சு மிட்டாய்' பட்ஜெட் என்று ஏளனம் கூறுகின்றார். ஏனென்றால், அவருக்கு பஞ்சு மிட்டாய் தான் பிடிக்கும்; ஸ்பெக்ட்ரம் ஊழல்தான் பிடிக்கும்; மகள் கனிமொழி என்ன செய்தாலும் அவரைக் காப்பாற்றுவதுதான் பிடிக்கும்; அவருடைய பிள்ளைகளையும், பேரன்களையும் காப்பாற்றுவதுதான் பிடிக்கும்: ஊழல் மட்டும்தான் பிடிக்கும். அப்படிப்பட்டவருக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துகொண்டிருக்கிற சாதனைகள் எப்படி பிடிக்கும்? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரிக்கு வரி, வரியில்லாத பட்ஜெட்டை தந்திருப்பது எப்படி பிடிக்கும்? கருணாநிதி என்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் புகழ்ந்து பேசியிருக்கிறார்? பாராட்டிப் பேசியிருக்கிறார்? இகழ்ந்து பேசித்தான் அவருக்குப் பழக்கம். அவர்களுக்குத் துணை போகின்ற, ஊழலை எதிர்க்கிறேன் என்று ஊழலை செய்து கொண்டிருக்கிறவர்களைப் பார்க்கப் போகின்றவர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துகொண்டிருக்கும் சாதனைகள் எல்லாம் தெரிய வாய்ப்பில்லை.



தமிழக மக்கள் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் நல்ல தீர்ப்பு வழங்குவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை பாரதப் பிரதமராக்குவதற்காக 40 தொகுதிகளிலும் அவர்களை வெற்றி பெறச் செய்வதற்கும், அவர்களுக்கு நன்றி சொல்வதற்கும் தமிழக மக்கள் எல்லாம் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று இந்த நல்ல வேளையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அத்தனை துறைகளுக்கும் போதிய நிதி ஒதுக்கீடு செய்து, 5 ஆண்டுகளில் ஓர் அரசு செய்ய வேண்டிய பணிகளை பதவியேற்ற மூன்றே ஆண்டுகளில் செய்து முடித்து, மக்கள் மனம் குளிரும் வகையில், மாட்சிமைமிக்க ஆட்சி செய்து, இந்தியாவில் தமிழகமே இணையில்லா மாநிலம் என வரலாற்றுப் புரட்சிதனை படைத்துவரும் வல்லமை கொண்ட தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிற வரியில்லா நிதிநிலை அறிக்கைக்கு வரலாற்றில் எதுவும் நிகரில்லை, நிகரில்லை. வரியில்லா நிதிநிலை அறிக்கைக்கு வரலாற்றில் எதுவும் நிகரில்லை, நிகரில்லை. 'பார் வியக்கும் புதுமைப் பெண்ணே, பாரதம் இனி உங்கள் பின்னே' (மேசையைத் தட்டும் ஒலி) 'பார் வியக்கும் புதுமைப் பெண்ணே, பாரதம் இனி உங்கள் பின்னே' என்று கூறி, வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவையில் உட்கார்ந்து கொண்டு பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) அந்த மாதிரி பேசக்கூடாது என்று நான் வன்மையாகச் சொல்லியிருக்கிறேன். திரும்பத் திரும்ப அதே தவறைச் செய்கிறீர்கள். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். (குறுக்கீடு) உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் அளிக்கப்பெற்ற இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் முதற்கண் என் நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். வள்ளுவரோ வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தார்; கம்பரோ வாழ்வியலுக்கு இலக்கியம் படைத்தார்; நம் முதலமைச்சர் அவர்களோ தமிழக மக்கள் உயர்வு பெற ஆட்சி புரிகிறார்; நல்லாட்சி புரிகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-40*

எண்ணியதைச் செயலாக்கி, ஏற்றங்களை உருவாக்கி, கண்ணியத்தின் வடிவாக இருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு வணக்கம். ஒரு தலைவன் காலத்தை உருவாக்குகிறான் என்பது எவ்வளவு உண்மையோ, அதைவிட உண்மை ஒரு காலம் ஒரு தலைவரை உருவாக்கியது என்பது. அந்த வகையில், காலம் உருவாக்கிய தலைவிதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை புதிய வரிகளே இல்லாத ஒரு சிறப்பான அறிக்கை. இதை நான் முதலில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, நிதிநிலை அறிக்கையில், ஆரம்பத்திலேயே புதிய வரிகள் இல்லாதது மிக, மிக அற்புதம். 2011-2012-ல் 23,535 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீடு; 2012-2013-ல் திட்ட ஒதுக்கீடு 28 ஆயிரம் கோடி ரூபாய்; 2013-2014-ல் திட்ட ஒதுக்கீடு 37 ஆயிரம் கோடி ரூபாய்; 2014-2015-ல் திட்ட ஒதுக்கீடு 42,185 கோடி ரூபாய் என்ற அளவில் திட்ட ஒதுக்கீடுகள் அமைய பெற்றுள்ளன. மக்களைப் பற்றிச் சிந்தித்து, பல திட்டங்களை, தேர்தல் களத்தில் மட்டுமல்ல; மக்கள் நல்வாழ்விற்காகவும், அவர்களின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் உயர்த்துவதற்காகவும் பல திட்டங்களை வகுப்பதற்கு திட்ட ஒதுக்கீடு முக்கியம். ஆகவே, அந்த வகையில் திட்ட ஒதுக்கீடாக 42,185 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்க ஒன்றுதான்.

மக்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்; அவர்களின் தேவைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். எந்தத் துறைக்கு உடனடி



கவனம் தேவை என்பதை உணர வேண்டும். அதையெல்லாம் உணர்ந்துதான் இந்தத் திட்ட ஒதுக்கீடு வகுக்கப்பட்டிருக்கிறது என்றால், அது மிகையாகாது. ஒரு மாநிலத்தின் சிறப்பு பல துறைகளின் முன்னேற்றத்தில் இருந்தாலும், சட்டம்-ஒழுங்கு மிக, மிக அவசியம். இதை மனதில் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டுவரும் காவல் துறைக்கு ரூ.5,186.20 கோடி நிதியொதுக்கி, இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைத் திட்டத்தை உருவாக்கியிருப்பது மிக, மிகச் சிறப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிடச் சிறப்பு, 10,099 இளைஞர்களுக்கு அதன்மூலம் வேலைவாய்ப்பு அளித்திருப்பது. இன்றைக்கு வேலைவாய்ப்பினை அதிகரிக்கவேண்டும் என்ற சூழ்நிலையிலே, இளைஞர்களை, படித்த இளைஞர்களை அதிக அளவில் வேலைவாய்ப்பிலே அமர்த்த வேண்டுமென்ற எண்ணத்திலே, சீரிய முறையில் ஒவ்வொரு திட்டமாகச் செயல்படுத்தி, அந்தச் சிறப்புக் காவல் இளைஞர் படைத் திட்டத்தின்மூலமாகவும் 10,099 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திருப்பது என்பது, நிச்சயமாக இளைஞர்கள் மத்தியிலே, இது ஒரு மிகப் பெரிய வரவேற்பு பெறும் என்பதை உறுதி செய்கிறது.

அடுத்து, விவசாயம்; ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு விவசாயம் மிக, மிக அவசியம். சுதந்திரத்திற்கு முன்பே மகாத்மா காந்தியடிகள் விவசாயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்திருக்கிறார்கள். நாம் உணவுப் பொருட்களுக்காக வெளிநாட்டவரிடம் கையேந்தக் கூடாது. (குறுக்கீடு) நமது நாட்டிலேயே உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலும் (குறுக்கீடு) விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, விவசாயிகளை நாம் ஊக்குவிக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், விவசாயிகள் முன்னேற வேண்டும், அப்போதுதான் பொருளாதார அடிப்படையில் நாம் முன்னேற முடியும் என்ற அடிப்படையிலும், விவசாயத்திற்கு ஊக்கமளிக்க வேண்டும் என்று மகாத்மா காந்தியடிகள் அவர்கள் சொன்னதைப்போல, இன்றைக்கு அதற்கு செயல் வடிவம் கொடுத்துக் கொண்டிருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்.

முக்கியமாக, இந்த நிதிநிலை அறிக்கையில், முன்பைவிட தற்போது பயிர்க் கடனை 5 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தியிருப்பது மட்டுமல்லாமல், குறிப்பிட்ட காலத்திற்குள்

விவசாயிகள் பயிர்க் கடனைத் திருப்பிக் கொடுக்கும்போது, முழு வட்டிச் சலுகையை வழங்கியிருப்பது, அதற்காக 200 கோடி ரூபாய் இந்த ஆண்டே அறிவித்திருப்பது மிக, மிக அருமை. அது விவசாயிகளுக்கு நிச்சயமாக உந்துதலாக இருக்கும் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை' என்பது போல, பொருள் இல்லாமல் எந்த அரசும் இல்லை. எனவே, அப்பொருளை ஈட்ட வல்ல வருவாய்த் துறையை மேம்படுத்தும் விதமாக, அத்துறையைக் கணினிமயமாக்க 'இணைய நில ஆவண மேலாண்மைத் திட்டம்' ஒன்று புதிதாகத் தொடங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

"Go to the people; Live among them; Learn from them" என்று ஒரு தலைமைப் பண்பின் இலக்கணமாக அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள் என்றே சொல்லலாம். தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நிகர் அவரே. இந்த ஆண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு 4,200 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. வரும் நிதியாண்டில் 35 இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லா மின் விசிறி, கிரைண்டர் வழங்க 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியும், தேவைப்படும் இடங்களில் 17.50 கோடி ரூபாய் செலவில் பணிபுரியும் பெண்களுக்குத் தங்குவதற்காக 14 விடுதிகள் புதிதாக அமைக்கவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் வேண்டி 7,603 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் உயிரோடு இருப்பது மட்டும்தான் வாழ்க்கையா என்றால், அல்ல, அவர்கள் உயர்வோடு இருப்பதுதான் வாழ்க்கை என்ற உயர்ந்த எண்ணமுடையவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் என்பது இதன்மூலம் நிரூபணமாகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-45*

மிகச் சிறிய விஷயங்களில்கூட சிறந்த கவனம் செலுத்துபவர்கள் உயர்ந்த மனிதர்களாகிறார்கள் என்றார் Stanley Ford என்ற பிரிட்டிஷ் வரலாற்று ஆசிரியர். அத்தகைய உயர்ந்த மனிதராம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் நிறையிலே



குறை காணாது, குறையிலே நிறை காண்கின்ற சிறு கூட்டம் ஒன்று அவரது புகழை மங்க வைக்க மங்காமல் பாடுபடுகிறது. அவையெல்லாம் இயலாமையின் வெளிப்பாடு. வரும் பாராளுமன்றத் தேர்தலில் 40 இடங்களிலும் புரட்சித் தலைவி அவர்களின் கூட்டணி வெற்றி பெற்றுவிடுமே என்ற ஏக்கத்தின் வெளிப்பாடு என்றே சொல்லலாம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அறிவு என்பது நதியைப் போன்றது. அது எவ்வளவு ஆழமாக இருக்கின்றதோ அந்த அளவு அமைதியாகவும் இருக்கும். அந்த நதி போன்றவர்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* Never change your originality because no one can play your role better than you. So be yourself என்று இவரை நினைத்துத்தான் சோவியத் புரட்சியாளர், சமூக சீர்திருத்தவாதி லெனின் அவர்கள் அன்றைக்கு சொல்லியிருப்பரோ என்று இன்றைக்கு நினைக்க வேண்டியிருக்கிறது.

புரட்சித் தலைவி அவர்களே, உங்கள் முன்னேற்றத்திற்கு முகவரியாய் இருப்பது உங்கள் எண்ணங்களே. உங்கள் எண்ணங்கள் தகுதி என்ற வார்த்தைக்குள் அடங்கும். தன்னம்பிக்கை, குறிக்கோள், திட்டம் போன்றவை தகுதியாகிறது. இதை 'A poor leader speaks, an ordinary leader explains, a good leader demonstrates, a best leader inspires' என்பேன். அதாவது, செயலாண்மை உள்ள தலைவர் பேசுவார்; சாதாரண தலைவர் விளக்குவார்; நல்ல தலைவர் செய்து காட்டுவார்; உன்னதத் தலைவர் உள்ளத்திலே ஒளியூட்டுவார். அப்படிப்பட்ட தலைவர்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இப்படி மக்களுக்காக, மக்களைப் பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கும் தொலைநோக்குப் பார்வையுள்ள தலைவி,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

என்ற வள்ளுவரின் வாய்மைக்கு வலிமை சேர்க்கும்விதமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிந்தித்து, இன்று தமிழகத்தின் தலைப்பாகையாம் சென்னையில், ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் ஒரு பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையும்,

தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலியில் ரூ.300 கோடியில் நவீன விபத்து சிகிச்சை மையங்களுடன்கூடிய சிறப்பு பல்நோக்கு மருத்துவமனையும், 210 அம்மா மருந்தகங்களும் தொடங்கியிருப்பது பாராட்டுக்குரியது.

நெப்போலியனிடம் உங்கள் படையில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று ஒருமுறை ஒருவர் கேட்டார். அதற்கு அவரோ நான் இல்லாமல் 50,000 பேர் என்று சொன்னார். அவர் மீண்டும் உங்களையும் சேர்த்து எத்தனை பேர் என்று கேட்டார். என்னைச் சேர்த்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் என்று அவர் சொன்னார். அது அவரது தன்னம்பிக்கையையும், நம்பிக்கையையும் காட்டியது. அப்படிப்பட்ட தன்னம்பிக்கையும், நம்பிக்கையும் உள்ள தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இயற்கை இடர்பாடுகளால் தமிழகத்திற்கு பாதிப்பு ஏற்படும்பொழுது நிதி வழங்கக் கோரி முதல்வர் அவர்கள் பலமுறை பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதி வழங்கக் கோரி கடிதம் எழுதியது பொதுமக்களுக்காக. ஆனால், பெயரிலே நிதியும், காற்றிலே கருணையும் கலந்த ஒரு தலைவர் பிரதமருக்குக் கடிதம் எழுதுகிறார் என்று சொன்னால், அது அவரின் மக்களுக்காக. மத்திய அரசு தமிழகத்தை மாற்றாந் தாய் மனப்போக்கோடு பார்க்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழக அரசுக்கு மத்திய அரசு வழங்க வேண்டிய மானிய நிதியை மறைமுகமாகத் தலையிட்டு முடக்குகிறார்கள். மத்திய அரசுக்கு அளித்த ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளோம் என்று மக்கள் மத்தியில் தெரிவித்தாலும், மத்திய அரசுடன் அவர்கள் மறைமுகக் கூட்டணி வைத்துள்ளார்கள். மத்திய அரசுடன் மறைமுகக் கூட்டணி வைத்துக்கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவியின் பின் நிற்கும் தமிழக மக்களை வஞ்சிக்கிறார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைவிலேயே 66-ஐக் காணப் போகிறார்கள். அவருக்கு அவைவாயிலாக என் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள் double six-ஐக் கண்டபின்னால்தான், அவருக்கு



double success வரப்போகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் double six-ஐக் கண்டபின்னால்தான், அவருக்கு double success வரப்போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்று நாற்பதிலும் வெற்றி. இரண்டு, பாரதப் பிரதமராவதிலும் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

"பொல்லா வினையே நின் பெருஞ்சீர் புகழுமாறு ஒன்றறியேன்" என்று மாணிக்கவாசகர் தன் திருவாயால் புகழ்ந்துரைத்த மொழிகளையே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு சமர்ப்பித்து, இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, எனது தொகுதி மக்களின் சார்பாகவும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும், விவாதத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் நன்றி தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அளித்திருக்கின்ற நடப்பாண்டினுடைய நிதிநிலை அறிக்கைமீது எங்களுடைய கருத்துகளை பதிவு செய்வதற்கு ஒரு வாய்ப்பளித்திருக்கின்ற தங்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கின்றேன். இந்த நிதிநிலை அறிக்கை நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கியிருக்கின்ற மாநில அரசு வெளியிட்டுள்ள நிதிநிலை அறிக்கை. இந்த நிதிநிலை அறிக்கையிலே புதிதாக எதுவுமேயில்லை, சொல்வதற்கு எதுவுமேயில்லை, திட்டங்கள் இல்லை என்றெல்லாம் இந்த மன்றத்திற்கு வந்து, தங்கள் கருத்துகளைச் சொல்ல முடியாதவர்கள் வெளியேயிருந்து வாய்கிழிய பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-50

எது புதிது என்பதன் விளக்கமாக ஒரு தத்துவ மேதை வளர்ச்சிகளின் வடிவம் என்று சொன்னார். புதிது என்பது வளர்ச்சிகளின் வடிவமாக இருக்க முடியுமே தவிர புதிது என்று ஒன்று இந்த உலகத்திலேயே இல்லவேயில்லை என்று ஒரு தத்துவ மேதை சொல்லியுள்ளார்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், ஒட்டுமொத்த தமிழக மக்களின் வளர்ச்சிக்கான, வளர்ச்சிகளின் தொகுப்பான நிதிநிலை அறிக்கையாக, அந்த வளர்ச்சிகளின் அணிவகுப்பாக இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிக மக்கள்தொகையை உள்ளடக்கிய ஒரு நாட்டில், அதிலும் குறிப்பாக, தனது மக்களில் 30%க்கு மேலே அன்றாட உணவு இல்லாமல் வாடிக்கொண்டிருக்கின்ற ஒரு நாட்டில், நிதிநிலை அறிக்கை என்பது ஒட்டுமொத்த மக்கள்தொகையிலே 70% வரையில் வறுமைக்கோட்டிற்குக்கீழே இருப்பதாக கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும், ஒரு நாட்டினுடைய நிதிநிலை அறிக்கை என்பது முழுக்க, முழுக்க மக்கள் நலத்தை, மக்களின் வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்டதாக அமைய வேண்டும். அந்த வகையில், நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உண்ண உணவு தருகிறார், உடுக்க உடை தருகிறார், இருக்க இடம் தருகிறார். இந்த மூன்று அடிப்படை அத்தியாவசியத் தேவைகளை ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கு உத்தரவாதத்தோடு தந்து கொண்டிருக்கின்ற ஓர் அரசு என்றால், இந்திய துணைக் கண்டத்திலே இருக்கக்கூடிய 28 மாநிலங்களில் தமிழ் மாநிலம் (மேசையைத் தட்டும் ஒலி) மட்டும்தான் முதல் மாநிலம் என்று சொல்லக்கூடிய, தகுதிமிக்க மாநிலமாய் நம்முடைய மாநிலத்தினுடைய ஆளுமை இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கை முழுக்க, முழுக்க அதை வெளிப்படுத்துகிற வகையிலே அமைந்திருக்கின்றது.

நம்முடைய மொத்த நிதி ஒதுக்கீட்டிலே சற்றேக்குறைய 48 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் திட்டங்கள் நடைமுறைக்கு வருகின்றபோது, மேலும் ஒரு 1,000 கோடி ரூபாய் கூடாலாமே தவிர, குறையப் போவதில்லை. ஆக, 48 ஆயிரம் கோடி ரூபாய்க்கு நலப் பணிகளுக்காக மட்டுமே தரப்படுகிறது என்றால், கிட்டத்தட்ட ½ இலட்சம் கோடி ரூபாய் நலப் பணிகளுக்காக மட்டுமே Welfare schemes-க்காக மட்டுமே ஒரு மாநில அரசு வழங்குகிறது என்றால், அது நம்முடைய மாநில அரசாகத்தான் இருக்க முடியும். அவ்வளவு நிதியை நலப் பணிகளுக்காக வாரி, வாரி வழங்கிக்கொண்டிருக்கிற அரசாக நம்முடைய அரசு



இருக்கிறது. 48 ஆயிரம் கோடி ரூபாய் என்பது ஒரு சாதாரண தொகையல்ல.

பெரும் கடன் சுமையோடு நிர்பந்தப்பட்டிருக்கின்ற நிலையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் கட்டிலுக்கு வந்தார்கள். முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். முதலமைச்சராகப் பொறுப்பேற்று நலப் பணிகளுக்காக இவ்வளவு நிதி ஒதுக்கீட்டை தாராளமாக, ஏராளமாக ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நாளும் வழங்கிக் கொண்டிருக்கிறார்.

இதனைப் பார்த்த பொருளாதார நிபுணர்களே வியந்து, ஏன் மத்திய அரசின் திட்ட ஆணையமேகூட வியந்து, மத்திய அரசில் உள்ள பல்வேறு துறைகளும்கூட வியந்து இது எப்படி முடிகிறது, எப்படி சாத்தியமாகிறது, எப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று வியந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு மக்களுக்காக, மக்கள் என்பதன் இலக்கணத்திற்கு, மக்கள் ஜனநாயகத்திற்குச் சொந்தமான welfare government என்பதற்கு, ஓர் இலக்கணமாய் நம்முடைய அரசு இன்றைக்கு திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றி, செயல்படுத்திக்கொண்டு வருகிறது என்பதைப் பார்க்கும்போது, நான் அதனை உளமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உண்ண உணவு என்கிற வகையில் 20 கிலோ அரிசி, உடுக்க உடை என்கிற வகையில் வேட்டி-சேலை, பள்ளிகளில் படிக்கின்ற, அதாவது பால்வாடியிலிருந்து கல்லூரி மாணவர்கள் வரையில் படிப்பவர்களுக்கான உடுக்க உடை, அதற்குமேல் இருக்க இடம் என்கிற வகையில் 2,10,000 பசுமை வீடுகள், அது இன்றைக்கு 20,000 என கூடி, மொத்தம் 2,30,000 பசுமை வீடுகள், சூரிய ஒளியிலிருந்து தயாரிக்கப்படுகின்ற மின்சாரத்தோடுகூடிய பசுமை வீடுகள், என அதனுடைய இலக்கு கூடிக்கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. ஆக, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இதைத் தந்து, அதற்குமேலே கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு இந்த மூன்றும் மனித சமுதாயத்திற்கு அத்தியாவசியமானவை என்பதால் இந்த மூன்றையும் தந்திருக்கிறார்கள். வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையிலே, மூன்று ஆண்டுகாலத்திலே இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புகளை நம்முடைய மாநில

அரசு உருவாக்கியிருக்கிறது. இன்னும் அடுத்த இரண்டு ஆண்டுகாலத்திலே மேலும் இரண்டு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிற அளவிற்கு அதற்கான திட்டங்களுக்கு அடிகோலியிருக்கிறது என்கிறபோது அந்த வேலைவாய்ப்பிற்கான உத்தரவாதம் இப்போதே கிடைத்திருக்கிறது. மருத்துவத்திற்கான உத்தரவாதம். மருத்துவத்தினுடைய தலைநகரமாக நம்முடைய சென்னையே இருக்கிறது என்கிற அளவுக்கு தமிழகம் வளர்ந்திருக்கிறது. இந்த வளர்ச்சி தலைநகருக்கு மட்டும் போதாது என்று திருநெல்வேலி, தஞ்சாவூர் போன்ற நகரங்களுக்கும் கொண்டு போகிற அளவுக்கு உயர் சிகிச்சை அளிக்கிற உயர் மருத்துவமனைகள் வருகிற அளவுக்கு நிதிநிலை அறிக்கையிலே இப்போது நாம் நிதி ஒதுக்கியிருக்கிறோம்.

*முற்பகல் 11-55*

கல்வியைப் பொறுத்தவரையிலே, மடிக்கணினி வழங்குகிற திட்டத்தை சாதாரண ஏழையெளிய கிராமத்து மக்களுக்கும், மாணவர்களுக்கும் தந்து, உலகளாவிய கல்வியில் சாதனையை உருவாக்கியிருக்கிற பெருமையை நம்முடைய தமிழகம் பெற்றிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* நம்முடைய மொத்த நிதி மதிப்பீடு திட்டத்திலே, இதிலே சற்றேறக்குறைய *23½* சதவிகிதம் உயர் கல்விக்காகவும், பள்ளிக் கல்விக்காகவும் ஒதுக்கப்படுகிறது. மொத்தத் திட்ட மதிப்பீட்டிலே அவ்வளவு பெரிய தொகையை கல்விக்காக ஒதுக்குகிற மாநிலமாக நம்முடைய தமிழகம் இருக்கிறது. ஆக, கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு என்பது சமுதாயத்தின் இரண்டாவது கட்டமானால், மூன்றாவது கட்டமான சமூக நீதி, சமூகப் பாதுகாப்பு, சமூக வளர்ச்சி, சமூகக் கட்டமைப்பு ஆகியவற்றிலும் நம்முடைய மாநிலம் ஒரு பிரதான பங்கை வகிக்கிறது. சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்று வாய்கிழியப் பேசலாம். சட்டம் என்பதும், ஒழுங்கு என்பதும் சமூக நீதியின் அடிப்படையில் ஆனது. சமூக நெறியும், சட்ட நெறியும் ஒருங்கிணைந்து ஆற்றுகிற செயல்தான் முழுமையான சமூக நீதிக்கான, சட்ட நீதிக்கான வெற்றியாக இருக்க முடியும். சமூக நெறியும், சட்ட நெறியும் ஒருங்கிணைந்து இருக்க வேண்டும். அதன் ஒருங்கிணைப்புப் பாலமாக நம்முடைய மாநில அரசு செயல்பட்டு வருகிறது. இன்றைக்கு வெளி மாநிலங்களிலிருந்து வந்திருக்கின்றவர்கள், வெளி நாடுகளிலே இருந்து வந்திருக்கின்றவர்கள், பல்வேறு தரப்பட்ட கலாச்சாரத்திலே



உள்ளவர்கள் *30* இலட்சம் பேர் சென்னை நகரத்தில் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்று *30* இலட்சம் பேர் நம்முடைய தலைநகரத்திலே இருக்கிறார்கள் என்றால், அதை குறைந்த மதிப்பீடு என்று சொல்ல முடியாது. இப்படி பலதரப்பட்ட மக்கள் பல்வேறு மாநிலத்திலிருந்து வந்தவர்கள் எல்லாம் வசித்துக் கொண்டிருக்கிற தலைநகரத்திலே, குற்றங்களே ஏற்படாமல் இருப்பதற்கு இதிகாச காலமாக இருந்தாலும் முடியாது. எமனே ஆட்சி செய்தாலும் முடியாது. ஆனால், அந்தக் குற்றங்களைத் தடுப்பதற்கு, குற்றங்களுக்கு தண்டனைகள் வழங்குவதற்கு, என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று அரசின் பொறுப்பை நாம் சார்ந்து, கூர்ந்து பார்க்க வேண்டும் அப்படிப் பார்க்கிறபோது இந்தச் சட்ட நீதியை, சமூக நீதியை தன்னுடைய சுட்டு விரலிலே வைத்திருக்கிற நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள். பிற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது, சட்டம்-ஒழுங்கை சீரியமுறையிலே பராமரித்து, பாதுகாத்து ஓர் அமைதியான மாநிலமாக தமிழகத்தைப் பாதுகாத்து வருகிறார்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்கிறபோது அதையும் நாம் பாராட்டியாக வேண்டும்.

மத்திய அரசின் தவறான கொள்கையினால், ஆந்திரத்திற்கு யாரும் போக முடியவில்லை. வெங்கடாஜலபதியைத் தரிசிப்பதற்குக் கூட யாரும் போக முடியவில்லை. இறைவனின் தலமாக இருக்கக்கூடிய திருப்பதிக்கு, வரவே இப்போது குறைந்துபோனது. ஆந்திராவிலே நிலவுகிற நிருவாகச் சீர்கேட்டை நாம் பக்கத்திலே இருந்து பார்க்கிறோம். அஸ்ஸாமில் தினம், தினம் குண்டுவீச்சு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பஞ்சாப் மற்றும் பிற மாநிலங்களிலே என்ன நடக்கிறது என்று நாம் பார்க்கிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது இன்றைக்கு ஓர் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆட்சியைப் போல நீதிமன்றத்திலேயேவா காவல் துறை நுழைந்து தாக்கியது, கல்லூரியிலே மாணவர்கள் காவல் துறை கட்டுப்பாட்டில் இருக்கும்போதேவா குண்டர்கள் வந்து தாக்க முடிந்தது, சிறைச்சாலைக்குள்ளேயா கொலை நிகழ்ந்தது, இவைதான் சட்டம்-ஒழுங்கு குலைந்து போனதற்கு சான்றுகளாக இருக்க முடியுமே தவிர, எங்கேயோ ஒரு கொலை நடந்தாலோ, எங்கேயோ ஒரு கொள்ளை நடந்தாலோ அதனால் ஒட்டுமொத்த சட்டம்-ஒழுங்கும் சீர்குலைந்துவிட்டது என்று குற்றம் சாட்டினால், அவர்கள் சமூகத்தை அறியாதவர்கள். சட்டத்தை அறியாதவர்கள்.

அவர்களுடைய பார்வையிலே பழுது என்று பொருளே தவிர, அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஒரு மிகப் பெரிய இனக் கலவரம் எழுவதற்கான சூழல் கடந்த ஆண்டு தமிழகத்திலே எழுந்தது. ஆனால், அதை இருக்கிற இடம் தெரியாமல் பொசுக்கி, அடக்கி வைத்திருக்கிறாரே நம்முடைய முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சிக்காலத்தில் முடிந்ததா? கடந்த ஆட்சிக்காலத்திலே தாமிரபரணியே இரத்த ஆறாக மாறியது. மேலவளவிலே படுகொலை நடந்தது.

நண்பகல் *12-00*

இப்படியெல்லாம் கொத்து, கொத்தாய் மானுடம் படுகொலை செய்யப்பட்ட மோதலோ, அவலங்களோ இந்த ஆட்சியிலே நடைபெற்றது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா? ஆகவே, சட்டம்-ஒழுங்கானாலும், சமூக நீதியானாலும் மிகச் சிறப்பாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்காகவும் அரசை நாம் பாராட்ட வேண்டும், வரவேற்கவேண்டும். எந்தவொரு பிரச்சினைக்கும் அதன் ஆழத்தையே, அடி முடியையே எட்டி அதற்குத் தீர்வு காணுகின்ற வகையில் விரிந்து பரந்த நீண்ட நோக்கோடு நம்முடைய அரசு செயல்பட்டு வருகின்றது தேடித் தேடி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்ற நோய் தீர்க்கும் மருந்தாக நம்முடைய அரசின் திட்டங்களும், நடவடிக்கைகளும் இருந்து கொண்டிருக்கின்றன. இதிலே குறிப்பாக நாம் ஒன்றை பாராட்டியாக வேண்டும். ஆதி திராவிடர்களுக்கான துணை நிதிநிலைத் திட்டம் 1980-ல் அன்றைக்குப் பிரதமராக இருந்த அன்னை இந்திராகாந்தியால் வழிவகுக்கப்பட்டது. அந்த நெறிமுறைகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் வெளியிடப்பட்டிருக்கின்ற மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையிலேயே மாறியிருக்கின்றன. அதன் மரபு மாற்றப்பட்டிருக்கிறது, தவிர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, ஆதி திராவிட மக்களின் துணை நிதிநிலை அறிக்கையில் ரூ.6,703 கோடி இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மக்கள்தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப அது ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்கிறபோது அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி முழுமையாக அந்த மக்களுக்குச் சேர்கிற வகையிலே, அந்த மக்கள் பலன் அடைகின்ற வகையில், அந்த மக்கள் அதனை நுகர்ந்து வளர்ச்சி அடைகின்ற வகையில்



அவை முழுக்க அவர்களைச் சென்றடைகிறதா, அவர்களுக்காகச் செலவழிக்கப்படுகின்றதா என்பதை நம்முடைய மாநில அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலோ, நிதி அமைச்சர் அவர்களின் தலைமையிலோ ஒரு கண்காணிப்புக் குழுவினை ஏற்படுத்தி, முழுமையாகக் கண்காணிக்க வேண்டும் என்கிற அந்த உணர்வை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

சென்னை, கூவம் நதி சீரமைப்புத் திட்ட மதிப்பீடான ரூ.3,400 கோடியில் நடப்பு ஆண்டிற்கு ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையில் 1½ கோடிக்கு மேல் மக்கள் வசிக்கின்றனர். இதில் இரண்டு கருத்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒன்று சென்னையினுடைய 30 சதவிகித மக்கள் கூவம் நதிக்கரையோரத்தில் குடிசைவாசிகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சுகாதார வசதியின்றி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கூவம் நதியினை சீரமைக்கின்றபோது அவர்களுக்கு மாற்று குடியிருப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதாவது மாறுதல் என்பது இடம் மாறுதலாக இல்லாமல், குடியிருப்பு மாறுதல்களாக அமைந்து, அப்படிப்பட்ட மறுகுடியிருப்புகளை சுகாதார வசதியுடன் செய்து கொடுப்பதற்கு நீங்கள் திட்டம் தீட்ட வேண்டும். அதற்கான முயற்சியினை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்கிற வேண்டுகோளை வைக்கிறேன். கூவம் நதி சீரமைப்பு என்பதை ஏதோ ஒரு சாதாரண திட்டம் என்று நாம் கருதிவிடக்கூடாது. இன்றைக்கு கடலோரத்தில் அமைந்துள்ள சென்னை நகரம் இத்தனை ஆண்டுகாலம் நிலைத்து நிற்கிறது என்றால், ஒரு பூகம்பம் ஏற்படாமல், பேரழிவு எதுவும் இல்லாமல், எந்தவிதத் தாக்குதலும் இல்லாமல், காப்பாற்றப்படுகிறது என்றால், அதற்கு நம்முடைய பூகோள அறிஞர்கள் கூறும் காரணம், இந்தக் கூவம் நதி அமைந்திருப்பதுதான். இந்தக் கூவம் நதி சுற்றி ஓடிக்கொண்டிருப்பதினால், நீர்ப்பிடிப்பு இருக்கிறது. அதனால் இன்னமும் பெரும் தாக்குதலோ, பேரழிவோ சென்னையில் ஏற்படவில்லை என்று பூகோள அறிஞர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இந்தக் கூவம் நதி சீரமைப்பு என்பது தலைநகரான சென்னையை இன்னும் ஆயிரம் ஆண்டு காலத்திற்குக் காப்பாற்றுகிற ஒரு நீண்ட தொலைநோக்கு, விஞ்ஞான பார்வையோடுகூடிய ஒரு திட்டம் என்கிற வகையில், அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உடல் ஊனமுற்றவர்களுக்குக்கூட மாதாந்திர ஊக்கத் தொகை ரூ.1,500/- ஆக இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கின்றது. தேடித் தேடி சமுதாயத்தால் ஒடுக்கப்பட்டவர்கள், சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவர்கள், சமுதாயத்தில் அலைக்கழிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு தருகின்ற நீள் கையாக அம்மா அவர்களுடைய கருணைக் கை, இந்த ஆட்சியின் கையில் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

மண்பாண்டத் தொழிலாளர்கள் மழைக்காலத்திலே தொழில் செய்ய முடியவில்லை என்பதற்காக அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கியிருக்கிறார்கள். மண்பாண்டம் செய்கின்ற தொழிலாளர்களைக்கூட நினைக்கின்ற ஓர் அரசை எப்படிப்பட்ட வார்த்தைகளால் பாராட்டுவது? மண்பாண்டத் தொழிலாளர்களைக்கூட தேடிப்பிடித்து, அவர்களால் மழைக்காலத்தில் தொழில் செய்ய முடியாது என்பதற்காக ரூ.4,000/- வரை ஊக்கத் தொகை தருகின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றது.

வளர்ந்து வருகின்ற ஊடகத் துறையில் 200 மையங்களைத் தொடங்கி வைத்து, தகவல் தொழில்நுட்பத் துறையை ஆதரிக்கின்ற வகையில் எடுக்கப்பட்டிருக்கிற புதிய முயற்சியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-05

பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக நம்முடைய தமிழகம் உயர் கல்வித் துறையில் செயலாற்றிக் கொண்டு வருகிறது. தனியார் கல்லூரிகளிலே படிக்கிற ஆதி திராவிட, ஒடுக்கப்பட்ட மாணவர்களுடைய கல்விக் கட்டணத்தை அரசே ஏற்றுக்கொள்கிற வகையிலே ஒரு திட்டம் தந்தது. ஆனால், அதற்கு வரையறை ரூபாய் 40,000/- தான். ஏற்கெனவே 60,000/- அல்லது எவ்வளவு கட்டணத்தொகையோ, அது வழங்கப்பட்டது. இப்பொழுது பொறியியல் கல்லூரிகளிலே 60,000/-க்கு மேலே கட்டணத் தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய அரசு ஏற்கெனவே 2 ஆண்டுகளாக வழங்கி வந்த 60,000/-லிருந்து இப்பொழுது 40,000/-ஆகக் குறைக்கப்பட்டு, ரூபாய் 40,000/- என்ற வரையறைக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வரையறைக் கோட்டை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.



தமிழகத்தின் ஒப்பற்ற வரலாற்றான சங்க இலக்கியங்களையெல்லாம் தேடித் தேடி, தமிழகம்தோறும், கிராமங்கள்தோறும் தேடி, சேகரித்துத் தந்த தமிழ்த் தாத்தா உ.வே.சா.வினுடைய பிறந்தநாள் இந்த மாதம் வருகிறது. பொதுவுடைமைத் தந்தை, பொதுவுடைமைச் சித்தாந்த மேதை, சாதி மறுப்புத் திருமணத்திற்கு இலக்கணமாக இருந்த மாபெரும் சமூகப் புரட்சியாளர், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருடைய பிறந்தநாள் தினத்தை தமிழகத்திலே நேற்றைக்குக் கொண்டாடினோம். இன்றைக்கு உ.வே.சா.வைக் கொண்டாடுகிறோம். இந்த மாதம், ஒரு புனித மாதம். உலக ஜனநாயகத்தின் தொட்டிலாக இருக்கிற அமெரிக்காவுக்கு ஜனநாயக நெறிமுறைகளை வகுத்துத் தந்த ஆபிரகாம் லிங்கன் பிறந்த மாதம். இந்த மாதம் உலகத்திற்கு பரிணாமக் கொள்கை, evolution என்கிற அந்தக் கொள்கையைத் தந்து, வலிமையே மிஞ்சும் என்கிற இயற்கைச் சித்தாந்தத்தைத் தந்த டார்வின் பிறந்த மாதம். இந்த மாதம் உலகத்துக்கே ஒளி தந்த மின்சாரத்தைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன் பிறந்த மாதம். விஞ்ஞானப் பார்வையை உலகுக்குத் தந்த மிகப் பெரிய விஞ்சானி கலிலியோ பிறந்த மாதம். இந்த மாதம் சாதாரண படிப்பறிவில்லாத மனிதனாகப் பிறந்து ஆன்மிகத்தை போதித்த சுவாமி விவேகானந்தருக்கு குருவாக இருந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் பிறந்த மாதம். முதன்முதலில் இந்தியாவிலே மிகப் பெரிய சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கிய மண்ணின் மைந்தர் சத்ரபதி சிவாஜி பிறந்த மாதம். 1830-லே டில்லிதான் இந்தியாவினுடைய தலைநகரம் என்று அறிவிக்கப்பட்ட மாதம் இந்த மாதம். இந்த மாதம்தான் டில்லி செங்கோட்டையை ஆளப்போகிறவர் (மேசையைத் தட்டும் ஒலி) அவதரித்த மாதம். உலகளாவிய சிந்தனையை உருவாக்கப் போகிறவர் பிறந்த மாதம். இந்தியத் துணைக் கண்டத்திற்கே நம் மாநிலம்தான் வழிகாட்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தினை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள், கட்சிக்காரர்களை ஒழுங்குபடுத்துவதற்கும், தகுதி படைத்தவர்களாக உருவாக்குவதற்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று தாரக மந்திரங்களைத் தந்தார். பல்லாண்டு காலமாக ஜனநாயகம் இருந்தாலும், ஜனநாயகத்தை நெறிப்படுத்த முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிற மத்திய ஆளுமையைத் தூக்கி நிறுத்துகிற, அமைதி, வளம், வளர்ச்சி என்கிற அற்புதமான தத்துவத்தைத் தந்திருக்கிற அந்த அற்புதம் பிறந்திருக்கிற மாதம் இந்த மாதம். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளோடு, வாய்ப்பளித்த உங்களுக்கும் நன்றி சொல்லி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** துணைத் தலைவர் என்று சொல்லக் கூடாதா?

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால் நூற்றாண்டு காலம் சிறைப்பட்டுக் கிடந்த 7 தமிழர்களை விடுவிக்க தமிழ்ச் சமுதாயத்தின் ஒப்பற்ற ஆட்சித் துறைத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மாமன்றத்திலே இன்று ஓர் அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். 3 தமிழர்களின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற வேண்டும் என்ற தீர்மானத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் சட்டமன்றத்திலே நிறைவேற்றினார்கள். 7 கோடி தமிழர்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற அந்தத் தீர்மானம் சட்டமன்றத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்களால் எப்படி முன்மொழியப்பட்டதோ, அதனை 140 கோடிக்கும் மேற்பட்டிருக்கின்ற மக்கள் வாழும் இந்திய தேசத்தின் நீதி நிருவாகத்தினை பரிபாலனம் செய்யும் உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி, பச்சைத் தமிழர் ஐயா சதாசிவம் அவர்கள் இசைவாக ஏற்கின்ற நிகழ்வாக நேற்று அந்தத் தண்டனைக் குறைப்பு நடந்திருக்கின்றது. இந்த நாள் தமிழ் சமூகத்தினுடைய நீதி நிருவாக வரலாற்றில் மிக முக்கியமான நாள்.

பிற்பகல் 12-10

தானத்தில் சிறந்தது இரத்த தானம். பல்வேறு வகை நோய்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் சிகிச்சை நேரத்தில் இரத்தம் இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள். கண்தானத்தைப்போல இதுவும் மிக முக்கியமான தானம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் சுமார் 53,000 நபர்களிடமிருந்து 20,000 லிட்டர் வரை இரத்தம் சேகரிக்கப்பட்டது. போக்குவரத்துத் துறை ஊழியர்களிடமிருந்து அவர்கள் விருப்பத்தின்பேரில் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு ஐயா செந்தில்



பாலாஜி அவர்களின் முயற்சியால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நடவடிக்கையால் இந்த வரலாற்றுச் சாதனை கின்னஸ் புத்தகத்திலே இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வு, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்வு. (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்திலேயே 53,000 பேர் இரத்தம் தந்து, அதன்மூலம் சுமார் 20,000 லிட்டர் இரத்தம் சேகரிக்கப்பட்ட இந்த நிகழ்வுகூட உலகத்தில் இதுவரை எந்த நாட்டிலும் நடந்தது இல்லை. உயிர் காக்கின்ற இரத்தத்தை தானமாகத் தருகின்ற ஆட்சி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி. ஏராளமான திட்டங்களை நாட்டு மக்களுடைய முன்னேற்றத்திற்குத் தந்தபொழுதும், திட்டம் அல்லாத இதுபோன்ற சமூகக் கடமையையும் வரலாற்றில் முதல்முதலாக நிகழ்த்திக் காட்டியவர் நம்முடைய ஒப்பற்ற ஆட்சித் துறைத் தலைவர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்கள் கின்னஸ் சாதனையைச் செய்திருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய செய்தி.

2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ் 200 கோடி ரூபாயை ஒதுக்கி, வீடுகளற்ற ஆதரவற்றோருக்கு 62 புதிய காப்பிடங்களை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சுதந்திரம் பெற்று ஏறத்தாழ 65 ஆண்டுகள் கடந்தபின்னும் மொத்தம் 45 காப்பிடங்கள்தான் இருக்கின்றன. அந்தக் காப்பிடங்களும் பழுதடைந்திருக்கின்றன. அந்தக் காப்பிடங்களையும் புதுப்பித்து, மேம்படுத்தி, 62 புதிய காப்பிடங்களை புதிதாக உருவாக்க, 200 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நகர்ப்புறங்களிலே வறுமையிலே, பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலே, வெயிலிலே, மழையிலே, பனியிலே, குளிரிலே படுத்து உறங்குகின்ற ஆதரவற்ற ஏழையெளிய சாமானிய கடைநிலை மக்களுக்கு காப்பிடங்களை உருவாக்கித் தருவதற்கு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது. வரவேற்கத்தக்கது.

நகர்ப்புறங்களில் பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பு நலன்களைக் கருத்தில்கொண்டு, ஏறத்தாழ 17.50 கோடி ரூபாயில் 14 புதிய விடுதிகளைக் கட்டித்தர தீர்மானித்திருக்கிறார்கள்.

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுவதில் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. இதற்காக நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு

தேசிய விருதை மத்திய அரசு தந்திருக்கிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுவதில் தேசிய விருது பெறுகின்ற அளவிற்கு உதவிவிட்டோம் என்று அவர்கள் ஒன்றும் செய்யாமல் இருந்துவிடவில்லை. தேசிய விருது கிடைத்த பிறகும், மனச் சிதைவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கடுமையாக உடல் ஊனமுற்றவர்களுக்கு, பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு, ஏற்கெனவே 500 ரூபாய் உதவித் தொகை இருந்ததை 1,000 ரூபாயாக சென்ற ஆண்டு உயர்த்தி, இந்த ஆண்டு மேலும் 1,500 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். வாழ்க்கையோடு தினம், தினம் ஒவ்வொரு நொடியும் போராடுகின்ற ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சாமானிய மக்களுக்கு ஆதரவுக் கரம் தந்து, 1,500 ரூபாயாக உதவித்தொகையை உயர்த்தித் தந்திருப்பது சமுதாயத்தில் கடைக்கோடியிலே இருக்கின்ற மக்களுடைய வாழ்வு மேம்படுவதற்கும், நம்பிக்கையை ஊட்டுவதற்குமான சிறந்த செயலாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இது வாக்குகள் சேகரிப்புக்கான திட்டம் அல்ல. சென்ற நிதி ஆண்டிலே தெருவில் இருக்கக்கூடிய, வசிக்கக்கூடிய நாய்களுக்கு, வாக்களிக்க உரிமையில்லாத தெருவில் இருக்கிற நாய்களுக்கு ரூபாய் 20 கோடியைத் தந்த முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வாக்கிற்காக அந்த உதவியைச் செய்யவில்லை. இப்போதும் மனச்சிதைவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மனித உயிர்களுக்கு, வாக்களிக்க உரிமையில்லாதவர்களுக்கு 500 ரூபாயை உதவித் தொகையாகத் தந்து, வாக்கிற்காக அல்லாமல், மக்கள் வாழ்வதற்காக திட்டத்தைத் தந்த ஒப்பற்றத் தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காக அந்தத் திட்டத்தைப் பாராட்டுவதோடு, வரவேற்று பதிவு செய்கிறேன், மகிழ்ச்சி அடைகிறேன்.

பிற்பகல் *12-15*

இந்த நவீன காலத்தில் நிலவும் ஆள் பற்றாக்குறைகளைக் கருத்தில்கொண்டு, விவசாய விளைப்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே நவீன இயந்திரங்களை விவசாயிகளுக்கு வழங்கி, ஊக்கம் அளித்து வருகிறார்கள். இந்த ஆண்டு ரூ.100 கோடியை இன்னும் கூடுதலாகத் தந்து, விவசாய விளைப்பொருள்களை உற்பத்தி செய்வதற்கான நவீன கருவிகளைப் பயன்படுத்துவதற்கு ஊக்கம் அளித்திருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது.



சுதந்திரம் பெற்று 65 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் மண்பாண்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை இதுவரை எந்த அரசும் பரிசீலிக்கவில்லை. அவர்களுக்கு உதவியும் செய்யவில்லை. மழைக்காலங்களில் மண்பாண்டத் தொழிலாளர்கள் படுகின்ற கஷ்டத்தைப் போக்குவதற்காக நிவாரணத் தொகையாக ரூபாய் 4,000/- அள்ளித் தந்து, சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மண்பாண்டத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் ஒளி வீசச் செய்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டம் வரவேற்கக்கூடியது.

ஏற்கெனவே ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் பேருந்துகளைத் தந்து, தமிழ்நாட்டிலே பயணிக்கக்கூடிய கோடிக்கணக்கான பயணிகளுக்கு மகிழ்வான, பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்திருக்கிற தமிழகத்தினுடைய போக்குவரத்துத் துறை இந்த ஆண்டில் ஆயிரம் புதிய பேருந்துகளை வாங்க ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறது. இப்போதும்கூட 344 பேருந்துகள் நம்முடைய தலைமைச் செயலக வாயிலில் வரிசையாக நின்று கொண்டிருக்கின்றன. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வடிவமைத்ததுபோன்று இயற்கைச் சூழலில் எழில்மிக்க இலைகளுடைய சித்திரம் பதிக்கப்பட்ட, சுமார் 50 சிற்றுந்துகள் தலைமைச் செயலகத்தினுடைய வாயிலில் காலையில் கி.மீ. கணக்கிலே வரிசையாக நின்று கொண்டிருக்கின்றன. அது மக்களுக்கு உவகையளிக்கிற விழா. அப்படி போக்குவரத்துத் துறையிலே புரட்சி.

சிறையிலே இருக்கும்போது தொழிலைக் கற்றுக் கொண்டு அதை வைத்து சிறையிலிருந்து மீண்டபிறகு அமைதியான, கண்ணியமான வாழ்வு வாழவேண்டுமென்று கருதி, சிறைவாசிகளுடைய வாழ்வு சிறக்க சிறைக்கூடங்களில் ஏற்கெனவே இருக்கிற தொழில்கூடங்களை நவீனப்படுத்துவதற்காகவும், புதிய தொழிற்கூடங்களை உருவாக்குவதற்காகவும், பயிற்சி மையங்களை உருவாக்குவதற்காகவும், இந்த ஆண்டு ரூ.5 கோடியை கூடுதலாகத் தந்து, சிறைத் துறைக்கும், சிறைவாசிகளுக்கும் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய புரட்சியான திட்டத்தைத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்தத் திட்டம் வரவேற்புக்குரியது.

அதேபோல, சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் உள்ளிட்ட அரசினுடைய சேவையைப்பெற வருகிறவர்கள், ஒவ்வொரு அலுவலகங்களாகப் பயணித்து பயணித்து, காத்திருந்து, காத்திருந்து

அந்தச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு காலதாமதம் ஆகிறது என்பதை உணர்ந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013-2014 ஆம் நிதியாண்டில் 2,100 சேவை மையங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். அதன்மூலம் மக்கள் பயன்பெற்று வந்தார்கள். 2014-2015 ஆம் ஆண்டில் அதை இன்னமும் கூடுதலாக விரைவுபடுத்தி, 2,100 சேவை மையங்களோடு கூடுதலாக 2,000 சேவை மையங்களை உருவாக்கி, மேலும் இலட்சக்கணக்கான மக்கள் பயன்பெறுகிற வகையில் சேவை மையங்களை விரிவுபடுத்தியிருப்பது பாராட்டுக்குரியது.

அதேபோல, நகர்ப்புறங்களில் சொத்து வரி, மின் கட்டணம், குடிநீர், கழிவுநீர் அகற்ற கட்டணம் உள்ளிட்ட பல்வேறு வரிகளையும் ஒரே இடத்தில் செலுத்துவதற்கு வசதியாக நகர்ப்புறப் பொதுச் சேவை மையங்களைத் தொடங்க இருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது.

அதேபோன்று, நெசவாளர்களுக்கு பிரத்யேக பசுமை வீடுகள். நெசவாளர்களுக்கு கைத்தறிக் கூடங்கள் அமைப்பதற்குக் கூடுதலான இட வசதியையும், கூடுதலான நிதியையும் தந்து, நெசவாளர்களுடைய வாழ்க்கையில் இதுவரை எந்த அரசும் செய்திடாத, செய்ய முன்வராத பசுமை வீடுகளைத் தந்து, குறிப்பாக இந்த ஆண்டு மட்டும் 10 ஆயிரம் பசுமை வீடுகள் கட்ட ரூபாய் 168 கோடி என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-20

ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காலத்திலிருந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்கு அளப்பரிய திட்டங்களைத் தந்துள்ளார்கள். அரசியலில் பதற்றமில்லாமல் முடிவுகளை எடுத்து, சட்டம்-ஒழுங்கைப் பாதுகாத்து, சமூக அமைதியைப் பாதுகாத்து, ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயம் இன்புற்று மகிழ்வோடு வாழ்வதற்கு, அனைத்துத் துறைகளையும் மேம்படுத்துவற்கு, சீர்செய்வதற்கு நிருவாக இயந்திரத்தை முடுக்கிவிட்டு, மக்களின் பேராதரவைப் பெற்றிருக்கிற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 2014-2015 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மிகுந்து வரவேற்று, பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு எங்கள் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2014-2015 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், மக்களுக்கு புதிய வரிகள் எதுவும் போடாமல் இருப்பது, பாராட்டக்கூடிய ஒன்று. இந்த ஆண்டு பருவமழை பொய்த்துவிட்டதால், வருகின்ற ஏப்ரல், மே மாதங்களிலே குடிதண்ணீர் தட்டுப்பாடு வருமென்பதற்காக, கால்நடைகளுக்கு தீவனத் தட்டுப்பாடுகள் வரும் என்பதற்காக, முன்கூட்டியே அறிந்து, குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக, நிதிநிலை அறிக்கையில் 681 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே பாராட்டக்கூடியது, வரவேற்கக்கூடியது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காவல் துறையில் கடந்த மூன்று ஆண்டு காலமாக கிட்டத்தட்ட 24,503 நபர்கள் காவலர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவரை இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை திட்டத்தைக் கொண்டு வந்து அதன்மூலம் 10,099 பேர் தேர்வு செய்யப்பட்டு, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு (மேசையைத் தட்டும் ஒலி) கொடுக்கின்ற ஒரு புதிய திட்டத்தைக் கொண்டுவந்திருப்பது உண்மையிலேயே பாராட்டக்கூடிய ஒன்று என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், இந்த நிதியாண்டிலேயே 2,109 காவலர் பணியிடங்கள் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவித்திருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். குற்றங்கள் நடைபெறுவதை உடனுக்குடன் தெரிவிக்கும்வகையில் காவல் துறையை நவீனப்படுத்த, 2014-2015 ஆம் நிதியாண்டில் 5,186.20 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது என்பதை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்தில் வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டால், பருத்தி உற்பத்தி மிகவும் குறைவாக இருப்பதை கருத்திற்கொண்டு, தமிழக அரசு, தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் என்ற

திட்டத்தை உருவாக்கி, அதன்மூலம் வருகின்ற காலத்தில் அதிகமான பருத்தி உற்பத்தியைத் தொடங்க முயற்சி மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

கடந்த ஆண்டு, கூட்டுறவுத் துறைமூலம் 4,500 கோடி ரூபாய் அளவிற்குப் பயிர்க் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அதனை 500 கோடி ரூபாய் உயர்த்தி 5,000 கோடி ரூபாயாகக் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியின்படி, ஒவ்வோராண்டும், 12,000 பயனாளிகளுக்கு கறவை மாடுகளும், ஒன்றரை இலட்சம் பயனாளிகளுக்கு 6 இலட்சம் வெள்ளாடுகளும், செம்மறியாடுகளும் கொடுத்து வருகிறார்கள். அதற்காக, இந்த நிதிநிலை அறிக்கையில் 241.90 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. கடந்த மூன்று ஆண்டு காலமாக பயனாளிகளுக்கு கால்நடைகள் புதிதாக வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்பட்டிருக்கின்ற கால்நடைகளுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற வகையில், கால்நடை மருந்தகங்களையும், கால்நடை கிளை நிலையங்களையும் அமைப்பது கட்டாயமாக இருக்கிறது. இப்போதே கால்நடைகளின் தீவனத்திற்காக 2 ரூபாய்க்கு ஒரு புல் கட்டு தருகின்ற ஒரு நிலையை ஏற்படுத்தியிருப்பது பாராட்டத்தக்கது. ஆனால், வருகின்ற ஏப்ரல், மே மாதங்களில் பாதிப்பு வராமல் பாதுகாக்க வேண்டியது தமிழக அரசினுடைய கடமை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-25

தென் மாவட்டங்களில் தொழில் வளங்களை மேம்படுத்த மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலே 53 ஆயிரம் ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்று தமிழக அரசு முயற்சி எடுத்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். தென் மாவட்டங்கள் பொதுவாக பொருளாதார ரீதியாக, கல்வி ரீதியாக பின்தங்கிய பகுதிகளாக இருப்பதால், அந்தப் பகுதிகளிலே ஒவ்வொரு முறையும் ஜாதிக் கலவரங்கள் ஏற்படுகின்றன. இதைக் கருத்தில்கொண்டுதான்



மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிக எண்ணிக்கையில் தொழிற்பேட்டைகளை ஏற்படுத்த முயற்சி எடுத்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு, திறக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றை விரைவிலே திறப்பதற்கு மாநில அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறைக்கு, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் ஒதுக்கப்படாத அளவுக்கு இந்த நிதி ஆண்டில் மட்டும் 17,731.71 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பது உண்மையிலேயே பாராட்டத் தக்கது. தமிழகத்தை பல நிலைகளில் உயர்த்தி, இந்தியாவிலேயே முதல் மாநிலமாகக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) அதிகமான நிதியை பள்ளிக் கல்வித் துறைக்காக ஒதுக்கி இருக்கிறார்கள் என்று சொன்னால், உண்மையிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டியே தீர வேண்டும். அதுமட்டுமல்ல, 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்புகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை கொடுத்து, மாணவர்களின் இடைநிற்றலைக் குறைத்து, அதிகமான மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நிதிநிலை அறிக்கையில் படித்தபோது உண்மையிலேயே பாராட்டாமல் இருக்க முடியாது. பாராட்டியே தீர வேண்டும்.

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இருக்கின்ற கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் TRB மற்றும் TET மூலம் தேர்வு செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள், 119 பேரும், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 27 பேரும், ஆக மொத்தம் 146 ஆசிரியர்கள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆசிரியர்களாகப் பணிபுரிந்துவருகிறார்கள். அவர்கள் கள்ளர் சீரமைப்புத் துறையிலிருந்து பள்ளிக் கல்வித் துறைக்குச் செல்லவேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததன் அடிப்படையில், கள்ளர் சீரமைப்புத் துறையிலே ஓர் அரசாணை பிறப்பித்து இப்போது அவர்கள் செல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், மாநில அரசு அந்த 146 ஆசிரியர்களை TRB மூலம் பெற்று, மீண்டும் அவர்கள் விரும்புகின்ற பகுதிகளுக்கு அனுப்புகின்ற நிலையை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு முறையும் TRB மற்றும் TET மூலம் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அந்த மூன்று மாவட்டங்களில் இருக்கின்ற கள்ளர் சீரமைப்புப்

[திரு. பி.வி. கதிரவன்] [2014 பிப்ரவரி 19

பள்ளிகளில் வேலைக்கு அமர்த்துகிறார்கள். அவர்கள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், வெளி மாவட்டத்திற்குச் செல்ல விரும்புகிறார்கள். அதனால் நிரந்தரமாக ஆசிரியர்கள் இல்லாத நிலை உள்ளது. இதனைப் போக்கும்வகையில், இனி வருங்காலத்தில், திண்டுக்கல், தேனி, மதுரை மாவட்டங்களிலிருந்தே தகுதி வாய்ந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து, அந்த மாவட்டங்களிலேயே அவர்களை வேலைக்கு அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கள்ளர் சீர்மரபினர் நல வாரியம் தி.மு.க. ஆட்சியிலே பெயரளவிற்கு அமைக்கப்பட்டது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வேண்டுகோளுக்கிணங்க, போராட்டத்தை அறிவித்த பின்பு தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. பின்னர், அது கலைக்கப்பட்டிருக்கிறது. அதனால், சீர்மரபினர் நல வாரியத்திற்குப் பல சலுகைகள் அளித்துப் புதிய முறையில் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, சீர்மரபினர் நல வாரியத்திலுள்ள உறுப்பினர்கள் எல்லோரும் கைரேகைச் சட்டத்திலே அடிமைப்பட்டிருந்தவர்கள். 1914 ஆம் ஆண்டு முதல் 1946 ஆம் ஆண்டு வரை, கிட்டத்தட்ட 32 ஆண்டுகள் அவர்கள் கைரேகைச் சட்டத்தின்கீழ் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு இருந்திருக்கிறார்கள். சீர்மரபினர் மக்களுக்கு அப்பொழுது இருந்த அரசு DNT என்று ஜாதிச் சான்றிதழ்கள் வழங்கி, அதன்மூலம் அவர்களுக்கு நிறைய சலுகைகள் வழங்கப்பட்டு வந்தன. ஆனால், 1979 ஆம் ஆண்டிற்குப் பின்னால் DNC என்று மாற்றப்பட்டு அந்தச் சலுகைகள் வழங்கப்படாமல் இருக்கின்றன. அவர்கள் கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக பின்தங்கியிருக்கிறார்கள். அவர்கள் DNC-யிலிருந்து மீண்டும் DNT ஆக மாற்றப்பட வேண்டும் என்ற கருத்தை நீண்டநாட்களாக வலியுறுத்தி வருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைக் கருணையோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் மின் வெட்டு மிகப் பெரிய பிரச்சினையாக இருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அதை ஒரு சவாலாக எடுத்து இன்றையதினம் மின்வெட்டே இல்லாத தமிழகமாக மாற்றியிருப்பதை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.



2014 பிப்ரவரி 19] [திரு. பி.வி. கதிரவன்]

அதேபோன்று, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திலே சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை அமைக்கப்பட்டு விரைவிலே திறக்கப்பட இருப்பதை பாராட்டுகிறோம். அதேபோல், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும் தலா இரண்டு சிறப்பு பல்நோக்கு மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

தமிழகத்தில் பாய்கின்ற நதிகளை இணைக்கின்ற விதமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதியாண்டிலேயே ரூபாய் 119.98 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள். வருங்காலத்தில் தமிழக முதல்வர் பாரதப் பிரதமராகி (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் இருக்கின்ற நதிகளை எல்லாம் இணைக்கின்ற ஒரு நிலையை உருவாக்கித் தருவார்களா என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மண்பாண்டத் தொழிலாளர்கள் அந்தத் தொழிலையே நம்பியிருக்கிறார்கள். மழைக் காலங்களில் அவர்களால் தொழில் செய்ய முடியாது என்பதற்காக தமிழக அரசு அவர்களுக்கு நான்காயிரம் ரூபாயை பராமரிப்பு ஊதியமாக அளித்து வருவதை வரவேற்கின்றோம்.

மாற்றுத் திறனாளிகளின் உதவித் தொகையை 500/- ரூபாயிலிருந்து 1,000/- ரூபாயாக உயர்த்திக்கொடுத்தார்கள். இந்த நிதியாண்டில் 1,500/- ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருப்பதைப் பாராட்டுகிறோம். மாற்றுத் திறனாளிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் பெட்ரோலில் ஓடக்கூடிய ஆயிரம் ஸ்கூட்டர்கள் வழங்க திட்டமிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

அரசுப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபின்பு அதிக எண்ணிக்கையில், கிட்டத்தட்ட 20 ஆயிரம் பேருந்துகள் வரை தமிழகத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்த நிதியாண்டில் மேலும் ஆயிரம் புதிய பேருந்துகளை வாங்க வேண்டுமென்று திட்டமிட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

வழக்கறிஞர் நிதி. வழக்கறிஞர் இறந்துவிட்டால், அவர்களின் வாரிசுகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்து வந்ததை, ஐந்து இலட்சம் ரூபாய்தான் வழக்கறிஞர்களே கேட்டார்கள், ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் அறிவித்து பெருமை சேர்த்திருக்கிறார்கள் என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அதுமட்டுமல்ல, வழக்கறிஞர்களின் குமாஸ்தாக்கள் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறை. கடந்த ஆண்டில் நிலப் பரிமாற்றம் பதிவு செய்யும் பத்திரப் பதிவுகள் குறைந்ததால் கட்டுமானத் துறையில் குறைந்த வளர்ச்சியே காணப்பட்டது என்பதை யாராலும் மறுக்க முடியாது. Guide-line value-வை கூட்டியிருந்தார்கள். அதனால் தமிழகத்தில் பணப்புழக்கம் இல்லையென்கிற ஒரு குறை இருந்தது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதனைக் கருணையோடு சிந்தித்து, அந்த நிலையை மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பெருங்காமநல்லூரில் 1920 ஏப்ரல் 3 ஆம் தேதி, ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், கைரேகைச் சட்டம் கொண்டு வந்து, கைரேகைகளை பதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, நம் மக்கள் அதனை எதிர்த்து, ஆங்கிலேயர்களுடன் நேருக்கு நேர் மோதியதால் 16 பேர் இறந்தார்கள். அந்த இடத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில், தமிழக அரசு அந்த நாளை, அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறை உள்ள அலுவலகம் திறக்கப்படவில்லை என்று இங்கே கோடிட்டுக் காட்டினார்.



மதுரையில் இருக்கின்ற இரண்டு தகவல் தொழில்நுட்பத் துறைக்காக அமைக்கப்பட்ட ஓர் அலுவலகம், இலந்தகுளம் கிராமத்தில் 208.91 ஏக்கர் நிலப்பரப்பிலும், மற்றோர் அலுவலகம் வடபழஞ்சி கிராமத்தில் 245.17 ஏக்கர் நிலப்பரப்பிலும் அமைந்துள்ளன. சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், இலந்தகுளத்தில், தகவல் தொழில்நுட்பத் துறைக்கான அலுவலகம் கட்டுவதற்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு ரூபாய் 32 கோடியாகும். இதில் 50 ஆயிரம் சதுர அடியில் தகவல் தொழில்நுட்பத் துறையின் நிருவாகக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ரூபாய் 16 கோடி முதலீட்டில் முடிவடைந்துள்ளன. தகவல் தொழில்நுட்ப நிறுவனம் மேலும் பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. உள்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 7 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திருவாளர். Honeywell Technology நிறுவனத்திற்கு 4.5 ஏக்கர் நிலமும், Chella Software நிறுவனத்திற்கு 2.25 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. Infosys மற்றும் M.P.S.S. Technology Service Private Limited ஆகிய நிறுவனங்கள் சுமார் 5,785 ச.அடி பரப்பில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மேலும், 15,187 ச.அடியை Saipee BPO Service Limited நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்க இருக்கின்றன. வடபழஞ்சி தகவல் தொழில்நுட்ப பொருளாதார மண்டலத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் 14 கோடி ரூபாய் செலவில் முடிவடைந்துள்ளன. இதற்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு 45 கோடி ரூபாய் ஆகும். இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் Caliber Point நிறுவனத்திற்கு 5 ஏக்கர் மற்றும் Health Plan Systems India Limited நிறுவனத்திற்கு 2 ஏக்கர் நில ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதோடு, அங்கே இன்னும் இருக்கின்ற இடங்களுக்கு யார், யார் தொழில்முனைவோர்கள் வருகின்றார்களோ, அவர்களுக்கு இடத்தை ஒதுக்கிக்கொடுத்து தகவல் தொழில்நுட்பத் துறையின் வாயிலாக உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் தொழிலை விரைவாக ஆரம்பிப்பதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றது என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது புதிய தமிழகம் கட்சியின் சார்பாக சில கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பு கொடுத்திருக்கக்கூடிய துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு அரசியல் கட்சிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் தமிழக அரசு ஆசிரியர் தகுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களில் 5 சதவிகிதம் விதிவிலக்களித்திருக்கின்றது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் அனைவருக்குமே ஒரே மாதிரியாக 5 சதவிகிதம் மட்டுமே விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. அதனால், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி மக்கள், சிறுபான்மை மக்கள் ஆகியோர் எந்தவிதமான பலனையும் அனுபவிக்க முடியாத ஒரு நிலை உள்ளது. அதேபோல, 2012 ஆம் ஆண்டு முதல் முறையாக தகுதித் தேர்வு எழுதி வெற்றி பெற்றவர்கள், அந்தப் பலனை அனுபவிக்க முடியவில்லை. எனவே, இதை முன்தேதியிட்டு, எப்பொழுது தகுதித் தேர்வு அறிவிக்கப்பட்டதோ அப்போதிலிருந்து அது அமலுக்கு வரக்கூடிய வகையில் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்த விரும்புகின்றேன். அதேபோல அந்த 55 சதவிகிதம் என்பதை பொதுவாக வைக்காமல், தாழ்த்தப்பட்ட. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசானது, அரசு தேர்வு வாரியத்திலே 50 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் என்று நிர்ணயித்திருந்தாலும்கூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஆசிரியர் தேர்வு வாரியத்திலே just pass அதாவது, 35 மதிப்பெண் இருந்தால் போதும், அவர்கள் அந்த ஆசிரியர் தேர்வு வாரியத்திலே தேர்வை எழுதலாம் என்ற



சலுகையை வழங்கி, அதன்பின் உறுப்பினர்கள் எல்லாம் விடுத்த கோரிக்கைக்கு ஏற்ப, தகுதித் தேர்விலும் 5 சதவிகிதத்தை குறைத்து பல்வேறு சலுகைகளைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். எதிர்வருகின்ற 10 ஆண்டுகளில், தமிழகம் கல்வித் தரத்திலே உயர்ந்திருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வியில் முதன்மை மாநிலமாக இருந்தால்தான், அது வளர்ந்த மாநிலமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆகவே, தரமான பிள்ளைகளாக இருக்க வேண்டுமென்றால், தரமான ஆசிரியர்களை உருவாக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-40

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியின ஆசிரியர்களைத் தேர்வு செய்ததில் சலுகைகள் கேட்கின்றீர்கள். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பழங்குடி மக்களுடைய பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டுமானால், தரமான கல்வி வழங்கப்படவேண்டும். அவர்களுக்குத் தரமான உயர் கல்வி வழங்கவேண்டுமானால், தகுதிவாய்ந்த ஆசிரியர்களைப் பணியில் அமர்த்த வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுடைய எதிர்காலமும் சிறப்பாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய காலம் முடிந்துவிட்டது. ஆங்கிலத்தில் “He is thinking of today only, not thinking about tomorrow” என்று சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, நீங்கள் வைக்கக்கூடிய கோரிக்கை இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 45,000 கோடி ரூபாய் நிதியினை பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை வரலாற்றில் இல்லாத சாதனையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். காரணம், தரமான பிள்ளைகளை உருவாக்கவேண்டும் என்பதற்காக. இந்த நாட்டினுடைய எதிர்காலம் பிள்ளைகளின் கைகளில் இருக்கின்றது. இன்று, அரசியல் கட்சித் தலைவர்கள், சட்டமன்றப் பேரவைக்கு வராமலேயே நல்ல பெயர் பெற்றுக்கொள்வதற்காக வெளியிலிருந்து அறிக்கை விடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது வரக்கூடிய பாராளுமன்றத் தேர்தலில் ஆசிரியர்களின் ஓட்டுகளைப் பெறுவது மட்டுமே அவர்களுடைய நோக்கமாக இருக்கிறது. ஆனால், நம்முடைய பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி ஒருவரும் சிந்திக்காமல், குறைபட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும்

ஒலி) தேவையில்லாமல் அறிக்கையை விடுகின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், அடுத்த தேர்தலைப் பற்றி யோசிக்கவில்லை. எதிர்காலத்தில் நம்முடைய பிள்ளைகள் இந்த நாட்டில் மாண்புமிகு அம்மா அவர்களைப் போல உருவாகவேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களைப் போல அறிவாற்றலோடு வளரவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எதிர்காலத்திலே இந்த நாட்டை ஆளக்கூடிய வகையிலே கல்வியிலே வளரவேண்டும் என்பதற்காக தகுதிவாய்ந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்வதில் மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, 2012 ஆம் ஆண்டிலே ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் நடத்தப்பட்ட தேர்வின்மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு சலுகை வழங்கவேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதிலே கிட்டத்தட்ட 20,000 பேருக்கு மேலே ஒரே நேரத்தில், வரலாற்றில் இல்லாத அளவிற்கு ஆசிரியர் பணியிடங்களை நிரப்பி, (மேசையைத் தட்டும் ஒலி) ஆசிரியர்களெல்லாம் பணியிலே சேர்ந்து, இன்று அவர்கள் நல்ல சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிக சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மீண்டும் அந்த விஷயத்தினுள்ளே சென்று குழப்பங்களை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தேர்தலுக்கு முன்பு ஆசிரியர்களுடைய காலிப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட வேண்டுமென்பதற்காக முயற்சிகள் நடைபெற்றன. ஆனால், நீங்கள் 5 சதவிகிதம் குறைக்கவேண்டும் என்று கேட்டதன் காரணமாக, நாடாளுமன்றத் தேர்தல் வந்துவிடும் என்பதால், மேலும் தாமதமாகும் நிலை வந்துவிடும். இன்னும் 4, 5 மாதங்கள் போய்விடும் என்பதால், ஆசிரியர்களின் சான்றிதழ் சரிபார்ப்புப் பணிகள் எல்லாம் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அன்றைக்கே ஆசிரியர் பணியிடங்களை பூர்த்தி செய்திருந்தால், நம்முடைய பிள்ளைகள், இன்றைக்கு ஆசிரியர் பற்றாக்குறை இல்லாமல், பள்ளிகளில் தேர்வு எழுதியிருப்பார்கள். தேர்வு எழுதுவதற்காக நல்ல பாடம் கற்றுக்கொண்டிருப்பார்கள். ஆனால், எல்லாமே காலம் கடந்து போகிறது. எதிர்காலத்தை நீங்கள் யோசிப்பதில்லை. நம்முடைய பிள்ளைகளுடைய எதிர்காலத்தை நினைக்காமல், இன்றைய



சூழ்நிலைக்கு நாளைய தேர்தலை மட்டுமே நீங்கள் முன்னிறுத்தி கோரிக்கையை விடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய எண்ணத்திற்குத் தகுந்தாற்போல் நீங்களும் உறுதுணையாக இருக்கவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது ஏற்கெனவே 5 மதிப்பெண்களைக் குறைத்து சலுகை கொடுத்திருப்பதை முன்தேதியிட்டு அமலாக்க வேண்டும் என்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில், ஒட்டநத்தம்-கல்லத்தி கிணறு, மணியாச்சி-கொல்லம் கிணறு, வல்லநாடு-அகரம், வல்லநாடு-காசிரங்காபுரம், அலந்தா உட்பட்ட பல்வேறு சாலைகள் தேசிய நெடுஞ்சாலைக்கு உட்பட்டு வராத காரணத்தினால், கிராமச் சாலைகள், அதாவது ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளாக இருக்கின்றன. இடையிடையே பாலம் கட்டப்பட வேண்டும். எஸ். கைலாசபுரம், குமரிக்கோட்டை ஆகிய இரண்டு ஓடைகளைத் தாண்டிச் செல்லவேண்டிய சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. பல ஆண்டுகளாக அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்தும்கூட, இந்தச் சாலைகள் புதிதாகப் போடப்படவில்லை. பாலங்களும் கட்டப்படவில்லை. உள்ளாட்சித் துறையின் மூலமாகத்தான் இந்தச் சாலைகள் போடப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதனை தமிழ்நாடு அரசு கவனத்திலே கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மூன்று ஒன்றியங்களில் 13 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் வாயிலாக குடிநீர்

சப்ளை செய்யப்படுகிறது. அதில் மூன்றே மூன்று மட்டும்தான் இப்பொழுது சரியாகச் செயல்படுகின்றன. உதாரணத்திற்கு, தூத்துக்குடிக்கு மிக அருகில் மாப்பிள்ளை ஊரணி என்ற ஊராட்சி இருக்கிறது. அங்கு 63 குடியிருப்புகள் இருக்கின்றன. இன்றைய தேதியில் அங்கு 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். மங்களக்குறிச்சியிலிருந்து அந்தப் பகுதிக்கு வரக்கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை, தூத்துக்குடி தொகுதியில் இருக்கக்கூடிய, வி.என்.எஸ். நகர் மற்றும் பி.என்.டி. போன்ற பகுதிகளில் ஐந்து இலட்சம் லிட்டருக்கும் மேற்பட்ட தண்ணீரை சட்டவிரோதமாக எடுத்துக்கொள்கிறார்கள். மாவட்ட ஆட்சியர் மற்றும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளிடத்தில் முறையிட்டும்கூட, இன்று வரையிலும் அது தடுக்கப்படாத காரணத்தினால், மாப்பிள்ளை ஊரணியிலே வாழக்கூடிய ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மூன்று வாரங்கள், நான்கு வாரங்களுக்கு ஒருமுறை மட்டுமே குடிநீர் பெறுகிற நிலையில் இருக்கின்றார்கள்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிதண்ணீரை சட்டத்திற்கு விரோதமாக எடுத்துக்கொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டுவருகின்றபோதே, இத்தனை குடியிருப்புகளுக்கு இத்தனை இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்படுகிறது. விரிவான திட்டம் தயாரிக்கப்படுகின்றபோதே, அந்தந்தப் பகுதிகளுக்கு எவ்வளவு தேவை என்பது பற்றி முடிவு செய்யப்படுகிறது. அந்த அடிப்படையிலேதான் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப்படுகிறது. இப்போது 10 இலட்சம் லிட்டர் தண்ணீர் எடுக்க வேண்டுமென்று சொன்னால், எத்தனை குடியிருப்புகள் என்று ஏற்கெனவே வரன்முறைப்படுத்தப்பட்டு முடிவு செய்யப்படுகிறது. அப்படிச் செய்யும்போது, நிச்சயமாக மற்ற பகுதிகளுக்குத் தண்ணீர் வராது. இதற்குத் தனியாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்



என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேபோல, 115 கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஏறக்குறைய 56 கிராமங்களுக்கு தண்ணீர் சப்ளை செய்ய வேண்டும். வரும் வழிகளில் காடு, மேடு, வாழைத் தோட்டங்களுக்குத் தண்ணீர் எடுத்துக்கொண்டு, அந்தத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்தாமல் விட்டுவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதலில் சொன்ன கருத்து, சில தவறுகள் நடந்துவிட்டன என்றார். அதற்கு நடவடிக்கை எடுத்துவிடலாம். மிகப் பெரிய அளவில், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கும்போது தண்ணீர்ப் பற்றாக்குறை கூடுதலாக ஏற்படும். ஆனால், நிச்சயமாக காடு, மேடுகளுக்கெல்லாம் தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பில்லை. சட்டமன்ற உறுப்பினர் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறார். தமிழ்நாட்டில் ஒரு drop தண்ணீர்கூட வீணாகாமல் பாதுகாப்பாகக் கொண்டுசெல்ல வேண்டுமென்பதுதான் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு எடுக்கின்ற நடவடிக்கை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்று தவறான குற்றச்சாட்டை சொல்லக்கூடாது. ஆதாரத்தோடு சொல்வார் என்று சொன்னால், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர், வேறு கருத்துக்குச் செல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானே நேரடியாக ஸ்ரீவேங்கடபுரம் சென்று, அதிகாரிகளோடு ஆய்வு செய்து, அமைச்சர் அவர்களுடைய

கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். குற்றச்சாட்டு ஒன்றும் அல்ல. கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்கிறேன். நிச்சயமாக இருக்காது. இருப்பதற்கான வாய்ப்பும் இல்லை. அப்படி ஒரு சூழ்நிலை வருகின்றபட்சத்தில், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் வேறு point-க்குச் செல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் தமிழகத்தில் தொழில் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, கடந்த மூன்று வருடங்களில் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. தமிழக அரசினுடைய சார்பாக விருதுநகர் மாவட்டம், ஆலங்குளத்தில் ஒரு சிமெண்ட் ஆலை பல வருடங்களாகச் செயல்பட்டு வருகின்றது. அந்த சிமெண்ட் ஆலையில் ஏறக்குறைய ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பல வருடங்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். விருதுநகர் மாவட்டம், ஆலங்குளம் சிமெண்ட் ஆலை இந்தியாவிலேயே பழைய முறையில் செயல்படக்கூடிய ஆலை. அங்கு தேவையானஅளவிற்கு உற்பத்தி செய்ய முடியாத ஒரு நிலைமை இருக்கின்றது. எனவே, அதனை நவீனப்படுத்தினால்தான் அந்த ஆலை சிறப்பாகச் செயல்பட முடியும். வேலைவாய்ப்பை உருவாக்க முடியும் என்ற அடிப்படையில், கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரின்போதே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்த ஆலையை நவீனப்படுத்துவதற்காக 160 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். ஆனால், ஒரு வருடமாகியும்கூட, அதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே அந்த ஆலையை modernization செய்ய வேண்டுமென்பதற்காக, அதாவது wet process-ஐ dry process ஆக மாற்ற வேண்டுமென்பதற்காக, 160 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள். அதற்கு D.P.R. தயாரிக்க வேண்டும். இப்பொழுது டெண்டர் விடப்பட்டிருக்கின்றது. டெண்டர் அறிக்கை வந்ததற்குப் பின்னால்தான், நடவடிக்கை எடுக்க முடியும். நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவுடனேயே அதை நாங்கள் செய்துவிட முடியாது. Limestone அளவு எவ்வளவு இருக்கின்றது, எவ்வளவு ஆண்டுகள் வரும் என்பதையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டும். இப்பொழுது அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னொன்றையும் சொல்லிக்கொள்கின்றேன். அங்கே கல்நார் தகடுகள், ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்ஸ் தயாரிப்பது கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் மூன்று மாத காலத்திற்கு முன்பாக அங்குள்ள தொழிலாளர்கள் மத்தியில் பேசிவிட்டு வந்திருக்கின்றீர்கள். இது மாண்புமிகு அம்மா அவர்களது கவனத்திற்கு வந்தவுடன், சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்ற காரணத்தால் அது தடை செய்யப்பட்டிருக்கிறது, இறக்குமதி செய்யக்கூடாது என்று மத்திய அரசு ஆணையிட்டிருக்கிற காரணத்தினால், வேறு நாட்டிலிருந்து T.N.P.L. மூலமாக வாங்கி, இப்பொழுது அங்கு இருக்கின்ற 110 தொழிலாளர்களுக்கும் ஓராண்டு காலமாக வேலைவாய்ப்பைக் கொடுத்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும், மீண்டும் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்கின்றேன். அம்மா அவர்கள் சொன்ன திட்டத்தை எப்படியாவது நிறைவேற்றுவார்களேயொழிய, எந்தக் காரணத்தைக் கொண்டும் நிறுத்தமாட்டார்கள். நீங்களெல்லாம் கேள்வி கேட்டு, அம்மா அவர்கள் செய்கின்ற நிலைமையில் இல்லை என்பதை உங்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *டாக்டர், ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். 13 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கனிம வளங்களில் மணல் மிக முக்கியமானதாகிவிட்டது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உறுப்பினர், மணல் பற்றித்தான் நேற்றைக்கே அமைச்சர் அவர்கள் முழுமையான விளக்கம் சொல்லிவிட்டாரல்லவா?*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *தமிழ்நாடு அரசு மணல் விநியோகத்தைச் சீரமைப்பதற்கு இப்பொழுது நடவடிக்கை எடுத்திருக்கிறது. அரசினுடைய சார்பாகவே மணல் விற்பனை செய்யப்படுகிறது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நேற்றைக்கே அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது. ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *இல்லை, நான் புதிதாக வேறு ஒரு கோரிக்கை வைக்கிறேன். இப்பொழுது மணல் குவாரிகள் அமைப்பதற்கு நீங்கள் அனுமதிக்கிறீர்கள். அதில்தான் பிரச்சினையே வருகின்றது. அதாவது, பயனீட்டாளர்கள் நேரடியாக தாலுகா அலுவலகத்தில் அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தங்களுக்குத் தேவையான மணலை, அங்கேயே பணத்தைக் கட்டி, நேரடியாகச் சென்று, அரசினுடைய பொதுப் பணித் துறை எங்கே அனுமதித்திருக்கிறதோ, அந்த இடத்தில் நேரடியாக அதைப் பெற்றுக் கொண்டால், இடைத்தரகர்கள் வரமாட்டார்கள். மிகக் குறைந்த விலையிலும் கிடைக்கும். ஒரு யூனிட் 600 ரூபாய், 700 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால், குவாரிக்கு வருகிறபோது, அதே மணல் 3,000, 4,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆகவே, குவாரியைத் தடை செய்வதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் பொதுவாக அனைத்து மக்களுடைய வேண்டுகோளாக இருக்கின்றது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *சரி. முடிந்ததா? உறுப்பினர், உரையை நிறைவு செய்யுங்கள். 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.*



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *அடுத்தது, உணவுப் பொருட்கள். அதாவது, பால், எண்ணெய் மற்றும் ஓட்டல்களில் உணவுப் பொருட்கள். தமிழ்நாட்டில், அதாவது இந்திய அளவில். . .(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணல் விற்பனையில் இடைத்தரகர்கள் என்று எதுவும் இல்லை. ஆற்றுப் படுகைகளில், அரசின் சார்பாக குவாரிகள் நடத்தப்பட்டு, அங்கு இரண்டு யூனிட் மணல் 800 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதனை இரண்டாம் கட்ட விற்பனையாக, சட்டத்தின்படி, தனி ஒருவருக்கு வழங்கப்பட்டு, யார்டுகள் மூலமாக விநியோகிக்கப்படுகின்ற சூழல் ஏற்படுகிறது. அங்கு குவாரியிலிருந்து யார்டுக்கு வருகின்ற லாரி வாடகையையும் சேர்த்து விற்கப்படுகின்ற ஒரு சூழல் இருக்கின்றதேயொழிய, இடைத்தரகர்கள் அதிக இலாபம் பார்க்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*இப்பொழுது மணல் தட்டுப்பாடு என்ற கேள்விக்கே இடமில்லை. தமிழகம் முழுவதும் சீராக, தாராளமாக மணல் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. உங்களுக்கு எந்தப் பகுதியில், எந்த மாவட்டத்தில், எவ்வளவு மணல் தேவைப்படுகிறதோ, மாவட்டத்தில் இருக்கின்ற* stock yard-*க்குச் சென்று வாங்கிக்கொள்ளலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நல்ல பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதோடு நன்றி சொல்லி முடியுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவுப் பொருட்களில் கலப்படம் கூடாது என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. ஏனென்றால், பெரும்பாலான வியாதிகள் இப்பொழுது நாம் பருகக்கூடிய பானங்கள், உணவுப் பொருட்கள் மூலமாகத்தான் நமக்கு வருகின்றன. சர்க்கரை வியாதி வருகிறது, இரத்தக் கொதிப்பு*

வருகிறது, கொழுப்பு நோய் வருகிறது, இதய நோய் வருகிறது. ஆனால், இவையெல்லாம் கலப்பட எண்ணெய், கலப்படப் பொருட்கள் மூலமாக வருகின்றன. இந்திய அளவில் உணவுப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதை நாம் வரவேற்கிறோம். அதேசமயத்தில் அந்தச் சட்டத்தை அமலாக்குகின்றபோது, சிறு, சிறு வணிகர்கள் பாதிப்புக்கு ஆளாகிறார்கள் என்று தொடர்ந்து குரல் எழுப்பப்பட்டு வருகிறது. எனவே, உணவுப் பாதுகாப்புச் சட்டமும் அமலில் இருக்க வேண்டும், உணவுப் பொருட்களும் பாதுகாக்கப்பட வேண்டும், கலப்படம் இல்லாமல் இருக்க வேண்டும், அதேசமயத்தில் சிறு வணிகர்களுக்கும் பாதிப்பு இல்லாத வகையில் இந்தச் சட்டத்தில் ஏதாவது திருத்தம் கொண்டு வர முடியுமா? அதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா அல்லது மத்திய அரசுக்கு சிபாரிசு செய்வதற்கு வழி இருக்கிறதா என்பதை நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், தொடர்ந்து இது ஒரு பெரிய போராட்டமாக இருக்கின்றது. இந்த உணவுப் பாதுகாப்புச் சட்டத்தையே அமல்படுத்தாமல் நிறுத்தி வைக்க வேண்டுமென்று வணிகர்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் *12-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவுப் பாதுகாப்புச் சட்டம் மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட சட்டமாகும். இதற்காக எங்கேயும் போராட்டம் நடைபெறவில்லை. மத்திய அரசு கொண்டுவந்த சட்டம் என்பது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், கலப்படம் இல்லாமல் அல்லது உணவினுடைய தரத்தை உறுதிப்படுத்தக்கூடிய சட்டம். இதனால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் எந்த வணிகர்களும் பாதிக்கப்படவில்லை. எந்த வணிகர்களும் போராட்டத்தில் ஈடுபடவில்லை. தரத்தை உறுதி செய்யக்கூடிய பணியிலே வியாபாரிகள், உணவு தயாரிப்பாளர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்ற கருத்தை மட்டும் தமிழக அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத்



துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித்தொகை கடந்த மூன்று ஆண்டு காலமாக வழங்கப்பட்டு வந்தது. **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரமில்லாமல் அதையெல்லாம் சொல்லக்கூடாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதற்கு ஆதாரம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, ஆதாரம் இருந்தால் மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் முதியோர் ஓய்வூதியம் *36,40,000* பயனாளிகளுக்கு மாதந்தோறும் சரியான முறையில் கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவரது பகுதியில் முதியோர் ஓய்வூதியம் எவருக்கேனும் வரவில்லை என குற்றச்சாட்டு சொல்லியிருந்தால், அதற்கான ஆதாரத்தை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் கொடுத்துவிட்டு பேசுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் ஆதாரமில்லாமல் சொன்ன அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு விஷயம் இருந்தால் பேசுங்கள். (குறுக்கீடு) நாளைக்கு பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் நாளைக்கு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் துணைத்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தலைவர் அவர்களே, ஜனவரி மாதம் வரை முதியோர் ஓய்வூதியம் 36,40,000 பயனாளிகளுக்கு முழுவதுமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிப்ரவரி மாதத்திற்கான தொகை தற்போது பட்டுவாடா செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகின்றேன். ஏற்கெனவே முதியோர் ஓய்வூதியம் வாங்கியவர்களுக்கு O.A.P. sanction ஆகியும், வழங்காமல் நிறுத்தியிருக்கிறார்கள். தற்போதுகூட இதற்காக petition கொடுத்திருக்கிறார்கள். அந்தமாதிரி குறைகள் இருக்கின்றன, பார்த்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணம், இந்தக் குறைகள் களையப்பட வேண்டும் என்பதற்குத்தான். ஏற்கெனவே sanction ஆனவர்களுக்கு வரவில்லை. வாங்கிக் கொண்டிருந்தவர்களுக்கும் வழங்கப்படாமல் நின்றுபோய் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலும் அந்தமாதிரி நிலைமை இருக்கிறது. நாளைய தினம் நான் அவைக்கு வரும்போது எடுத்துவருகிறேன். பொன்னம்மா பேட்டையிலேகூட இரண்டு மாதங்களாகக் கொடுக்காமல் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தில் தவறான தகவலை பதிவு செய்யக்கூடாது. பிப்ரவரி மாதத்திற்கான தொகை இப்போது பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. டிசம்பர் மாதத்தில் முதியோர் ஓய்வூதியம் அனுப்புவதில் குறைபாடுகள் நடந்திருக்கலாம். Banking correspondence சில இடங்களுக்குச் செல்லும்போது, பயனாளி இருப்பிடத்தில் இல்லையென்ற காரணத்தால் கொடுக்கப்படாமல் இருக்கலாம். மற்றபடி தமிழகம் முழுவதும் அந்தத் தொகை முறைப்படி சரியான முறையிலே



மக்களுக்குச் சென்று கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பதவியேற்ற பிறகு தமிழக அரசியல் வரலாற்றில், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, முதியோர் ஓய்வூதியத் திட்டத்திற்கு ரூ.4,200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சரியான முறையிலே, முதியோர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் பேச ஆரம்பித்து 25 நிமிடங்கள் ஆகிவிட்டன, விரைவில் உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் ‘தூய்மை பாரதம்’ என்ற இயக்கத்தின்மூலமாக பல விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. அதாவது திறந்தவெளி கழிப்பு செய்யக்கூடாது என்று பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால், அதற்கு மாற்றாக வீடுகளிலே வசதி இல்லை. பல கிராமங்களில், நகர்ப்புறங்களில், மக்கள் எங்களிடம் வைக்கக்கூடிய முக்கியமான கோரிக்கையே பொதுக் கழிப்பிட வசதியை ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனியாக தண்ணீர் வசதியோடு தர வேண்டும் என்பதுதான். பல கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு உபயோகமில்லாமல் இருக்கின்றன. பல இடங்களில் கட்டப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு துறையாக எடுத்துக்கொண்டு, பொதுவான கருத்துகளை உறுப்பினர் அவர்கள் பேசக்கூடாது. கடந்த ஆட்சிக் காலத்தில் சுகாதார வளாகங்கள் ஏற்படுத்தி, பயன்படுத்தாமல் இருந்ததை, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், சீர் செய்வதற்காக

ரூ.180 கோடி ஒதுக்கி, தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து சுகாதார வளாகங்களைச் சீர்செய்ததோடு மட்டுமல்லாமல், புதியதாக ஆண்களுக்கென தனியாக சுகாதார வளாகங்களை உருவாக்கித்தரவும் ஆணையிட்டிருக்கிறார்கள். மேலும், ஒவ்வோர் ஆண்டும் எந்தெந்தப் பகுதிகளில் சுகாதார வளாகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று ஆய்வு செய்து, அதை உடனடியாக நிறைவேற்றுவதற்காக மிக அதிக நிதியை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தப் பகுதியில் சரியில்லை, அந்தப் பகுதியில் சரியில்லை என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது. ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அவையில் வந்து ஏதோ பேசி, அதை அவைக் குறிப்பில் ஏற்றிவிட்டு சென்றுவிடக் கூடாது. அரசாங்கம் எவ்வளவு சிரத்தை எடுத்து செயல்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் பொத்தாம் பொதுவாக குற்றச்சாட்டுகளைச் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். ஆதாரத்தோடு சொல்ல வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அரசினுடைய கவனத்திற்குத்தான் கொண்டு வருகிறேன். குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கேயாவது மக்கள் பாதிக்கப்பட்டிருந்தால், அதை உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது சட்டமன்ற உறுப்பினருடைய கடமை. அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏதோ அரசியலுக்காக, பத்திரிகைகளில் செய்திகள் வர வேண்டும் என்பதற்காக "அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்" என்று பொதுவாகவே குற்றச்சாட்டை வைத்தால் என்ன பிரயோஜனம்? அதில் எந்தவிதமான பலனும் கிடையாது. நீங்கள் அவையிலே வந்து, இந்த நேரத்திலே இந்தக் கருத்தைச் சொன்னதுதான் மிச்சம். மற்றபடி எந்தவிதப் பலனும் மக்களைச் சென்றடையாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, ஆதாரம் இல்லாமல் நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இது முறையல்ல. உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறுவதற்கு முன்பாக ஒரேயொரு வேண்டுகோளை வைக்கின்றேன். தமிழகத்தில் இப்போது அரசாங்கம் நடத்தும் மதுக் கடைகள் கிராமந்தோறும், நகரந்தோறும் இருக்கின்ற காரணத்தால், இளைஞர்கள் பெரிய அளவில் பாதிப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே, பூரண மதுவிலக்கை தமிழகத்தில் அமல்படுத்த வேண்டுமென்று கோரி, நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் கொள்கையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் கொள்கையை பலமுறை இங்கே எடுத்துச்சொல்லி இருக்கிறோம். மது அருந்துவதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஊக்கப்படுத்தவில்லை. மாறாக, மதுவினால் வரக்கூடிய வருவாய் அரசுக் கஜானாவிற்கு வருவதற்குப் பதிலாக சமூகவிரோதிகளின் கைகளுக்குச் சென்றுவிடக் கூடாது என்பதற்காகத்தான் மதுபானக் கடைகளை அரசாங்கமே ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறது. மதுவிலக்குக் கொள்கைகளை முழுமையாக அமல்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒருபோதும் தயங்கியது இல்லை. ஆனால், அது நடைமுறை சாத்தியமா என்பதை மட்டும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பக்கத்திலுள்ள மாநிலங்களெல்லாம் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தாமல் இருக்கின்றன. பக்கத்திலுள்ள சிறிய மாநிலம் புதுச்சேரி. அங்கே இந்தக் கொள்கையை அமல்படுத்த முடியுமா? முதலிலே சுற்றியிருக்கின்ற

ஆந்திராவிலே, புதுச்சேரியிலே, கேரளாவிலே, கர்நாடகாவிலே இந்த மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தினால், தமிழ்நாடும், நமது மாநில அரசும் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்துவதற்குத் தயார் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் புதியதாகச் சேர்ந்திருக்கிற உங்கள் தோழமைக் கட்சித் தலைவர்களிடம் வேண்டுமானால் இது சாத்தியமா, இல்லையா எனக் கேட்டு, அவர்களிடம் ஆலோசனைகளைப் பெற்று, பிறகு வலியுறுத்துங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். முதலில், வால்பாறையில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை வீடியோ கான்பரன்ஸ் மூலமாகத் திறந்து வைத்து சிறப்பித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் வால்பாறை தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வரியே இல்லாத வரவு-செலவுத் திட்டத்தை இப்பேரவைமுன் சமர்ப்பித்துள்ளதை வரவேற்கிறோம். மத்திய அரசு தமிழகத்தை வஞ்சித்தாலும், தமிழகத்தினுடைய பொருளாதாரத்தை நோக்கமாகக் கொண்டு, அடிப்படையான வளர்ச்சித் திட்டங்களுக்கும், கிராமப்புற மக்களின் நலன் பாதுகாக்கப்படவும், கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், சட்டம்-ஒழுங்கு, நீதி நிருவாகம், சாலைப் பாதுகாப்பு, நிருவாக ஆளுமை, தமிழ் வளர்ச்சி, வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன் வளம், பொது விநியோகத் திட்டம், நீர்ப்பாசனம், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள், ஊரக வளர்ச்சி, நகராட்சி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், நகர்ப்புற வீட்டு வசதி, மக்கள் நல்வாழ்வு, பள்ளிக் கல்வி, உயர் கல்வி, சமூக நலன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், மாற்றுத்



திறனாளிகள் நலன் போன்ற துறைகளுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை வரவேற்கிறோம்.

*பிற்பகல் 1-05*

மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையின் விளைவுகளால் கடந்த ஆண்டு தமிழகம் கடுமையான வறட்சியை சமாளிக்க மத்திய அரசிடம் நிதி கோரியபோது, தேவையான நிதியினை வழங்காத நிலையிலும், மத்திய வரி வருவாயில் மாநில அரசின் பங்கை வழங்காமலும், தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிதியை ஒதுக்காத சூழ்நிலையிலும், தமிழகத்தின் சொந்த வருவாய் மூலமே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருவது பாராட்டுதலுக்குரியதாகும்.

மாநிலத்தில் உள்ள கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்காக தீவிரமாக அரசு எடுத்துவரும் 'தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம்' ஏழையெளிய மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கும் நோக்குடன் செயல்பட்டு வருவதையும், மொத்தமுள்ள 385 வட்டாரங்களில், 4,170 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய 120 வட்டாரங்களில் உலக வங்கி உதவியுடன் புது வாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதையும் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். மீதமுள்ள 265 வட்டாரங்களுக்குட்பட்ட 8,354 கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கம் படிப்படியாக நெறிப்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வரவேற்பைப் பெற்றுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டிற்கு 253.92 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. புது வாழ்வுத் திட்டத்திற்கு ரூ.49.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால், கிராமப்புற வறுமை படிப்படியாக அகற்றப்படுமென்று நம்புகிறோம்.

சாலை விபத்துகளைத் தடுப்பதற்கும், சாலை பாதுகாப்பிற்கெனவும் 215 கோடி ரூபாயை மாநில அரசு ஒதுக்கியிருப்பது இந்தியாவிலேயே முதல்முறையாகும் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மனுநீதி முகாம்கள் உட்பட, மக்கள் குறை தீர்க்கும் வழிமுறைகள்மீது அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. கிராமப்புறங்களில் உள்ள அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவை செய்ய தொடங்கப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்பட்டுவரும் 'அம்மா திட்டத்தை' மனதாரப் பாராட்டுகிறோம்.

குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்கவும், கால்நடைகளுக்கான தீவனத் தட்டுப்பாட்டை சமாளிக்கவும் 681 கோடி ரூபாய் அளவிலான நிவாரணத் தொகை வழங்கப்படும் என்ற அரசின் அறிவிப்பு பாராட்டுதலுக்குரியதாகும்.

வேளாண்மை. மாநிலத்தில் 3.34 இலட்சம் ஏக்கர் பரப்பில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு சுமார் 4 இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நமது மாநிலத்தில் உள்ள 1,948 நூற்பாலைகளுக்கு ஆண்டுதோறும் 110 இலட்சம் பருத்தி பேல்கள் தேவைப்படுகின்றன. இதை உற்பத்தி செய்ய 50 கோடி ரூபாய் ஒதுக்கி, பருத்தி சாகுபடி இயக்கம் என்ற ஒரு பெரும் திட்டம் தொடங்க அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது. 2014-2015 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 3.70 ஏக்கர் பரப்பை பருத்தி பயிர் சாகுபடியின்கீழ் கொண்டு வருவதன்மூலம் 5 ஆண்டுகளில் இதை 6 இலட்சம் ஏக்கராக உயர்த்த எடுத்துள்ள நடவடிக்கை, பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளிடத்திலும், நூற்பாலை அதிபர்களிடத்திலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, இதன்மூலம் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பும் அதிகரிக்கும் என்று நம்புகிறோம்.

கடந்த ஆண்டு கடுமையான வறட்சி ஏற்பட்டபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களையும் வறட்சியால் பாதித்த மாவட்டங்களாக அறிவித்து, இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்திலும் வழங்காத நிவாரணத்தை தமிழகத்திலே உள்ள விவசாயிகளுக்கு வழங்கினார்கள். இந்த ஆண்டும் தமிழகத்தில் வறட்சி ஏற்படுவதற்கான சூழல் உள்ள நிலையில், விவசாயிகள் வாங்கிய பயிர்க் கடனையும், அரசு வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், நிலவள வங்கிகளில் வாங்கிய கடன்களையும், வட்டி மற்றும் அபராத வட்டி போன்றவற்றையும் இரத்து செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பண்ணைசாராக் கடன் பெற்ற விவசாயிகள் மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள கடனுக்குரிய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன்களை அரசு இரத்து செய்ய



வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், இந்தியாவிலே இருக்கிற மாநிலங்களில், தமிழகத்தின் முதலமைச்சர், இந்தியத் திருநாட்டில் வாழும் மனித தெய்வமாக இருக்கின்ற நம் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், முதன்முதலாக பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகளின் பயிர்களைக் காப்பீடு செய்ய நடவடிக்கை மேற்கொண்டார். அதன் காரணமாக, 2012 ஆம் ஆண்டு, கார் பருவத்தில், தேசிய வேளாண்மைப் பயிர்க் காப்பீட்டுக் கழகம் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 740.80 கோடி அனுமதித்தது. இத்தொகையில், கடந்த 17-2-2014 வரை, 5,08,677 விவசாயிகளுக்கு 383.78 கோடி ரூபாய் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அதே நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, மாநிலத்தில் ஏற்பட்ட வறட்சி நிலையைக் கருத்தில்கொண்டு, 19,03,469 விவசாயிகளுக்கு 1,266.21 கோடி ரூபாயை வறட்சி நிவாரண நிதியாக மாண்புமிகு அம்மா அவர்கள் வாரி வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமல்ல, 195.49 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகள் பெற்ற குறுகிய காலக் கடனை, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய காலக் கடனாகவும் மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக, பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்மூலமாக 5,08,667 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 383.78 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற வறட்சியைக் கருத்தில் கொண்டு, விவசாயிகள் பாதிக்கப்படாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. எனவே, கூட்டுறவு வங்கியின்மூலமாகப் பெற்ற கடன்களை இரத்து செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியில், கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கியிருக்கக்கூடிய கடன்களுக்கான வட்டி தள்ளுபடி செய்யப்படவில்லை அல்லது அவர்களுக்குக் கடன் கொடுக்கவில்லை என்று நான் குற்றச்சாட்டு சொல்லவில்லை. இந்த ஆண்டும் நம்முடைய தமிழகத்தில் வறட்சி நீடித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், விவசாயிகள் வாங்கியிருக்கக்கூடிய கடன், அபராத வட்டிகளைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் வைத்தேன்.

அதேபோல, பண்ணைசாராக் கடன் பெற்ற விவசாயிகள், மாவட்டக் கூட்டுறவு வங்கிகளிலே வாங்கியுள்ள கடனுக்குரிய வட்டி, வட்டிக்கு வட்டி, அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்து, அசல் தொகையைச் செலுத்திட ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். வரும் நிதியாண்டில் விலையில்லா கறவைப் பசுக்கள், விலையில்லா செம்மறியாடுகள், வெள்ளாடுகள் வழங்கப்படுமென்ற அறிவிப்பும், அதற்கான நிதியொதுக்கீடும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, ஏழை மக்களின் வாழ்க்கைத்தரத்தைப் பொருளாதாரரீதியாக மேம்படுத்தியுள்ள திட்டமாகவும் நாங்கள் கருதுகிறோம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய தொகுதியில்கூட, இந்தத் திட்டத்தின்மூலம் செம்மறியாடு கொடுத்ததில், 41 குட்டிகள் போட்டிருப்பதாகக்கூட தகவல்கள் வந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்களுக்கு இந்தத் திட்டம் வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது.

அடுத்து பொது விநியோகத் திட்டம். பொது விநியோகத் திட்டத்தின்மூலம் உணவுப் பாதுகாப்பை இந்த அரசு உறுதி செய்துள்ளது. ஒரு கோடியே 84 இலட்சம் அரிசி அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி வழங்கப்பட்டு, மானிய விலையில் பருப்பு, சமையல் எண்ணெய், சிறப்புப் பொங்கல் பரிசுகள் வழங்கப்பட்டன. ஏழைகளின் பசியைப் போக்க 2014-2015 ஆம் ஆண்டிற்கு அது 5,300 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பு பாராட்டுதலுக்குரியதாகும்.



விலைவாசியைக் கட்டுப்படுத்த 297 அம்மா உணவகங்கள், அம்மா குடிநீர்த் திட்டம், 210 அம்மா மருந்தகங்கள், மேலும் கூடுதலாக 100 அம்மா மருந்தகங்கள் புதிதாகத் தொடங்கப்படும் என்பன போன்ற அறிவிப்புகள் அனைவருடைய பாராட்டையும் பெற்றுள்ளன.

அடுத்து நீர்ப்பாசனம். 2014-2015 ஆம் ஆண்டிற்கான அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 329.65 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நீர் நிலைகளைச் சீரமைக்க ரூ.86.28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த நிதிநிலை அறிக்கையில், அத்திக்கடவு-அவினாசி திட்டத்திற்கு மத்திய அரசு நிதி வழங்காவிட்டாலும், மாநில அரசே பொறுப்பேற்று, இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தது. இதுபற்றிய அறிவிப்பு, நிதிநிலை அறிக்கையில் இல்லை. இத்திட்டம் செயல்முறைக்கு வர அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், விவசாயத்திற்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீருக்குமான உத்தரவாதத்தை உருவாக்கிட கிடப்பில் உள்ள ஆனைமலையாறு-நல்லாறு திட்டம், பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் போன்றவற்றை, கேரள அரசுடன் பேசி, நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

அடுத்து மின்சாரம். மாநிலத்தின் ஒட்டுமொத்தமான சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு மின்சாரம் இன்றியமையாத ஒன்றாகும் என்பதை உணர்ந்து, அரசு படிப்படியாக 29-1-2014 அன்று 12,799 மெகா வாட் உச்சத் தேவையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் நிறைவு செய்ய இயன்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துக்கொண்ட இடைவிடா முயற்சியும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட இடைவிடா முயற்சியும் பாராட்டத்தலுக்குரியதாகும். தொடர்ந்து புதிய மின் திட்டங்களை உருவாக்கிட அரசு எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டுகிறோம். காற்றாலைமூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை வெளியேற்ற 1,192 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கப்புக்குண்டு, ஆணைக்கடவு, ராசிபாளையம் ஆகிய இடங்களில் 400 கிலோ வாட் மின் தடத்தோடுகூடிய 400 கிலோ வாட் துணை மின் நிலையங்களையும் அமைப்பதற்கான பணிகள்

நடைபெற்றுவருகின்றன என்ற அறிவிப்பை அனைத்து மக்களும் பாராட்டுகிறார்கள். அதே நேரத்தில், சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மின் பற்றாக்குறையின் காரணமாக ஜெனரேட்டர்கள் வாங்க அரசு மானியம் வழங்கும் என்று அறிவித்ததை இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. அதற்கு மானியம் உடனடியாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று மின் தடையின்போது ஜெனரேட்டர்கள் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு நிதி உதவிகளை ஆயிரக்கணக்கான சிறு தொழில் முனைவோர்களுக்கு செய்திருக்கிறார்கள் என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அதேபோன்று வரிச் சலுகைகளையும் தந்திருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மத்திய அரசு தொடர்ந்து டீசல், பெட்ரோல் விலையை உயர்த்தினாலும், மாநில அரசு போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தாமல், புதிய பேருந்துகளையும், புதிய வழித்தடங்களையும், சிற்றுந்துகளையும் மக்கள் பயன்பாட்டிக்குக் கொண்டு வந்து செயல்படுத்தியுள்ளதை பாராட்டுகிறோம். 200 கோடி ரூபாய் செலவில் பழைய பேருந்துகளை மாற்றி 1,000 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்ற அறிவிப்பு பாராட்டுக்குரியதாகும். அதே நேரத்தில், 2014-2015 ஆம் ஆண்டிற்கு டீசல் மானியமாக 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதை வரவேற்கிறோம்.

தொழில். நமது மாநிலத்தில் தொழில் வளத்தையும், கட்டமைப்பையும் ஊக்குவிக்க, அரசு, வரும் அக்டோபர் மாதத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையிலே நடத்தும் என்ற அறிவிப்பு தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், தமிழகத்தின் ஒட்டுமொத்த தொழில் 



வளர்ச்சிக்கும் பெரும் வாய்ப்பாக அமையும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதேநேரத்தில் நம்முடைய மாநில அரசு சர்வதேச ரீதியாக இப்படிப்பட்ட மாநாடுகளை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றபோது, கடந்த மாதம் கர்நாடக மாநில முதலமைச்சர் மாண்புமிகு சித்தராமையா அவர்கள் கோவை மாநகருக்கு வந்து, முதலீட்டாளர்களெல்லாம் கர்நாடக மாநிலத்திற்கு வரவேண்டுமென்று கோரிக்கை வைத்ததை எந்தவகையில் நமது அரசு கண்காணித்துக் கொண்டிருக்கிறது, நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது என அறிய விரும்புகிறேன். கோவை ஒரு தொழில் நகரம். தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படக்கூடிய அந்த நகரத்தைவிட்டு கர்நாடகத்திற்குச் செல்லக்கூடிய முதலீட்டாளர்கள் இல்லை. இருந்தாலும், அரசு கவனம் எடுத்துக்கொண்டு, இந்த மாதிரி மாநாட்டை நடத்துகின்றபொழுது, முதலீட்டாளர்களை ஈர்க்கும்வண்ணம் கோவையில் அதிகமான தொழில்களைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது கர்நாடக முதல்வர் அவர்கள் கோவைக்கு வந்தார்கள். அது எந்த வகையில் இருக்கிறது என்று கேட்டார்கள். இதுகுறித்து கடந்தமுறை சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நான் சொல்லியிருக்கிறேன். Expression of interest என்று சொல்லக்கூடிய, அதாவது தொழில் தொடங்க ஆர்வம் உள்ளவர்கள் யார் என்று கேட்டு மனுவைக் கொடுக்கின்றார்கள். அந்த மனுவிலே ரூ.5 கோடி, ரூ.10 கோடி என்று பூர்த்தி செய்து கொடுக்கிறார்கள். அந்த மனுவை வாங்கிக் கொண்டு ரூ.12,000 கோடி முதலீடு என்று சொல்லியிருக்கின்றார்கள். ஒரு நிறுவனம் வருகிறது என்று சொன்னால், அந்த நிறுவனம் இவ்வளவு கோடி முதலீடு செய்திருக்கிறது என்று அவர்கள் அறிவித்திருந்தால், அந்த நிறுவனம் அங்கு சென்றுவிட்டது என்று அர்த்தம். ஆனால், அவர்கள் ஏதோ ஒரு மாநாட்டை நடத்தி, மாநாட்டின்வாயிலாக expression of interest என்று சொல்லக்கூடிய ஆர்வம் யார், யாருக்கு இருக்கிறது என்பதை மட்டும் மனுக்களில்

பெற்றுக்கொண்டு ரூ.12,000 கோடி என்று சொல்லியிருக்கிறார்கள். ரூ.12,000 கோடி என்பதற்கான விவரம்கூட அதில் இல்லை. எந்த கம்பெனி அங்கே தொழிலை ஆரம்பிக்கின்றார்கள், யாரெல்லாம் அங்கே போகின்றார்கள் என்பதற்கான விவரங்கள் அதில் இல்லை. அதற்குப் பின்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் கொடீசியா மற்றும் எடிசியா நிறுவனத்தினர் எல்லோரும் பேட்டி கொடுத்திருக்கிறார்கள். இங்கிருந்து ஒருவருமே கர்நாடகா செல்லப் போவதில்லை. அதுமட்டுமல்லாமல், நாங்கள் அங்கே வருகை தந்தபோது, அந்த owner வழியில் வந்தபோது, நாங்கள் கேட்ட கேள்விக்கு, 'நான் இருக்கின்றவரை பிரச்சினை இல்லை' என்று அவர் சொல்லியிருக்கின்றார். எங்களுக்கு அங்கு பாதுகாப்பும் இல்லை, skilled labour என்று சொல்லக்கூடிய பயிற்சி பெற்ற தொழிலாளர்களும் அங்கு இல்லை. ஆகவே, நாங்கள் அங்கு செல்ல மாட்டோம் என்று அறிக்கையும் கொடுத்திருக்கிறார்கள். ஆக, நான் கடந்த முறை பேரவையில் சொன்னதற்குப் பின்னால், இரண்டு, மூன்று நாட்கள் கழித்து, கர்நாடக மாநில செய்தித்தாள்களில் செய்தி வந்தது. அதில், அரசியலுக்காக சித்தராமையா அவர்கள் இப்படிச் செய்திருக்கிறார்கள் என்று அங்கு இருப்பவர்களே பேசியிருக்கின்றார்கள். ஆகவே, தமிழகத்திலிருந்து ஒரு தொழிற்சாலைகூட கர்நாடகாவிற்கு செல்லாது. மாண்புமிகு அம்மா அவர்களது நல்லாட்சியில் இங்குதான் தொழில் தொடங்கப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் நீங்கள் அதைத் தெரிந்துகொள்ளப் போகிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருப்பவர்களுக்கு இன்னும் ஊக்கம் அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். திருப்பூரைப் பொறுத்தவரையில், சாயப் பட்டறைக்காகத்தான் அங்கே செல்கிறோம் என்று ஒரு சிலர் பேட்டி கொடுத்தார்கள். ஆனால், அங்குள்ள உண்மை நிலை என்னவென்றால், நான் கடந்த முறை சொன்னதைப்போல, மாண்புமிகு அம்மா அவர்கள் 20 கோடி ரூபாய் அளவிற்கு வட்டியில்லாமல் கொடுத்ததன் வாயிலாக இப்பொழுது அங்கு இருக்கிற 60 சதவிகித சாயச் சாலைகள் அங்கேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்போதுகூட மரியாதைக்குரிய அண்ணன் சட்டமன்ற உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்



என்னிடத்தில் வந்து பேசும்போது, இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் பேச்சுவார்த்தை முடிந்தவுடனேயே அங்கேயே அந்த ஆலையை துவங்குவதற்கான ஏற்பாட்டை செய்யலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் எந்தத் தொழிற்சாலையும் எங்கேயும் செல்லாது. அதோடுமட்டுமல்லாமல், இந்தியாவிலேயே தொழில் துவங்க சிறந்த மாநிலம் தமிழகம் மட்டும்தான் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி, சாலை இணைப்புகள், குடிநீர் வசதி, பொதுப் பயன்பாட்டிற்கான கட்டடங்கள் போன்றவற்றிற்கு 5,168.07 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். மதுரை, விருதுநகர், சிவகங்கை, நாகப்பட்டினம், வேலூர், சேலம், திருப்பூர், கோவை, கடலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்காக 745.67 கோடி ரூபாயை 2014-2015 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்.

மக்கள் நல்வாழ்வு—மருத்துவத் துறையில் நம் மாநிலம் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சருடைய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் கிடைத்த ஒரு மிகப் பெரிய பொக்கிஷமாகும். தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற வசதியற்ற ஏழை மக்கள் அம்மா அவர்களின் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் சிகிச்சை பெற்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்போது தனியார் மருத்துவமனைகளைக் காட்டிலும், அரசு மருத்துவமனைகளும், ஆரம்ப சுகாதார நிலையங்களும், சிறப்பான முறையில் இயங்கும் மருத்துவமனைகளாக மாறியுள்ளதை மக்கள் பாராட்டுகிறார்கள். அங்கு போதிய மருத்துவர்கள், செவிலியர்கள், உதவியாளர்கள் இல்லாத காரணத்தினால், உடனடியாக பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [2014 பிப்ரவரி 19

பள்ளிக் கல்வி, உயர் கல்வி-தமிழகத்தில் அம்மா ஆட்சியில் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் அனைத்தும் இலவசம். தரமான இலவச கல்வி கிடைத்திடவும் 17,731.71 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வி என்பது தமிழகத்தில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது பாராட்டுதலுக்குரியதாகும். பாடப் புத்தகம், நோட்டுப் புத்தகம், பேருந்துக் கட்டணம், சீருடை, பள்ளி புத்தகப் பைகள், காலணிகள், வடிவியல் பெட்டி, கலர் பென்சில், கிரையான்கள், மிதிவண்டி, மலைப் பகுதி கம்பளி ஆடைகள், சேனிட்டரி நாப்கின், விலையில்லா மடிக் கணினி போன்றவை தமிழகத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் +2 வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து மாணவர்களுக்கும் இலவசம் என்றே நாம் எடுத்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட நடைமுறைகளை நாங்கள் பாராட்டுகிறோம்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக 7,603 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை அவர்களைச்; சென்றடையக்கூடிய முறையிலும், அவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர், வீட்டு வசதி, மின்சார வசதி, சாலைப் பாதுகாப்பு போன்றவை செய்து கொடுப்பதற்கான முறையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை தொகுதியில், ஆனைமலையை தலைமையிடமாகக்கொண்டு தாலுகா அலுவலகம் அமைக்க உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறையில் உள்ள அரசு மருத்துவமனை, 16-2-1915 ஆம் ஆண்டில் Mr. G.A. Mars என்ற ஒரு வெள்ளைக்கார மாவட்ட ஆட்சித் தலைவரால் தொடங்கி வைக்கப்பட்ட ஒரு மருத்துவமனையாகும். 99 ஆண்டுகள் முடிந்து, 100-வது ஆண்டில் காலடி எடுத்துவைக்கப்போகும் இந்த மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையை தரம் உயர்த்த நிதியொதுக்கீடு செய்து, அனைத்து வசதிகளையும் கொண்ட மருத்துவமனையாகக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை வாட்டர் பால்ஸ் எஸ்டேட்டைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேருந்துகளில் மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி



2014 பிப்ரவரி 19] [திரு. எம். ஆறுமுகம்]

கோவிலுக்குச் சென்றார்கள். 30-12-2013 அன்று கும்பகோணம்-சென்னை மெயின் ரோடில் சேத்தியாதோப்பு அருகில் டி.என்.29 என் 3040 என்ற ஒரு தனியார் பேருந்தோடு மோதி விபத்து ஏற்பட்டதால் நந்தினி வயது 13, கிருஷ்ணவேணி வயது 45, லஷ்மி வயது 58, நித்தியா பிரியா வயது 21, முருகானந்தம் வயது 30 ஆகிய ஐந்து பேர்கள் சம்பவ இடத்தில் மரணம் அடைந்து விட்டார்கள். 17 பேர்கள் படுகாயம் அடைந்து, சிகிச்சைக்குப்பின் வீடு திரும்பியுள்ளார்கள். இவர்கள் ஏழையெளிய மக்கள், வேறு வருமானம் இல்லாத, எஸ்டேட்டில் வேலை பார்க்கும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

கோவை மாவட்டத்தில் ஆட்டோவில் செல்ல கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டுமென்பதற்கான முறையில் அங்கே ஆட்டோ ஓட்டிக் கொண்டிருக்கக்கூடிய ஆட்டோ ஓட்டுநர்கள் குறைந்தபட்சம் ரூபாய் 30 எனவும், அதற்குமேல் ஒவ்வொரு 1½ கிலோ மீட்டருக்கும், ரூபாய் 15 எனவும் நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் கோரிக்கை வைத்துள்ளார்கள். இது ஒரு பிரச்சினையாகவே கோவை மாவட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அரசு நடவடிக்கை எடுத்து அவர்கள் வைத்திருக்கக்கூடிய கோரிக்கைகளை பரிசீலித்து நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு தனியார் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பெற்று வரும் சம்பளத்திலிருந்து 6 ரூபாய் குறைவாக இருக்கிறது. அதை சேர்த்து வழங்குவதற்கு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வால்பாறை பகுதியில் மட்டுமல்ல, கோவையில் பல பகுதிகளில் காட்டு யானைகள், சிறுத்தைப் புலிகள், கரடி, காட்டுப் பன்றி தொல்லை அதிகமாகிவிட்டது. கொஞ்ச

நாட்களுக்கு முன்பு வெள்ளனே பல் விளக்கிக் கொண்டிருந்த ஓர் அம்மாவைக் காட்டுப் பன்றி காலில் கடித்து காயமாகிவிட்டது. பயமாகவும் இருக்கிறது. நீங்கள் விலங்குகளை அடிக்கவும் கூடாது என்கிறீர்கள். கொல்லவும் கூடாது என்கிறீர்கள். அதற்குப் பாதுகாப்பு இருக்கிறது. நான் செத்துப் போய்விட்டேனென்று சொன்னால், யானை மீது நீங்கள் மார்டர் கேஸ் புக் பண்ண வேண்டாமா? நான் தப்பு செய்தால் கேஸ் போடுகிறீர்கள். நேற்று 45 வயதுள்ள ஒரு பெண்ணை யானை தன் தும்பிக்கையால் தூக்கி வீசியதில், அவரின் குடல் வெளியே வந்துவிட்டது. நேற்றைக்கு ஹாஸ்பிட்டலில் அட்மிட் பண்ணி, சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மிகவும் கொடுமையாக இருக்கிறது. ஒரு பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். மனித உயிர்களுக்கு அதிக மரியாதை கொடுக்கக்கூடிய முறையில், காட்டு விலங்குகளினால் மரணம் ஏற்பட்டவர்களுக்கு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணம் அளித்து வந்ததை மூன்று இலட்சமாக உயர்த்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை இன்னும் உயர்த்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காட்டு விலங்குகளினால் மரணம் ஏற்பட வேண்டுமென்பதற்காக அல்ல. அதைத் தடுக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், அறிவிக்கப்பட்ட மூன்று இலட்சம் ரூபாயை கூடுதலாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப்-1 தேர்வு எழுதுவதற்கான வயது உச்சவரம்பினையும் தற்போதுள்ள 35 வயதிலிருந்து 45 வயதாக உயர்த்தி அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, காவல் துறையில் பணிபுரியும் காவலர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப்போல அனைத்துச் சலுகைகளும் வழங்கப்பட வேண்டும்.

கூட்டுறவுத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும். பிற மாநிலங்களில் வழங்கி வருகிறார்கள். தமிழகத்தில் மட்டும் வழங்கப்படுவதில்லை. இந்தக் குறையை அரசு நிவர்த்தி செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வந்தவுடன், அந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்க அரசுத் துறை அலுவலர்களைக் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது. அந்த வங்கிகள் சிறப்பாகச் செயல்பட வேண்டும், அதில் பணிபுரிகிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்ற அடிப்படையில், அதனை ஆய்வு செய்யும்பொருட்டு இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டியினுடைய அறிக்கை வந்த பிறகு, அதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கோவை மாவட்டம், கோவை மாநகராட்சிக்குட்பட்டிருக்கக்கூடிய, கோவை தெற்கு, உப்பிலிபாளையத்தில் கிராமம் க.ச. எண் S.F.No. 230/1, S.F. No. 231/1, S.F. No. 232/1-ல் கிட்டத்தட்ட 230-க்கும் மேற்பட்ட நபர்கள் நிலத்தை அறியா கிரயம் பெற்றார்கள். அவர்கள் மேற்கண்ட நிலத்தை வரன்முறைப்படுத்தி, பட்டா கோரி, கோவை உதவி ஆணையாளர் அலுவலகத்தில் மனு சமர்ப்பித்திருக்கிறார்கள். இன்னும் அவர்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கும், சென்னையில் இருக்கக்கூடிய இயக்குநர் அலுவலகத்திற்கும், நகர்ப்புற அலுவலகத்திற்கும் இதுதொடர்பான மனுக்களைப் போட்டு வருகிறார்கள். எனவே, அதை அரசு பரிசீலித்து அவர்களுக்குப் பட்டா கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சியினாலும், வெள்ளத்தாலும் மாறி, மாறி குத்தகை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிப்புகளை உணர்ந்து குத்தகை விவசாயிகளின் பாக்கிகளை தள்ளுபடி செய்ய வேண்டும்.

விவசாயிகளிடம் இந்தக் காரணத்தைக் கூறி, நிலத்தை விட்டு வெளியேற வேண்டுமென்று விவசாய நீதிமன்றங்கள் உத்தரவிடுகின்றன. இதைத் தடுத்து நிறுத்த, அந்த நீதிமன்றங்களை மூட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் மனைகளில் குடியிருப்பவர்களுக்கு வாடகை நிர்ணயித்திருப்பதை இரத்து செய்து, அதனை பகுதியாக அறிவித்து, அவர்கள் குடியிருப்பதை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராம நிருவாக அலுவலர்களின் உதவியாளர்களுக்கு கல்வித் தகுதிக்கேற்ப பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிவகங்கை வட்டத்தைப் பிரித்து காளையார்கோவில் வட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

திருவாரூர் தொகுதி, புதூர் மில் தெருவைச் சேர்ந்த மாணவன் ஜீவா, வயது 4½ அவருடைய தந்தை சசிக்குமார், அரசு தொகுப்பு வீடு இடிந்து விழுந்து கடந்த 14-12-2013 அன்று இறந்துவிட்டார். அவருக்கு மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து உதவ வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, கோவை மாவட்டத்தில், கோவை பகுதியில் கோவை மாஸ்டர் பிளான் என்று தொடர்ச்சியாகச் சொல்லப்பட்டு வருகிறது. இரண்டாவது திட்டமாக அதனை அறிவித்திருக்க வேண்டும். அதன் தற்போதைய நிலை என்னவென்று தெரியவில்லை. அதனை மாஸ்டர் பிளான் அடிப்படையில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பத்திரப்பதிவு கட்டணம், கைடு லைன் வேல்யூவை உயர்த்தியதன் காரணமாக, அரசுக்கு வரவேண்டிய வருவாய் குறைந்து, பணப்புழக்கம் குறைந்திருக்கின்றது. இதனை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கர்நாடகாவைப் பற்றிக் கேட்டார்கள். ஒட்டுமொத்த தமிழகத்தில் கடந்த காலத்தினையும், தற்போதைய நிலையையும் ஒப்பிட்டு, ஒரு சிறிய உதாரணத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வெளியிலிருந்து அறிக்கை ஒன்றை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கடந்த 2006-2011 ஐந்தாண்டு காலத்தில் அவர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமாகவும், அரசாணை வாயிலாகவும் மொத்தம் ரூ.66,000 கோடி முதலீடு கொண்டுவருவதாக அறிவித்திருந்தார்கள். ஆனால், 2011 ஏப்ரல் வரை அவர்களின் முதலீடு 25,126 கோடி ரூபாய் மட்டும்தான். அதற்குப் பின்னர், அவர்கள் போட்ட ஒப்பந்தத்தில்கூட 25,126 கோடி ரூபாய் என்றுதான் குறிப்பிட்டார்கள். முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல ஒன்றை சொல்லியிருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், 2006 ஆம் ஆண்டு தேர்தல் வருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக, ஹுண்டாய் நிறுவனத்தோடு பேச்சுவார்த்தையினை முடித்து ரூ.4,000 கோடி புதியதாக முதலீடு செய்யவேண்டும் என்று ஒப்பந்தம் ஏற்படுகின்றது. தேர்தல் முடிந்ததற்குப் பின்னர், அந்த M.O.U. போடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. அதற்குப் பின்னர் அவர்கள் 25-1-2008-ல் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள், 25-1-2008-ல் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகிறார்கள். 1-2-2008-ல் அந்த ஆலை திறக்கப்படுகின்றது. எட்டு நாட்களில், ரூ.4,000 கோடி முதலீட்டில் திறக்கப்படுகின்றது என்று சொல்கிறார்கள். அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முதலீடு காலம் 1-6-2006 என்று போட்டிருக்கிறார்கள். 25,000 கோடி ரூபாயில், ரூ.4,000 கோடி மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்ததுதான். ஆக, அந்தத் தொகையைக் கழித்தால், ரூ.21,000 கோடி மட்டும்தான் அவர்களின் ஐந்தாண்டு காலத்தில் வந்தது. அதுமட்டுமல்லாமல், அவர்கள் வளர்ச்சி விகிதத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உற்பத்தி விகிதத்தை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 2005-2006 ஆம் ஆண்டில் 15.11 சதவிகிதம். அவர்கள் காலத்தில் 2008-2009 ஆம் ஆண்டு, 1.31 என்கிற அளவிற்கு குறைந்துள்ளது. இதுதான் அவர்களுடைய ஆட்சிக்காலத்தின் சாதனை என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேநேரத்தில், ஒட்டுமொத்த வளர்ச்சியை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், இன்றையதினம் தமிழகம் 13-வது இடத்திற்கு சென்றுவிட்டது, 14-வது இடத்திற்கு சென்றுவிட்டது என்று அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். பொருளாதாரத்தில் ஏற்பட்ட மந்த சூழ்நிலையின் காரணமாக அவர்களின் காலத்திலும் குறைந்திருந்தது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் நான் இதனைச் சொல்கிறேன். ஒட்டுமொத்த வளர்ச்சி என்று சொன்னோம் என்று சொன்னால், 2005-2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில், 13.96 சதவிகிதம் வளர்ச்சி. அதே அவர்களுடைய ஆட்சிக்காலத்தில், வளர்ச்சி என்பது 2008-2009-ல் பார்க்கும்போது, 5.45 சதவிகிதம் மட்டுமே இருந்தது என்பதை இந்தச் சட்டமன்றத்தின்வாயிலாக அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். குஜராத்தில்கூட ஜப்பான் கம்பெனிகள் அதிகமாக முதலீடு செய்தன என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார்கள். அதற்குக்கூட நான் பதில் சொல்லியிருந்தேன். 364 ஜப்பான் கம்பெனிகள் இருப்பது இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குஜராத்தில் 54 கம்பெனிகள் மட்டும்தான் இருக்கின்றன. ஆக, இந்திய அளவில் முதலீடு செய்யவேண்டும் என்று சொன்னால், தகுந்த பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு என்னென்ன தேவையோ, அதனை செய்துகொடுக்கின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இருக்கின்றது. ஆக, முதலீட்டை இழக்கின்ற மாநிலமாக மற்ற மாநிலங்கள் இருக்கலாம். ஆனால், முதலீட்டை அதிகரிக்கின்ற மாநிலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளும் தமிழகம் இருக்கின்றது. இன்னும் மூன்று மாத காலத்தில், உலகளவில், இந்தியாவிலேயே அதிக முதலீடு இருக்கின்ற மாநிலமாக தமிழகம் விளங்கும். இது மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில் நிச்சயமாக நடக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் பேசும்போது, அறியாமல் கிரயம் பெற்றவர்களுக்கு பட்டா வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்தார்கள். அந்தக் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒப்புதலைப் பெற்று, கூடியவிரைவில் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட விளக்கம் அளித்த மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

பிற்பகல் 1-35

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசிய எங்களது கட்சியினுடைய உறுப்பினர்கள் ஏற்கெனவே பல ஒதுக்கீடுகள் குறித்து தெரியப்படுத்தியும், அவற்றைப் பாராட்டியும் இருக்கிறார்கள். ஆகவே, கூறியது கூற நான் விரும்பவில்லை. முதலாளித்துவ பொருளாதாரத்தில் மீண்டும், மீண்டும் நெருக்கடி, தொழில் மந்தம், தொழில் வீழ்ச்சி ஏற்படும் என்று மார்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த 100 ஆண்டுகளில் 10-க்கும் மேற்பட்ட தடவை உலகப் பொருளாதாரம் மந்த நிலையில் இருந்திருக்கிறது. இப்போதும் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் நெருக்கடியில் சிக்கிய பொருளாதாரம், அதனுடைய தலைமை நாடு அமெரிக்கா உட்பட, முழுமையாக மீட்சியடையவில்லை. இந்தப் பொருளாதார மந்தம், தொழில் தேக்கம், உலகத்தில் இதர நாடுகளையும் கடுமையாகப் பாதித்திருக்கிறது. இப்போது நம்முடைய நாட்டிலும், நம்முடைய மாநிலத்திலும் அந்தத் தொழில் மந்தம் கடுமையான விளைவுகளை உண்டாக்கியிருக்கிறது. தானியங்கித் தொழிற்சாலைகளில் உற்பத்தி குறைந்திருக்கிறது. விற்பனையும் நம்முடைய மாநிலத்திலே குறைந்திருக்கிறது, இந்தப் பொருளாதார

நெருக்கடியின் காரணமாக. கட்டுமானத் தொழிலிலும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. பத்திரப் பதிவு இதன் காரணமாகக் குறைந்திருக்கிறது. வறட்சி இன்னொரு பக்கத்தில் வாட்டுகிறது. மக்களின் வாங்கும் சக்தி குறைந்திருக்கிறது. எனவே, அரசின் வருவாய் பல தரப்புகளிலும் குறைந்திருக்கிறது. இந்த நிலையில், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல மத்திய அரசும், தன் பங்கிற்குத் தரவேண்டிய நிதியைக்கூட தராமல் பழி வாங்கிக் கொண்டிருக்கிறது. எனினும், ஏற்கெனவே செயலில் உள்ள நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு எதுவும் வெட்டப்படவில்லை என்பது மட்டுமல்ல, பல ஒதுக்கீடுகள் கூட்டப்பட்டிருக்கின்றன, புதிய வரி எதுவும் விதிக்கப்படவில்லை என்பதை மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வரவேற்கிறேன்.

சில்லரை வர்த்தகத்தில் அன்னிய முதலீடு என்பது ஒரு பெரும் பிரச்சினையாக வந்தது. மத்திய அரசானது நாடாளுமன்றத்திலேயே அதை ஒரு சட்டமாக இன்று நிறைவேற்றிவிட்டது. அந்தச் சட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகமும் இரண்டு கரங்களையும் தூக்கி நாடாளுமன்றத்திலே ஒப்புதல் கொடுத்தது. தமிழ்நாட்டில் அந்தச் சட்டத்தை அமல்படுத்தமாட்டேன் என்று தமிழக அரசு ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. பல இலட்சக்கணக்கான சில்லரை வர்த்தகர்களுடைய வாழ்க்கையில் விளையாடக்கூடிய ஒரு சட்டமாக அந்தச் சட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அவர்களும் வேலையை இழந்து, வருமானத்தை இழந்து, கடும்பாதிப்புக்கு தமிழகத்திலே உள்ளானால், ஏற்கெனவே இருக்கிற நெருக்கடியை அது தீவிரப்படுத்தும். திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றியிருக்கிற மாநாட்டுத் தீர்மானங்களில் சில்லரை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டை எதிர்க்க வேண்டுமென்பது, ஒரு தீர்மானம். (குறுக்கீடு) உண்மையான பாராளுமன்றத்தில் அந்தச் சட்டம் வந்தபோது ஆதரித்து கை தூக்கிவிட்டு, பார்லிமென்ட் போன்ற செட்டிங்கில் அமர்ந்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழக திருச்சி மாநாட்டிலே அந்தச் சட்டத்தை எதிர்த்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். என்ன காரணத்திற்காக சில்லரை வர்த்தகர்களை, இப்படி சில்லரை, சில்லரையாக விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இந்தச் சட்டத்தை, எப்படி தமிழக அரசாங்கம், உறுதியாக எதிர்த்து, அமல்படுத்தமாட்டேன் என்று தெரிவித்திருக்கிறதோ அதைப்



போலவே, உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டுச் சட்டம் கடுமையான விளைவுகளை குறிப்பாக, சிறு வர்த்தகர்கள் மத்தியிலே உண்டாக்கும் என்கிற அச்சம் இருக்கிறது. ஆகவே, அந்தச் சட்டத்தையும் தமிழக அரசு அமல்படுத்தாது என்று அறிவிக்கவேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பதிலளித்தபோது, ‘நாங்கள் அந்தச் சட்டத்தை அமல்படுத்தவில்லை, வர்த்தகர்களை பதிவு செய்யமட்டும்தான் சொல்கிறோம்’ என்று விளக்கமளித்திருக்கிறார்கள். நான் அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கடைக்குள்ளே எலி இருந்தாலும், கடைக்குள்ளே கரப்பான்பூச்சி இருந்தாலும் 1,00,000/-லிருந்து 6,00,000/- ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம், கடையை மூடலாம் என்றெல்லாம் இருக்கிற அந்தச் சட்டமானது, மிகக் கடுமையானது. பெரிய வர்த்தகர்களுக்கு சாதகமாக சட்டம் அமைந்துள்ளது. வால்மார்ட், ரிலையன்ஸ் போன்ற வர்த்தகர்களால்தான் அதுபோன்ற நிபந்தனைகளை நிறைவேற்ற முடியும். இதுபோன்ற நிபந்தனைகளை சிறு வர்த்தகர்கள் நிறைவேற்றவில்லை. ஆகவே, கடையை மூடிவிட்டுப் போங்கள் என்று சொல்வதற்கான வாய்ப்பு அனைத்தும் அதிகாரிகளுக்கு அந்தச் சட்டத்திற்குள் இருக்கிறது. ஆகவே, சிறு வர்த்தகர்களுக்கு பாதுகாப்பு என்கிற வகையிலே அரசின் நடவடிக்கை இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 என்ற புதிய சட்டத்தை ஏற்படுத்தி 5-8-2013 முதல் நாடு முழுவதும் அமல்படுத்தியது. இந்தச் சட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத் துறை என்ற புதிய துறையை அரசு ஏற்படுத்தியுள்ளது. இதனால் சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வருடாந்திர வணிக மதிப்பீடு ரூ.12,00,000/-த்திற்கு மேல் இருந்தால் உரிமையும், ரூ.12 இலட்சத்திற்குக்கீழ் இருந்தால் பதிவு மட்டும் செய்யப்பட வேண்டும். இதுதான் சட்டத்தினுடைய சாராம்சம். இந்தச் சட்டத்திலே பதிவு மற்றும் உரிமம் பெறும் காலம் 2014 பிப்ரவரி

4 ஆம் தேதி வரை. இதனை ஏற்கெனவே மத்திய அரசு ஓராண்டு நீட்டித்தது. வணிகர்கள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று, பதிவு மற்றும் உரிமம் பெறும் காலத்தை தற்போது 2014 பிப்ரவரி 5 ஆம் தேதி முதல் மேலும் 6 மாத காலம் வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

கூடுதலாக தமிழ்நாட்டிலே இதுவரை 36,320 உணவு வணிகர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. 2,32,345 உணவு வணிகர்கள் பதிவு செய்துள்ளனர். மற்றபடி வியாபாரிகளை தொந்தரவு செய்யக்கூடிய நோக்கம் இல்லை. வியாபாரிகளுக்கு பாதுகாப்பான மற்றும் தரமான உணவுத் தொழிலை உறுதிப்படுத்த வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** நிதிநிலை அறிக்கையில், வருவாய் தவிர மற்றவற்றைப் பார்க்கின்றபோது, வரி வருவாயை அதிகப்படுத்துவதற்கான வாய்ப்பில்லை. ஏற்கெனவே விதித்த வரி வருவதற்கு வாய்ப்பிருந்த தொழில்களில், ஏற்றுமதியும், விற்பனையும் குறைந்திருக்கின்ற காரணத்தினால், நம்முடைய வரி வருவாயும் குறைகின்றது. ஆகவே, வரியில்லா வருவாயை அதிகப்படுத்துவது என்பதுதான் இப்போது நாம் அக்கறையோடு கவனம் செலுத்தவேண்டிய பிரிவாக இருக்கிறது. இங்கே ஒரு நிறுவனத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கின்ற கனிம வள நிறுவனம் 2012-ல் கடுமையான நிதிப் பற்றாக்குறையிலே இருந்தது. அது ஒரு பொதுத் துறை நிறுவனம். ஆனால், 2013-ல், 180 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் ஈட்டி, வியாபாரம் செய்து உண்மையிலேயே சாதனை புரிந்துள்ளது. ஒரு பொதுத் துறையால் சாதிக்க முடியும் என்பதற்கான சான்றாகவும் அது இன்றைக்கு மிளிர்ந்துகொண்டிருக்கிறது. டாமின் நிறுவன சுரங்கங்கள் ஏற்கெனவே ஒப்பந்ததாரர்களிடம் சிக்கிக் கொண்டிருந்ததுபோய், பழைய ஒப்பந்ததாரர்களை இரத்து செய்துவிட்டு இப்போது சில சுரங்கங்களை டாமின் நிறுவனம் எடுத்துக்கொண்டது. சில குவாரிகளையும், சுரங்கங்களையும்



எடுத்துக்கொண்டது. எடுத்துக்கொண்ட பிறகு, இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இப்போதும் சில சுரங்கங்கள் ஒப்பந்தக்காரர்களிடம் இருக்கின்றன. சில சுரங்கங்கள் நீதிமன்ற வழக்கிலே இருக்கின்றன. இந்த சுரங்கங்களை முழுமையாக டாமின் நிறுவனம் எடுத்துக்கொண்டால், இப்போது இருக்கின்ற 180 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் வருமானம், இன்னும் 20 மடங்கு பெருகுவதற்கான வாய்ப்பிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

டாமின் நிறுவனம், இப்போது எடுத்துக்கொண்ட சுரங்கங்களை தலைமையகத்திலே இருந்து கண்காணிப்பதற்கு, தவறு நடக்கக்கூடாது என்பதை உறுதி செய்வதற்கு 100 கன அடி எடுக்கலாம் என்றால், 100 கன அடிதான் எடுக்கிறோம் என்று சொல்லிவிட்டு, ஆயிரம் கன அடியைக்கூட எடுத்து விற்றுக்கொண்டிருந்தார்களே அதைத் தடுப்பதற்கு, அப்படியெல்லாம் ஒப்பந்தக்காரர்கள் பெரும் ஊழல் செய்துகொண்டிருந்தார்களே அதற்கு முடிவு கட்டுவதற்கு, டாமின் நிறுவனம் தலைமையகத்திலிருந்தே கண்காணிப்பதற்கு க்யு.எம்.எஸ். என்கின்ற மென்பொருள் பயன்பாட்டை இப்போது நிருவாகம் செய்திருக்கிறது. இதுபோன்ற கண்காணிப்பை மேலும் வலுப்படுத்துவதன் மூலமாக கிரானைட், கிராபைட், சுண்ணாம்புக் கற்கள், சிலிகா மணல் ஆகியவற்றில் பெருமளவிற்கு நாம் வருமானத்தை ஈட்ட முடியும். அரசாங்கம் அந்தத் திசையிலே தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பொதுத் துறை நிறுவனம் காப்பாற்றப்பட்டுள்ளது என்பதோடு, இந்தப் பொதுத் துறை நிறுவனத்தின் வழியாக கையகப்படுத்தப்பட்டு மேலூரில் உள்ள கற்கள் இப்போது திறந்த வெளியிலே கிடக்கின்றன. மழையிலே, வெயிலிலே கிடக்கின்றன. அதனுடைய தரம் கெட்டுப்போக வாய்ப்பிருக்கிறது. சிறு, சிறு கோடுகள் விழவும், சிறு, சிறு புள்ளிகள் விழவும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, டாமின் நிறுவனத்தின் வழியாகவே அந்தக் கற்களை விற்பனை செய்வதன் மூலமாக 4,000, 5,000 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் நாம் ஈட்ட முடியும். அரசாங்கம் அப்படி வருமானம் ஈட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த கிரானைட்டை பொறுத்தவரை, உயர் நீதிமன்றத்தில் தடையாணை பெறப்பட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நேற்றையதினம் இங்கே பேசிய தே.மு.தி.க. உறுப்பினர்கூட அங்கே கிரானைட் கற்களை கொள்ளை அடிக்கின்றார்கள் என்று சொன்னார்கள். கொள்ளையடிப்பவர்களைப் பிடித்து சட்டப்படி நடவடிக்கை எடுப்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. கொள்ளையடிப்பவர்களுக்கு துணை போவது மைனாரிட்ரி தி.மு.க. ஆட்சி என்பதற்கு ஒரே ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். 2005-2006 ஆம் ஆண்டு மதுரையிலே மட்டும் கிரானைட் சீனியோரேஜ் பீஸ் 14 கோடி ரூபாய் வந்திருந்தது. அதற்குப் பின்னர் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி வருகின்றது. 2006-2007, 2007-2008 ஆம் ஆண்டுகளில் எட்டு கோடி ரூபாய், எட்டரை கோடி ரூபாயாகக் குறைந்து, மறுபடியும் 8 கோடி ரூபாயாக வந்து, 9 கோடி ரூபாயாக நின்று போய்விட்டது. 2011 ஆம் வருடம் 9 கோடி ரூபாய் அளவிற்கு மட்டும்தான் வந்தது. 2005-2006 ஆம் ஆண்டு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் 14 கோடி ரூபாய் வந்தது. ஆனால் அவர்கள் ஆட்சியில், 2011 ஆம் ஆண்டு, 9 கோடி ரூபாய் ஆக நின்று போய்விட்டது. எட்டு கோடி ரூபாய், எட்டேகால் கோடி ரூபாய் என்று அப்படியே நின்றுபோய்விட்டது. அப்போது 14 கோடி ரூபாய், இப்போது 8 கோடி ரூபாய் என்று சொன்னால் அந்த 6 கோடி ரூபாய் எங்கே போனது என்பதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள். அதற்குப் பின்னர், 2011-2012 ஆம் ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பின்னர், மதுரையிலே மட்டும் கிரானைட்டினுடைய சீனியோரேஜ் பீஸ் 19 கோடி ரூபாயாக உயர்ந்தது என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய சாதனை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுத் துறை நிறுவனத்தில் இலாபம் வந்தது என்று சொன்னால், அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய நிருவாகத் திறமை. மாண்புமிகு அம்மா அவர்கள் ஒவ்வொரு துறையையும் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று நடவடிக்கை எடுத்ததன்



காரணமாகத்தான் இன்றையதினம் அந்த டாமின் நிறுவனம் லாபத்திற்கு வந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், கடந்த காலங்களிலே அந்த சீனியோரேஜ் பீஸ் என்பது மேஜர் மினரலாக இருந்தாலும், மைனர் மினரலாக இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 2005-2006 ஆம் ஆண்டில், மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றபோது, ரூ.489 கோடி. அதற்குப் பிறகு 2011-2012 வரை, அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் ரூ.670 கோடிதான். 2012-2013 கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.300 கோடி அதிகமாக வந்திருக்கின்றது கிரானைட் இல்லாமல் மற்ற தாதுக்களின் வாயிலாக. ஆகவே, இந்த இரண்டு ஆண்டுகாலத்தில் வருடத்திற்கு ரூ.300 கோடி அதிக வருமானத்தை அரசுக்கு ஈட்டிக் கொடுத்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, எந்தவொரு நேர்வாக இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வெளிப்படையான நிருவாகம் செய்துகொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் வலியுறுத்திச் சொன்னேன். வரி இல்லா வருவாயைப் பெருக்குவதற்கான சிறந்த ஊற்றாக கனிம வளங்கள் இருக்கின்றன. அவற்றை டாமின் நிறுவனம் என்கிற பொதுத் துறை மூலமாகவே எந்தத் தவறுகளுக்கும் அல்லது ஒப்பந்ததாரர்கள் போன்றவர்களுடைய இலாப வேட்டைக்கும் வாய்ப்பில்லாமல் நாம் பயன்படுத்தவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் சிறப்பாகச் செய்வதாகக் கூறியுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் செயல்பாட்டையும் நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, கரும்பிற்கு ஆதார விலையைப் பற்றி சென்ற கூட்டத்தொடரிலே பேசினேன். ரூ.2,650/- என்பதை

கூடுதலாக்கவேண்டுமென்பது என்னுடைய கோரிக்கையாக இருந்தாலும், இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிற கரும்பு விலையான ரு.2,650/-ஐக்கூட பல தனியார் ஆலைகளில் கரும்பு விவசாயிகளுக்குத் தர மறுக்கிறார்கள் என்கிற புகார் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு ரூ.2,650/- என்று அறிவித்திருக்கின்றார்கள். அனைத்து ஆலைகளும் தரவேண்டுமென்று ஆணையும் போட்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த ஆலை தரவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுத்து, அந்த விவசாயிகளுக்குண்டான தொகை போய்ச்சேரவும் நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், URC-ஐக்கூட நல்ல சீசன் இருக்கின்றபோது, நல்ல விலை இருக்கின்றபோது, தனியார்கள் அங்கே போய் எப்படியாவது எடுத்துவிடுகின்றார்கள். ஆனால், இப்போது விலை கொஞ்சம் குறைவாக இருக்கிறதுடன், URC-ஐ யாரும் எடுக்காமல் விட்டுவிட்டார்கள். இதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்றவுடன், அவர்களின் அறிவுரையின்படி, அனைத்துத் தனியார் ஆலைகளில் இருக்கிற URC, அதாவது பதிவு செய்ய முடியாத கரும்பையும், விவசாயிகள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, அரசு நிலங்களாக ஏற்று, இப்போது அழித்துக்கொண்டிருக்கிறோம். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதாவது ஆலையைக் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அடுத்து, சிறு தொழில் குறித்து. இந்த அவையிலே நான் கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரிலே பேசியபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



பல வாக்குறுதிகளைத் தந்தார்கள். அரசின் சார்பிலே அந்த வாக்குறுதிகள் எல்லாம் இப்போது அரசாணையாக வந்துகொண்டிருக்கின்றன. அதற்கு என்னுடைய மகிழ்ச்சியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது சிறு தொழிலைப் பொறுத்தவரையிலே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மின் பற்றாக்குறை போன்ற தடங்கல்கள் இருந்தன. அவை இனிமேல் இல்லாமல், அந்தத் தொழில்கள் செழிப்பாக நடப்பதற்கு உற்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். வேலைவாய்ப்பிற்கு சிறு தொழில்கள் நல்லதோர் அடிப்படையாக இருக்கின்றன. சிறு தொழில்முனைவோருக்கு ஊக்கம் தருவதற்கான பல நடவடிக்கைகளை ஆட்சி எடுத்திருந்தாலும்கூட பரவலாக நம்முடைய மாநிலத்திலே வெவ்வேறு கச்சாப் பொருள்கள் கிடைப்பதையொட்டி, அங்கங்கே அதற்கான தொழில்களைத் தொடங்குவதற்குள்ள சில முனைப்பான நடவடிக்கைகளை நாம் எடுக்கவேண்டியிருக்கிறது. இப்போது பஞ்சு உற்பத்திக்கு நாம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். பஞ்சாலைகள் இருக்கின்றன. கச்சாப் பொருள் இல்லை, பருத்தி இல்லை. ஆகவே, பருத்தி உற்பத்தியைப் பெருக்குவோம் என்று சொல்கிறோம். சில இடங்களில் கச்சாப் பொருள்கள் கிடைக்கின்றன. அங்கே அதற்கேற்ற தொழிற்சாலைகள் இல்லை. இருந்தால், நாம் அதைச் சிறப்பாகப் பயன்படுத்த முடியும். இப்போது கன்னியாகுமரியில் ரப்பர் இருக்கிறது. அங்கு ரப்பர் தொழிற்சாலைகளைக் கொண்டுவரவேண்டுமென்று நாம் ஏற்கெனவே பேசியிருக்கிறோம். புளிகூட ஒரு கச்சாப் பொருள்தான். மல்லிகைப் பூ, தக்காளி போன்ற கச்சாப் பொருள்களைப் பயன்படுத்தி நாம் புதிய தொழில்களைப் பெருக்குவதற்கேற்ப சிறு தொழிற்பேட்டைகளை மேலும் உருவாக்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

மாதவ் கார்க்கில் கஸ்தூரி ரங்கன் கமிட்டியின் அடிப்படையில் மேற்குத்தொடர்ச்சி மலையில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டுப்பாடுகள் ஏற்கெனவே இங்கே வாழ்ந்துகொண்டிருக்கிற மலைவாழ் மக்களையும் பாதிக்கின்றன. அங்கே குடியேறியுள்ளவர்களையும் பாதிக்கிறது, பல ஆண்டுகளாக அங்கே தொழில் செய்தவர்களையும் பாதிக்கிறது. ஆகவே, அதுகுறித்து ஆய்வு செய்து, நீலகிரி மாவட்டத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில், நெல்லை, தேனி மாவட்டங்களில்

பாதிக்கப்படுகிற கிராமங்களுக்கு நாம் என்ன செய்யலாம் என்பது குறித்து அரசு ஆவன செய்யவேண்டும். அந்த கமிட்டி பரிசீலனை செய்தபோது அங்கிருக்கிற தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளோ அல்லது அங்கே வர்த்தகம் செய்யக்கூடியவர்களோ அந்த கமிட்டியினுடைய விசாரணைக்குள் ஈடுபடுத்தப்படவில்லை. அதுதான் அந்த கமிட்டி செயல்பாட்டில் இருந்த ஒரு மிகப் பெரிய குறைபாடு. ஆகவே, அதை நம்முடைய அரசு கவனித்துப் பார்த்து அந்தக் கிராமங்களிலே இருக்கிற மக்கள், குறிப்பாக, மலைவாழ் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

பிற்பகல் *1-50*

அடுத்து, அங்கன்வாடி, சத்துணவு ஊழியர்கள். நான் ஏற்கெனவே கோரியிருப்பதைப் போல, இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலே மிகச் சிறப்பாக மனித வள மேம்பாடுகள் இருப்பதற்கு இந்த இரண்டு முக்கியமான திட்டப் பணிகள் காரணமாக இருக்கின்றன. அதிலே ஈடுபடக்கூடியவர்களுக்கு பணி நிரந்தரம், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற பல்வேறு சலுகைகள் வழங்கப்படவேண்டும். அவர்களுக்கு பென்ஷன் மாதம் 1,000/- ரூபாய் இன்றைக்கு நாம் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். மற்ற முறைசாரா பிரிவினர்களுக்கு வழங்குவதற்கு சமமாகத்தான் அந்த பென்ஷன் தொகை இருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற குறைந்தபட்ச பென்ஷன், குறைந்தபட்ச ஓய்வூதியத் தொகை 3,050 ரூபாய். அதையாவது அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அவர்களும் 30 ஆண்டுகளாகப் பணி செய்துவிட்டு, எங்களுக்கு ஏதாவது நடக்குமா என்று ஏங்கி காத்துக்கொண்டிருக்கின்றார்கள். அதை அரசு கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மக்கள் நலப் பணியாளர்களை மீண்டும் பணியில் அமர்த்துவது குறித்து அரசு கருணையோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் இப்போது இரத்த தானம் செய்து மிகப் பெரிய சாதனையைப் புரிந்திருக்கிறார்கள். அவர்கள், தங்களுக்கு போடப்பட வேண்டிய ஒப்பந்தம் போடப்படவில்லையே என்று வேதனையில் உள்ளனர். **L.P.F., நம்முடைய தொ.மு.ச. இந்த ஒப்பந்தத்திற்கு குறுக்கே வந்து படுத்துக்கொண்டிருக்கிறது. இதை அவர்கள் இருந்தபோதும் கெடுத்தார்கள், இப்போதும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது நீதிமன்றம் குறுக்கே இருக்கிற காரணத்தினால் அரசாங்கத்தால் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்பதை நானும் உணர்கிறேன். ஆனால், ஓர் இடைக்கால நிவாரணம் கொடுப்பதன் மூலமாக, அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்வில் நாம் விளக்கேற்றலாம். நீதிமன்ற வழக்குகள் முடிந்த பிறகு, நாம் ஒப்பந்தத்தைப் போடலாம் என நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



போக்குவரத்துக் கழகத்திலே இருக்கிற அனைத்து சங்கங்களும் விடுத்த அகில இந்திய வேலைநிறுத்தத்தினுடைய அறைகூவலின்படி, ஓர் அடையாள வேலைநிறுத்தம் இங்கே நடந்தது. இரண்டு, மூன்று வேலைநிறுத்தங்கள் நடந்தன. அவை, நிறுவனத்தை எதிர்த்து நடந்த வேலை நிறுத்தங்கள் அல்ல. Labour Department கூட, 'No work, no wage', 'பணி இல்லை, சம்பளம் இல்லை' என்ற அடிப்படையில் அதைத் தீர்க்கவேண்டுமென்று தீர்ப்பு கொடுத்திருக்கிறது. இருந்தாலும், போக்குவரத்துக் கழகத்திலே இருக்கிற அதிகாரிகள், அவர்களுடைய பதவி உயர்வைப் பறிக்கிறார்கள், ஆய்வுப் பலனைப் பறிக்கிறார்கள். அவர்களில் சிலர் ஓய்வு பெறுகிறபோது, ஓய்வுக் கால பலனையும் தர மறுக்கிறார்கள். இது மிகவும் கடுமையானது, சட்டத்திற்கு உட்படாதது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நம்முடைய அரசும் இதிலே தலையிட்டு, அந்தப் பிரச்சினைக்கு நல்ல தீர்வை செய்து கொடுக்க வேண்டும். அதிகாரிகள் தவறிழைத்திருந்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். ஏனென்றால், இதிலே நிறுவனத்தின்மீதும், அரசின்மீதும் மிக கடுமையான கோபம் வருவதற்கு அவர்கள் காரணமாகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் துறையில் தினசரி கூலியாக 63 ரூபாய்தான் அங்கிருக்கிற unskilled labourers, ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இதே பணியை நகராட்சியில், மாநகராட்சியில் செய்யக்கூடியவர்களுக்கு 263 ரூபாய் வழங்க வேண்டுமென்று ஆணையிருக்கிறது. சென்னையிலே, கலெக்டர் உத்தரவு போட்டு அது வழங்கப்படுகிறது. ஆகவே,

இந்த ஊதிய வேறுபாட்டைப் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சென்னைக் குடிநீர் வழங்கல் நிறுவன ஊழியர்களுக்கும் ரூ.263/- தினக்கூலி வழங்க வேண்டுகிறேன்.

அதேபோல், போக்குவரத்துக் கழகங்களிலே தினக்கூலி, 500 ரூபாய்க்குமேல் தர வேண்டும் என்பதுதான் ஒப்பந்தம். ஆனால், 275 ரூபாய்க்குக்கீழாகத்தான் தரப்படுகிறது. இந்த ஊதிய வேறுபாட்டையும் போக்க வேண்டுமென்றும், ஒப்பந்தப்படி தினக்கூலி வழங்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூவம். அதற்காக நாம் 3,000 கோடி ரூபாய்க்குமேல் நிதி ஒதுக்கியிருக்கிறோம். கூவத்திலே படகு சென்றதையெல்லாம் நான் பார்த்தவன் என்கிற முறையிலே, "கூவம் மணக்கும்" என்கிற அறிவிப்பு வந்தபோது மிகுந்த மகிழ்ச்சி அடைந்தவர்களிலே நானும் ஒருவன். 1973 ஆம் ஆண்டு அந்த முழக்கம் வீசப்பட்டது, கூவம் மணக்கும் என்று முழங்கப்பட்டது. எப்போது மணக்கும், எப்போது மணக்கும் என்று இன்று வரை நாங்கள் காத்துக்கொண்டுதான் இருக்கிறோம். இன்னும் அது மணக்கவுமில்லை, ஒன்றும் நடக்கவுமில்லை. அது மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், இப்போது 500 கோடி ரூபாய் அதற்காக பணத்தையும் ஒதுக்கி, திட்டமாக மட்டும் இல்லாமல், பணத்தையும் ஒதுக்கி, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருப்பது உண்மையிலேயே சென்னை நகர மக்களுக்கு மிகப் பெரிய மகிழ்வான செய்தி. கூவம் ஆற்றோரத்திலே குடியிருக்கக்கூடிய மக்கள், சென்னை நகரத்தில் நதிக் கரையோரத்தில் இருக்கிற மக்கள், அங்கிருந்து வேறு இடத்திற்கு அனுப்பப்படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு பணமும் 2,567 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு, மிக அருகிலேயே, அவர்களுடைய வேலைக்கு பாதிப்பில்லாமல், அவர்கள் நெடுந்தொலைவிலிருந்து நகரத்திற்கு வந்து பணியாற்றுவதற்குத் தேவையில்லாமல், குடியிருப்பு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கூவம் நதியிலே சட்டவிரோதமாக கழிவுநீர் கலக்கச் செய்யப்படுகிறது. அதை நம்முடைய மாநகராட்சி அதிகாரிகளை ஏவிவிட்டு, உடனடியாக, முதலிலே அதைத் தடுக்க வேண்டும். யாரால் கழிவுநீர் இணைப்பை எடுத்துக்கொள்ள முடியவில்லையோ, அவர்களுக்கு, ஏழைகளுக்கு, இலவச கழிவுநீர் இணைப்போ, 100



ரூபாய் இணைப்போ எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி, கழிவுகள் கலக்காமல் தடுத்தால், கூவம் நதிப் பிரச்சினையிலே பாதி தீர்ந்துவிடும், மீதியை நாம் தீர்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதியாண்டிலே அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு, தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

பிற்பகல் 1-55

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் 2 கால்களும் இல்லாதவர்களுக்கு ஆண்டுக்கு ஆயிரம் மூன்று சக்கர ஸ்கூட்டர்கள் நாம் கொடுக்கிறோம். இதிலே இரண்டு கால் இல்லாதவர்கள் என்று பாராமல் போலியோ போன்ற மற்ற தாக்குதலுக்கு ஆளாகி, ஒரு கால் முழுவதுமாகப் பயன்படுத்த முடியாத நிலையும், இன்னொரு கால் வளைந்து போனதாலோ, வேறு கோளாறாலோ கிட்டத்தட்ட பயன்படுத்த முடியாத நிலையும் இருக்கிறது. ஆனால், ஒரு கால் இருக்கிறது என்று நாம் சொல்லலாம். அப்படிப்பட்டவர்களையும் இந்தத் திட்டத்திற்குள்ளே கொண்டு வரவேண்டிய தேவை இருக்கிறது. நானே நேற்றைய முன்தினம் ஒரு வாலிபரைப் பார்த்தேன்.

மூன்று சக்கர வாகனங்கள், ஆண்டுக்கு இரண்டு மட்டும்தான் கொடுப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி தரப்படுகிறது. அப்படி ஒரு நிபந்தனை இருக்கிறது. நிறைய விண்ணப்பங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வருகின்றன. அவற்றை எங்களால் நிறைவேற்ற முடியவில்லை. யாரைத் தேர்ந்தெடுப்பது, யாரைத் தேர்ந்தெடுக்காமல் இருப்பது என்கிற பிரச்சினையும் வருகிறது. ஆகவே, மூன்று சக்கர ஸ்கூட்டர் ஆண்டுக்கு 2 என்பதை 4 ஆக உயர்த்த வேண்டும். (குறுக்கீடு) நான் 2 தான் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) இரண்டு வருடத்திற்கு

நான் 4 தான் கொடுத்திருக்கிறேன். வருடத்திற்கு 4 இல்லை. வருடத்திற்கு நான்கு என்றால் மிகவும் சந்தோஷம். ஆனால், நான் இரண்டுதான் கொடுத்திருக்கிறேன். இரண்டுதான் எனக்கு அனுமதிக்கிறார்கள். (குறுக்கீடு) ஆகவே, மாற்றுத் திறனாளிகளுக்கான மூன்று சக்கர ஸ்கூட்டர் குறைந்தது வருடத்திற்கு ஐந்தாக உயர்த்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. வருடத்திற்கு ஐந்தாவது கொடுப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களை அனுமதிக்க வேண்டும். இல்லாவிட்டால் தொகுதிக்குள்ளேயே எங்களுக்குப் பிரச்சினையாகிவிடுகிறது. 4 அல்ல, இரண்டுதான் எனக்கு அனுமதிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, அங்கே உறுப்பினர் நான்கு என்கிறாரே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து தரப்படாமல் இருந்த இரண்டு பெட்ரோல் ஸ்கூட்டரையும் இந்த ஆண்டோடு சேர்த்து 4 ஆக இந்த ஆண்டு விநியோகம் செய்யப்பட்டது. இரண்டு ஸ்கூட்டர்கள் மேலும் கொடுப்பதற்கு மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்ததற்கு இணங்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதுசம்பந்தமாக முடிவு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிகவும் நன்றி.

நெசவாளர்களுக்கு பசுமை வீடு என்பது ஒரு மிகச் சிறந்த திட்டம். இந்த ஆண்டு 10 ஆயிரம் வீடுகளுக்கான ஏற்பாட்டை நாம் செய்திருக்கிறோம். இதிலே கிராமப்புறத்திலே இருக்கிற நெசவாளர்களுக்குத்தான் இந்தப் பலன் கிடைக்கிறது என்கிற ஒரு நிலை இருக்கிறது. மதுரை, செல்லூரை எடுத்துக்கொண்டால், அது நடு நகரத்திலே இருக்கிற ஒன்று, ஆனால் கைத்தறியாளர்கள்தான் அவர்கள். அப்படி பல நகரங்களிலேயும் கைத்தறியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த பசுமை வீடு திட்டத்தை எப்படி விஸ்தரிப்பது என்பது குறித்து அரசு கனிவோடு கவனிக்க வேண்டும். அப்படி கவனித்தால்தான் உண்மையான நெசவாளர்களுக்கு அது சென்று சேரும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, கைத்தறி பெருமளவிற்குக் குறைந்து, விசைத்தறிகளும் பெருகிவிட்டன. விசைத்தறி தொழிலிலே மிக ஏழ்மையான நிலையிலே இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் பசுமை வீடு திட்டத்தை அமல்படுத்துவதற்கான ஏற்பாட்டையும் அரசு கருதிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



ஆசிரியர் தகுதித் தேர்வைப் பொறுத்தவரையிலே, இங்கே விரிவாக அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். தேர்வை 2012-ல்தான் நாம் தொடங்கினோம். 5 மதிப்பெண்கள் குறைவு என்பதை 2012-லிருந்து அமல்படுத்தினால், அதில் இருக்கிற அந்தக் குறை முழுமையாகத் தீர்ந்துவிடும் என்பது என்னுடைய வேண்டுகோள். அதை அரசு கருதிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் மதிப்பெண்களைக் குறைக்க வேண்டும் என்று அடிக்கடி கேட்டு வந்தார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 5 மதிப்பெண்களைக் குறைத்தார்கள். அவர்கள் யாரும் சொல்லாத ஒரு கோரிக்கையாக, ஏற்கெனவே எழுதியிருந்தவர்களுக்கும் இது பொருந்தும் என்று இந்த வாய்ப்பினைக் கொடுத்தார்கள். அதனால்தான் மீண்டும் அந்தக் கேள்வியைக் கேட்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, நீங்கள் கேட்காமலேயே ஓராண்டுக்கு முன்பே எழுதியவர்களுக்கும் அந்த வாய்ப்பினை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையே இரண்டு ஆண்டுகள் பிரச்சினைதான். ஒரு ஆண்டுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீர்த்துவிட்டார்கள். அதற்கு முன்பு இருந்தவர்களுக்கும் தீர்த்துவிட்டால், பிரச்சினை தீர்ந்துவிடும். ஆகவே, 2012-க்கும் அமல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். அங்கிருந்து ஏராளமான கோரிக்கைகள் வருகின்றன. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தக் கோரிக்கைகள் வந்திருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே, அந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாட்டு வண்டி மணல் பிரச்சினை பற்றி ஏற்கெனவே இங்கே பேசப்பட்டது. மாட்டு வண்டிக்கு குவாரி தனியாக ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது அப்படி ஒதுக்கப்பட்ட அந்த குவாரிகள் செயல்படாமல் இருக்கின்றன என்பது ஒன்று. கடலூர் மாவட்டத்திலே ஒதுக்கி நீங்கள் மணல் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்ன பிறகு, அந்த இடங்கள் புதுச்சேரி மாநில எல்லைக்குப் பக்கத்தில் இருக்கிற காரணத்தினால் அதைப் பயன்படுத்த முடியாது என்று சொல்லிவிட்டார்கள். மாநிலம் முழுவதும் பார்த்தால் பல்லாயிரக்கணக்கான மாட்டு வண்டிக் குடும்பங்கள், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த குவாரிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, ஒதுக்கி, இங்கே எடுத்துக்கொள்ளலாம், இவ்வளவு எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்து, அவர்களுடைய அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. அ. சவுந்தரராசன்:** காதியில் வேலை பார்க்கும் தொழிலாளர்களின் கை முறை காகித அலகு உற்பத்தியாளர்களுடைய ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுவிட்டது. அது இன்னும் அனுமதிக்கப்படாமல் இருக்கின்ற காரணத்தினால்,



2014 பிப்ரவரி 19] [திரு. அ. சவுந்தரராசன்]

அதன் பலனை அவர்கள் அனுபவிக்க முடியாமல் இருக்கின்றார்கள். ஆகவே, அரசு அதிலே விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து ஓய்வூதியதாரர்கள் மற்றும் கூட்டுறவுத் தொழிலாளர்கள் அனைவருக்கும் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்தவேண்டும் என்று நாங்கள் கோரிக்கை வைத்திருக்கிறோம். இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால், பிரச்சினை என்னவென்னறால், 150 ரூபாய் என்று ஒரு தொகை அரசு ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகிறது. அந்தத் தொகையைப் பெற்றுக்கொண்டு, அரசு ஊழியர்கள் போல, நீங்கள் அவர்களுக்கும் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்தலாம். இதற்கு கமிட்டி போடவேண்டிய தேவை இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. டாஸ்மாக் ஊழியர்களுக்கும் அந்தப் பிரச்சினை இருக்கின்றது. அதனால், 150 ரூபாய் அல்லது வேறு ஒரு தொகையைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கும் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்தலாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். On par with Government employees அவ்வளவுதான். போக்குவரத்து ஓய்வூதியர்களுக்கும் அமல்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். டாஸ்மாக்கில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள், ரூபாய் 72 ஆயிரத்திற்குக்கீழ் வருமானம் உள்ளவர்களுக்கு வழங்குகிற காப்பீட்டுத் திட்டத்தின்கீழ்தான் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால், அதில் பணிபுரியும் சூப்பர்வைசர்களுக்கு ரூபாய் 6 ஆயிரம் சம்பளம், மற்றவர்களுக்கு அதற்கும் குறைவாக இருக்கிறது. இதிலிருந்தே அவர்களுக்கு சம்பளம் குறைவு என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். அவர்கள் நிறுவனத்தின்கீழ் பணியாற்றுகிறார்கள் என்பதால், அவர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தை பொருத்த வேண்டும். அவர்களுக்கு முதல்வர் காப்பீட்டுத் திட்டம் பொருந்தும் என்று மட்டும் சொல்லி விட்டுவிடுவது சரியல்ல. அவர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தை பொருத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது அவர்களுக்கு பெருமளவிற்கு பயனளிக்கும். அரசாங்கத்தினுடைய நோக்கமும், இ.எஸ்.ஐ.-யின் நோக்கமும் அதுதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நகரக் கூட்டுறவு வங்கிகளிலே ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு ஏற்கப்படாமல் நிலுவையில் உள்ளது. அதையும்

அவர்களுக்கு விரைவாகக் கொடுக்க வேண்டும். மற்ற கூட்டுறவு ஊழியர்களுக்கு ஒப்பந்தம் அமல்படுத்தப்பட்டுவிட்ட சூழ்நிலையில் அவர்கள் மிகுந்த வருத்தத்தில் இருக்கிறார்கள். கூட்டுறவு நிறுவன ஊழியர்கள் 40 ஆயிரம் பேருக்கு உரிய ஊதியம் கிடைக்கிறது. தரச் சம்பளம், அடிப்படை சம்பளம் உள்ளிட்டவை எல்லாம் கிடைக்கிறது. ஆனால், பணி வரன்முறைக்கு ஏற்பாடு மட்டுமில்லை. இதனால், கூடுதல் செலவு ஆகாது. பணி வரன்முறை செய்துவிட்டால் அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், முறையாகத் தேர்ந்தெடுக்கப்படாதவர்களுக்கு பணி வரன்முறை செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டிருப்பதன் அடிப்படையில்தான் அதை அமல்படுத்த முடியவில்லையே தவிர வேறொன்றுமில்லை. இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கருணையில் நிரந்தரப் பணியாளர்கள் என்ன சம்பளம் வாங்குகிறார்களோ, இவர்களுக்கும் அதேபோன்று எல்லாவிதமான உதவிகளும், சலுகைகளும் வழங்கப்படுகின்றன. நீதிமன்றத்தின் உத்தரவை மீறமுடியாத சூழ்நிலையில், இதை நடைமுறைப்படுத்துவதில் மிகப் பெரிய சிக்கல் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களைப் போலவே குடும்ப நல நிதி நகராட்சி ஊழியர்களுக்கும் உள்ளது. ஆனால், பேரூராட்சி ஊழியர்களுக்கு மட்டும் இல்லை. இந்த ஒரு குறையை நிவர்த்தி செய்ய வேண்டும். அவர்களுக்கும் ரூபாய் 150/-ஐப் பிடித்துக்கொண்டு மற்ற உள்ளாட்சி ஊழியர்களுக்கு இருப்பதுபோல் குடும்ப நல நிதியை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இரட்டை மடி என்கிற மீன் வலை பிரச்சினை. ஏற்கெனவே இதுகுறித்து நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அது இரண்டு நாடுகளுக்கிடையேயான பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசு தெளிவாக அதைத் தடை



செய்திருக்கிறது. நம்புவளை என்கிற ஓர் ஊரிலே பெரிய ஆர்ப்பாட்டம், இரட்டை மடி தடை செய்யப்பட்டதை, பயன்படுத்துவோர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் அந்த ஆர்ப்பாட்டத்தினுடைய நோக்கம். ஆகவே, அரசு நம்முடைய அதிகாரிகள் மூலமாக உறுதியான நடவடிக்கை எடுத்து அதைத் தடுக்க வேண்டும். அது மீன் வளத்தையும் பாதுகாக்கும், சிறு படகுக்காரர்களையும் பாதுகாக்கும். இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சிறு படகுக்காரர்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள்.

அமைப்புசாரா தொழிலாளர்களின் பிரச்சினையிலே, அவர்கள் பலமுறை வந்து போக வேண்டுமென்கிற அந்தக் கட்டாயத்தை, கட்டாயம் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். திரும்பத் திரும்ப அரசு தரப்பில் சொல்லப்படுகிறது. ஆனால், அது அமலுக்கு வரவில்லை. இப்போதும், அந்தத் தொழிலாளர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள்.

புதிய ரேசன் அட்டைகள், சமீபத்தில் வழங்கப்பட்டவர்களுக்கு உள்தாள் ஒட்டப்படாமல் 6 மாதகாலமாக தாமதமாகிக்கொண்டிருக்கிறது. அதையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய ரேசன் கார்டுகளில் உள்தாள் ஒட்டப்படவில்லை என்று சொன்னார்கள். அதற்கு உள்தாள் தேவையில்லை. அதற்கு முன்னால் வழங்கப்பட்ட கார்டுகளுக்குத்தான் உள்தாள் ஒட்ட வேண்டுமே தவிர, புதிய ரேசன் கார்டுகளுக்கு உள்தாள் தேவையில்லை.

பிற்பகல் 2-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது இப்போது குடும்ப அட்டை கொடுத்தவர்களுக்குத் தேவையில்லை. உள்தாள் ஒட்டப்பட வேண்டும் என்று ஒரு பட்டியல் வந்திருக்கின்றது அல்லவா?

அந்தப் பட்டியலில் உள்ளவர்களுக்கு நீட்டிப்பு செய்வதற்கு உள்தாள் ஒட்ட வேண்டிய பிரச்சினை என்னுடைய தொகுதியிலும் இருக்கின்றது, உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் தொகுதியிலும் இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு புதியதாக குடும்ப அட்டை கொடுப்பதற்குப் பதிலாக உள்தாள் ஒட்டப்பட்டது. இந்த ஆண்டும் அதிலே ஒட்டப்பட்டிருக்கின்ற உள்தாளையே பயன்படுத்திக்கொள்ளலாம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உத்தரவிட்டிருக்கின்றது. எங்காவது அந்தமாதிரியான பிரச்சினை இருந்தால், உடனடியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. அடுத்து சிங்காரவேலர் அவர்களுக்கு அவர் வாழ்ந்த கடற்கரைச் சாலையில் ஒரு நினைவிடத்தை நிறுவ வேண்டும். அவருடைய மனைவியைத் தள்ளிவிட்டு தன்னுடைய மனைவி பெயரில் லேடி வெலிங்டன் கல்லூரி என்கிற ஒரு கல்லூரியை சிங்காரவேலருக்குச் சொந்தமான இடத்தில் நிறுவியவர்தான் அந்த ஆங்கில அதிகாரி. அதுதான் இப்போது லேடி வெலிங்டன் காலேஜாக இருக்கின்றது. அந்தப் பெயரை மாற்றுவதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அங்கே இடமும் இருக்கின்றது. ஆகவே, அந்த மிகப் பெரிய மனிதருக்கு அங்கே நினைவிடத்தைக் கட்டுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உளுந்தூர்பேட்டை வட்டத்தில், செங்கனான்கொள்ளை கிராமத்தில் செங்கல் சூளை வியாபாரிகள் தோண்டிய பள்ளத்தில் மீனா (13), ஐயப்பன் (8) மற்றும் அம்பிகா (14) ஆகிய மூன்று குழந்தைகள் விழுந்து உயிர் இழந்துள்ளனர். ஆகவே, அவர்களுக்கு



மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதியுதவி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் அறிவிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் வாங்கிய கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். குறிப்பாக, பண்ணைசாராக் கடன் வாங்கியவர்கள் கடந்த 10, 15 ஆண்டு காலமாக வட்டி செலுத்த முடியாமல் மிகுந்த சிரமத்தில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு நோட்டீசுக்குமேல் நோட்டீஸ் சென்றுகொண்டிருக்கின்றது. வட்டி, அபராத வட்டி போன்றவற்றை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அதை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கருத்தின் அடிப்படையில் இப்படிக் கூறுகின்றார் என்று எனக்குத் தெரியவில்லை. பண்ணைசாராக் கடன் என்பது விவசாயம் செய்வதற்காக வழங்கப்படுவது அல்ல. விவசாயக் கருவியை, தொழில் செய்வதற்காக வாங்குகிறார்கள். இது ஒரு முதலீடுதான். இதை முதலீடாக வைத்து, அதிலிருந்து வருகின்ற லாபத்தில் வட்டியை மாதாமாதம் கட்ட வேண்டும். கூட்டுறவு வங்கிகள் என்றால் ஒரு தவறான அபிப்பிராயம் மக்கள் மனதில் இருக்கின்றது. இவர்கள் வாங்கிய கடனை தள்ளுபடி செய்துவிடுவார்கள் என்ற மனப்பான்மை வந்துவிடுகிறது. 31-3-2011-ல் இதனுடைய நிதி 26 ஆயிரம் கோடி ரூபாய்தான். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், ஏறத்தாழ 100 ஆண்டுகள் பழமையான இந்தக் கூட்டுறவுத் துறை வரலாற்றிலே இன்றைக்கு 46 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கடந்த டிசம்பர் மாதம் வரை வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியின்மீதுள்ள நம்பிக்கையின் அடிப்படையில்தான் மக்கள் கூட்டுறவு வங்கிகளில் டெபாசிட் செய்ய முன்வந்துள்ளார்கள். அந்த நம்பிக்கைக்கு உரியதாக கூட்டுறவு வங்கிகள் இயங்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவு வங்கியானது மக்களுக்காக உருவாக்கப்பட்டது. மத்திய, மாநில அரசாங்கங்கள் நிதி கொடுத்து

ஆரம்பிக்கப்பட்டது அல்ல கூட்டுறவு வங்கிகள். மக்கள் போடுகின்ற டெபாசிட்களுக்கு முதலில் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அதன்பிறகு அவர்களுக்கு டிவிடெண்ட் கொடுக்க வேண்டும். இதற்குமேல் பல்லாயிரம் தொழிலாளர்கள் அதில் பணியாற்றுகின்றார்கள். அவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும். அரசாங்கம் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் கொடுக்கின்றது. இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடன் கொடுப்பது தமிழகத்தைத் தவிர வேறு எங்கும் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா ஒருவர்தான் இந்தியாவிலேயே முதன்முதலாக பயிர்க் கடனை வழங்கியுள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதிலும் இந்த மூன்று ஆண்டுகளில் பார்த்தால், 3 ஆயிரம் கோடி ரூபாய் பயிர்க் கடன் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். 2011-2012-ல் மூன்றாயிரம் கோடி ரூபாய் இலக்கு என்பதை உயர்த்தி, 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வரை பயிர்க் கடன் வழங்கப்பட்டது. 2012-2013-ல் பயிர்க் கடனை 4 ஆயிரம் கோடி ரூபாய் என்று அறிவித்தார்கள். ஆனால், வழங்கப்பட்ட தொகை 4 ஆயிரத்து 69 கோடி ரூபாய். சென்ற ஆண்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள 4 ஆயிரத்து 500 கோடி ரூபாயில், 15-2-2014 வரை 4 ஆயிரத்து 80 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு மாத காலம் இருக்கின்றது. இதற்கான வட்டியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசே செலுத்திவிடுகிறது. வறட்சி ஏற்படும் நேரங்களில் அரசு உதவி செய்கிறது. தமிழகத்தில்தான் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டு அதன்மூலமாகவும் அவர்களுக்கு இலாபம் கிடைக்கிறது. ஆக, தமிழக விவசாயிகள் எந்தக் காலத்திலும், எந்தத் தருணத்திலும் பாதிக்கப்படக் கூடாது, தமிழக விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்று தாயுள்ளத்தோடு இருக்கிற ஒரே முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ளவேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 2-10

பண்ணைசாராக் கடனை இரத்து செய்ய வேண்டுமென்று சொன்ன மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது குறித்த விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் சரியாக கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதுமாதிரி செய்தால், எதிர்காலத்தில் கூட்டுறவு வங்கிகளில் டெபாசிட் செய்வதற்கு, கூட்டுறவு வங்கிகள்மீது மக்களுக்கு நம்பிக்கை வராது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்களுடைய சிவகங்கை தொகுதியில் உள்ள கூட்டுறவு வங்கியை எடுத்துக்கொண்டால், அங்கு இருக்கும் டெபாசிட் தொகை ரூ.100 கோடி. ஆனால், அந்தக் கூட்டுறவு வங்கி, பயனாளிகளுக்கு வழங்கவேண்டிய கடன் தொகை ரூ.150 கோடி ஆகும். அந்த வங்கியினுடைய நிதிநிலைமை எப்படி இருக்கும்? தற்போது ரிசர்வ் வங்கி ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறது. கூட்டுறவு வங்கிகள் எவ்வாறு இயங்கவேண்டும்? எந்தெந்த slab-ல் கடன்களைக் கொடுக்கவேண்டும்? அதில் டெபாசிட் எவ்வளவு இருக்கவேண்டும்? கடன் வழங்கும் போதும் எவ்வளவு தொகை இருக்கவேண்டும் போன்ற பல்வேறு அறிவுரைகளைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் இன்றைக்கு கூட்டுறவு வங்கிகளைப் புனரமைத்திருக்கிறது. அதனால், கூட்டுறவு வங்கிகள் இன்று சிறப்பாக இயங்குகின்றன.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலான ஒரு தகவல் என்னவென்றால், ஒரு விவசாயி கையில் இன்று ஆயிரக்கணக்கான ரூபாய் புழங்குகிற அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் முதன் முதலாக கூட்டுறவு இயக்கத்தை, மக்கள் இயக்கமாக மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு முதன் முதலாக கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தி, ஆணையம் என்ற ஓர் அமைப்பை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்தியாவிலேயே முதல்முறையாக கூட்டுறவு ஆணையத்தை அமைத்து, தேர்தல் நடத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பாராட்ட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் கேட்காமலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிவகங்கையைப் பற்றிப் பேசிவிட்டார் இல்லையா? அதற்குப் பிறகு என்ன கேட்கப் போகிறீர்கள்?

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணைசாராக் கடன் பற்றி மாண்புமிகு கூட்டுறவுத்

துறை அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கம் அளித்திருக்கிறார்கள். ஆனால், பண்ணைசாராக் கடன் என்பது நிலவள வங்கியின் மூலமாக வழங்கப்படக்கூடிய கடன் ஆகும். அதில் இரண்டு விதமான கடன்கள் வழங்குகிறார்கள். ஒன்று, இயந்திரங்களை வாங்கி பயன்படுத்துபவர்களுக்கான கடன், இன்னொன்று பண்ணைசாராக் கடன் வாங்கி, தோட்டங்களை அல்லது விவசாய நிலங்களை அபிவிருத்தி செய்வதற்கான முழு விவசாயப் பணிகளுக்காகப் பயன்படுத்துகிறார்கள்.

அந்த அடிப்படையில் கடந்த ஆட்சியில் விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், அந்தத் தள்ளுபடியை யாருக்குச் செய்யவேண்டுமோ அவர்களுக்குச் செய்யவில்லை. அதாவது பண்ணைசாராக் கடனைப் பெற்று, விவசாய அபிவிருத்தி செய்தவர்களுக்கு கடன் தள்ளுபடி செய்திருக்கவேண்டும். அதை விடுத்து, இயந்திரங்களை வாங்கி இலாபம் அடைந்தவர்களுக்கு கடனைத் தள்ளுபடி செய்து, விவசாய அபிவிருத்தி செய்தவர்களுக்கான கடனைத் தள்ளுபடி செய்யாமல் விட்டுவிட்டார்கள். எனவே, கடந்த ஆட்சியில் நடந்த குறைகளை நிவர்த்தி செய்து, அபிவிருத்தி செய்து, உண்மையாக விவசாயத்திற்குப் பயன்படுத்திய விவசாயிகளுக்கு கடனைத் தள்ளுபடி செய்யவேண்டும். சுமார் 2,000 நபர்கள்தான் இருக்கிறார்கள். அதுவும் மேற்கு மாவட்டங்களில்தான் இருக்கிறார்கள். விவசாயக் கடன் தள்ளுபடியில் கடந்த ஆட்சியில் செய்த தவறை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று இந்த ஆட்சியிலே கேட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே, அதைச் செய்து கொடுப்பது விவசாயிகளுக்கு ஏற்புடையதாக இருக்கும். எனவே, அதனை மறுபரிசீலனை செய்து, அந்தக் கடனை தள்ளுபடி செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வட்டியும், முதலுமாக எங்களுக்கு நீண்ட பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும், பண்ணைசாராக் கடனை விவசாயிகள்தான் வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் ஒரு தறி போடவோ வேறு ஓர் உபகரணம் வாங்கவோ கடன் வாங்கினார்கள். விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலும் நன்றாக இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம் தர ஆசைப்படுகிறேன். விளக்கம் அதிகமாகக் கொடுக்கிறேன் என்று நினைக்கவேண்டாம். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், விவசாயிகளுக்கு, கூட்டுறவு வங்கிகளிலிருந்து வாங்குகிற கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும், தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொன்னால், நாளைக்கு மக்கள் மத்தியில் கூட்டுறவு வங்கிகள்மீது எப்படி நம்பிக்கை வரும்? அவர்கள் asset வாங்குவதற்குத்தான் கடன் கொடுக்கப்படுகிறது. பண்ணைசாராக் கடன் என்றாலே விவசாயம் பாதிக்கிறது என்று பொருள் அல்ல. ஒரு விவசாயி மோட்டார் வாங்குகிறார். அந்த மோட்டார் கெட்டுப் போனால், அதனைப் பழுதுபார்க்கலாம். அதுமாதிரி, ஒரு விவசாயி டிராக்டர் வாங்குகிறார். இவையெல்லாம் ஒரு asset தான். சிறு தொழில் செய்கிறவர் கடன் வாங்குகிறார். சிறு தொழில் ஒன்றும் பாதிக்கப் போவதில்லை. தொழில் இயங்காமல் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால், கடனைக் கட்டுவதாக இருந்தால்தான், மக்கள் மத்தியில் கூட்டுறவு வங்கிகள்மீது ஒரு நம்பிக்கை வரும். இன்னென்ன தொழிலுக்குக் கடன் வாங்கினால், அந்தக் கடன் திரும்பச் செலுத்தப்படும். இன்னென்ன தொழிலுக்கு கடன் வாங்கினால், அதனை அரசாங்கம் பார்த்துக்கொள்ளும் என்ற நிலை ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து இதுகுறித்து வற்புறுத்த வேண்டாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

*பிற்பகல் 2-15*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக எங்களுடைய வட சென்னைப் பகுதி முழுவதற்கும் டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரி என்கிற ஒரேயொரு கல்லூரிதான் இருபாலரும் பயிலுகிற கல்லூரியாக இருக்கின்றது. இப்போது 2,500 மாணவ, மாணவிகள் பயில்கின்றனர். 14 பாடத் திட்டங்கள் இருக்கின்றன. அநேகமாக, சென்னையிலே அந்தக் கல்லூரி மட்டும்தான் கிரேட்-I ஆகாத கல்லூரியாக இருக்க

முடியும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அரசு இதைக் கருதிப் பார்த்து, வட சென்னை, வியாசர்பாடியில் இருக்கின்ற டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரியை கிரேடு-I கல்லூரியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் பேசுகின்றபோது, போக்குவரத்து ஊழியர்களுடைய ஊதிய உயர்வு குறித்த பேச்சுவார்த்தை பற்றிச் சொன்னார்கள். உலக அரசியல் வரலாற்றில் எந்தவொரு தலைவருக்கும் செய்யாத வகையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள் புதிய கின்னஸ் சாதனையைப் படைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) *53,129* பேர் ஒரே நாளில் இரத்த தானம் வழங்கி, கின்னஸ் சாதனையைப் படைத்து, அவர்கள் ஒரு புதிய வரலாற்றை உருவாக்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது அவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அம்மாவினுடைய நலத் திட்டங்களினால், தொழிலாளர்கள் உட்பட அனைவரும் நேசிக்கும் தலைமையாக, காக்கின்ற தலைமையாக, காக்கும் கடவுளாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகிறார்கள். அந்த நம்பிக்கை உணர்வோடு இரத்த தானத்தை வழங்கியிருக்கின்றார்கள். இத்தகைய கின்னஸ் சாதனை படைக்கின்ற அளவுக்கு, இரத்த தானம் வழங்கிய பெருமையை உலக அரசியல் வரலாற்றில் எந்தத் தலைவருக்கும் இல்லாத அளவுக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உருவாக்கித் தந்திருக்கின்றார்கள் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தில் எந்தப் போக்குவரத்துக் கழகத்திலுமே, போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுடைய முழு உடல் பரிசோதனை செய்கின்ற திட்டம் இல்லை. தொழிலாளர்களின்மேல் அக்கறை கொண்டிருக்கின்ற தாய்,



புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசுப் போக்குவரத்துக் கழகத்திலே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை திட்டத்தின்மூலம் அவர்களுடைய உடலை முழுமையாக பரிசோதிப்பதற்கு உண்டான வாய்ப்பையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அவர்களுடைய ஓய்வறைகளை மேம்படுத்தியிருக்கிறார்கள். இப்படி பல்வேறு நிலைகளிலே, தொழிலாளர்கள்மீது அக்கறை கொண்டிருக்கின்ற தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொழிலாளர்கள்மீது நம்பிக்கை வைத்திருக்கின்ற, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற தாய், புரட்சித் தலைவி அம்மா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற முறை பேச்சுவார்த்தை நடைபெற்றபோது, தி.மு.க.-வைச் சேர்ந்த L.P.F. தொழிற்சங்கத்தில் *73,450* பேர் உறுப்பினர்களாக இருந்தார்கள். ஆனால், *31-12-2013* அன்றைய நிலவரப்படி, பார்க்கின்றபோது, *18* ஆயிரம் பேர் மட்டுமே L.P.F. தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். *18* ஆயிரம் பேரை உறுப்பினர்களாக வைத்துக்கொண்டு, மிகப் பெரிய பேச்சுவார்த்தைக்கு இன்று முழுமையாகத் தடையாக இருப்பவர்கள் தி.மு.க.-வைச் சேர்ந்த L.P.F. தொழிற்சங்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய நல்லாட்சியில், பொற்கால ஆட்சியில், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நலத் திட்டங்கள் எப்போதுமே தொழிலாளர்கள்மீது அக்கறை கொண்டதாக இருக்கும். தொழிலாளர்களின் தாயாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்கால ஆட்சியை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். நீதிமன்றத்திலே இதுகுறித்து வழக்கு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர்களின் நலன் காக்கின்ற அரசு, தொழிலாளர்களின்மீது அக்கறை கொண்டிருக்கின்ற தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வியாசர்பாடியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியை, இருபாலர் கல்லூரியை, கிரேடு-I ஆக தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று ஒரு வேண்டுகோளை இங்கு வைத்தார்கள். பொதுவாக, ஒரு கல்லூரியைத் தரம் உயர்த்த வேண்டுமென்று சொன்னால், குறைந்தது 5 பட்ட மேற்படிப்புக்குமேல் இருக்க வேண்டும். 2,500 மாணவர்களுக்குமேல் இருக்க வேண்டும். அதுபோன்ற நிலை இருக்குமேயானால், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய பார்வைக்கு எடுத்துச்சென்று, தகுதிக்கேற்ப அது தரம் உயர்த்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, **என்று சொன்னதையும், நான் இப்போது சொன்னதையும்கூட அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20-2-2014) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-19 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

26. அம்பத்தூர் பால் உற்பத்தி நிலையத்தில் ஒட்டுமொத்த அடிப்படையில் நாளொன்றுக்கு 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பனிக்கூழ் தொழிற்சாலையின் கட்டுமானம், வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் சோதனை மற்றும் துவக்குதல் பணிகளை திருவாளர்கள் தேசிய பால் வளர்ச்சி வாரியத்திற்கு வழங்குவது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 3-12-2013 ஆம் நாளிட்ட 446 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

27. ஈரோட்டில் ஒட்டுமொத்த அடிப்படையில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கால்நடை தீவனத் தொழிற்சாலையின் கட்டுமானம், வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் சோதனை மற்றும் துவக்குதல் பணிகளை திருவாளர்கள் தேசிய பால் வளர்ச்சி வாரியத்திற்கு வழங்குவது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 3-12-2013 ஆம் நாளிட்ட 447 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

28. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட சென்னையில் உள்ள ஐந்து பாரம்பரிய நீதிமன்ற கட்டடங்களை பாதுகாத்து சீரமைத்திடும் பணியினை புதுதில்லியில் உள்ள இந்திய தேசிய கலை, பண்பாட்டு பாரம்பரிய அறக்கட்டளைக்கு வழங்குவது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 21-1-2014 ஆம் நாளிட்ட 17 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

29. பெரம்பலூரில் ஒட்டுமொத்த அடிப்படையில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு உடைய புதிய பால் பண்ணை அமைக்கும் பணியினை திருவாளர்கள் தேசிய பால் வளர்ச்சி வாரியத்திற்கு வழங்குவது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 21-1-2014 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட

*அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*30. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*31. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*32. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்கு அறிக்கையுடன் தணிக்கை அறிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 105(2) மற்றும் 104(4) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*33. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தணிக்கை அறிக்கை. [1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*16. மனுக்கள் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கை. (2013-2014)*

*17. மனுக்கள் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை. (2013-2014)*

*18. மனுக்கள் குழுவின் முப்பத்து எட்டாவது அறிக்கை. (2013-2014)*

*19. மனுக்கள் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2013-2014)*

---